கல்கி



ஜய ஜய சங்கர

ALKI 6.5.1962

30 காசு


சுபகிருது, சித்திரை 23

கல்கி

மே, 6, 1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 40

சுமை உயர்கிறது!

பாரதத்தின் நிதி அமைச்சர் திரு மொரார்ஜி தேசாய் இந்த ஆண்டு 71.7 கோடி ரூபாய்க்குப் புது வரிகள் போட்டிருக்கிறார்; இதில் 44 கோடி ரூபாய்க்கு மறைமுக வரிகள்; 27 கோடி ரூபாய்க்கு நேர்முக வரிகள்.

மறைமுக வரியானாலும், நேர்முக வரியானாலும் இறுதியில் அவற்றின் சுமை யெல்லாம் பொது மக்கள் தலையில்தான் இறங்கும். அடிமட்டத்திலுள்ள மக்களுடன் மத்தியதர வகுப்பினர்களும் சேர்ந்து இனி கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும். ஏனெனில் மத்தியதர வகுப்பினர் வாங்கியே தீரவேண்டிய பல்வேறு பொருள்கள்மீது வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏற்கெனவே உயர்ந்துள்ள விலைவாசிகள் மேலும் உயரும்.

தொழில் வளர்ச்சிக்கு முதல் வேண்டும். அது சேமிப்புச் செல்வத்திலிருந்தே தோன்ற வேண்டும். சேமிப்பு செய்ய முடிந்தவர்கள் இரண்டு வர்க்கத்தினர்கள் தாம் — வசதியுள்ள தனி நபர்களும், தொழில் ஸ்தாபனங்களின் உரிமையாளர்களும். இவ்விரு வர்க்கத்தினர் மீதும் இப்போது புது வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. தொழில் ஸ்தாபனங்கள் இதுவரையில் லாபத்தில் 45 சத விகிதம் வரி செலுத்தி வருகின்றன. இப்போது இதை 50 சத விகிதமாக அமைச்சர் உயர்த்தி யிருக்கிறார். இதன் பலன் என்னவென்றால் ஒவ்வொரு கம்பெனியின் லாபத்திலும் சர்க்கார் பங்கு சரிபாதி ஆகி விடுகிறது. எஞ்சிய பாதியிலிருந்துதான் பங்குதாரர்களுக்கு டிவிடெண்டு கொடுத்து, தொழில் அபிவிருத்திக்கும் நிதி ஒதுக்கிக் கொள்ள வேண்டும். தொழில் வளர்ச்சி வேகமாக நடைபெற வேண்டும் என்று ஒருபுறம் கோஷம்; திறமையுடன் நிலைமை யைச் சமாளித்து முன்னுக்கு வந்தால், புது வரிகள் — பந்தயத்தில் ஓடிக்கொண் டிருக்கும்போது காலை ஒடித்து விடுவதுபோல்.

தனிப்பட்டவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. மத்தியதர, உயர்தர வருமானம் உள்ளவர்கள் மட்டும்தான் எத்தனையோ கஷ்டங்களுக்கு இடையில் சிறிது சேமிப்பு செய்யக் கூடியவர்கள். இப்போது மறைமுக வரிக்குப் பொறுக்கியுள்ள பொருள்க ளெல்லாம் இந்த வர்க்கத்தினர்கள் உபயோகிப்பவை. இப்பொருள்களின் விலை உயர்ந் தால், இவர்கள் கையிலுள்ளதைச் செலவழிக்கத்தான் சரியாக இருக்குமே தவிர, மிச்சம் பிடிக்க முடியாது. எவ்வகையிலும் சேமிப்பை வளர்ப்பது என்ற நோக்கம் நிறைவேறாது.

ஏற்றுமதிக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனால் எவ்வளவுக்கு ஏற்றுமதி பெருகும் என்று சொல்லுவதற்கில்லை. அடக்க விலையும், உற்பத்தி விலையும் குறைவாக இருந்தால் மட்டுமே வெளிநாட்டு வியாபாரம் விருத்தியடையும். ரயில்வே கட்டண உயர்வு காரணமாகவும், மின்சாரம், நிலக்கரி முதலியவை போதிய அளவு கிடைக்காத காரணத்தாலும், அத்தியாவசியமான பொருள்களையும் கூட இறக்குமதி செய்ய முடியாத காரணத்தாலும் நமது நாட்டு உற்பத்திப் பொருள்கள் விலை உயர்ந்தே உள்ளன. இதை நிவர்த்தி செய்ய பட்ஜெட்டில் எவ்வித யோசனையும் காணப்படவில்லை.

பண வீக்கத்தைக் குறைக்க அதிக வரி விதிக்க வேண்டியதில்லை. நாசிக் அச்சகத் தில் நோட்டு அச்சடித்துத் தாராளமாக வினியோகிப்பதைக் குறைத்துக் கொண்டால் போதும். உற்பத்தியைப் பெருக்க வகை செய்தால் போதும். இதைச் செய்ய அரசாங்கம் முன் வரவில்லை. இந்தப் பட்ஜெட்டில்கூட நிதிப் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்ய இந்த

ஆண்டுக்கு 90 கோடி ரூபாய் வரையில் நோட்டுக்கள் அச்சடித்துத்தான் வழங்கப்போகிறார்கள்.

உண்மையில் இந்த வரிகள் 'அவசியமானவை'யோ, 'தவிர்க்க முடியாதவை'யோ அல்ல. போதிய சிந்தனையின்றி வாக்காளர்கள் ''அங்கீகாரம்'' அளித்துவிட்ட தவறான கொள்கைகளின் தவிர்க்க முடியாத விளைவுகளே இவை. ஆனால் இவ்விளைவுகளையும், இவற்றைப் போல் ஏற்படக்கூடிய இவ்விளைவுகளையும் தவிர்க்கக் கூடிய வழி ஒன்று உண்டு. காங்கிரஸ் கட்சியினர் கூறும் ஏமாற்று வார்த்தைகளை இனியாகிலும் நம்புவதில்லை என்று மக்கள் உறுதி செய்து கொள்வதே அது.

அரசாங்கம் தொழில் நடத்தினால்......

அரசாங்கத்தின் தொழில் அரசு புரிதல்; வியாபாரம் அல்ல. தொழில் நடத்த வேண்டியது மக்கள்; அரசாங்கம் அல்ல. இந்த நியதியை மீறினால் இரண்டு விதத்தில் நாட்டுக்கு நஷ்டம். தங்களுடைய வரம்பைத் தாண்டிப் போய், செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறுவதால் நிர்வாகத்தில் ஊழல் மலிந்து ஏற்படும் நஷ்டம் ஒன்று. தங்களுக்குத் தெரியாத துறையில் பிரவேசித்துக் காசைக் கரியாக்கி நாட்டுக்கு ஏற்படுத்தும் நஷ்டம் இரண்டாவது.

இது சுதந்திரக் கட்சியின் வாதம். காங்கிரஸ் கட்சி இதை ஏற்றுக் கொள்ளவில்லை. மக்களின் சார்பில் அரசாங்கம் தொழில் நடத்த வேண்டும்; அப்போது தான் மக்களுக்குச் சுபிட்சம் உண்டாகும் என்று சொல்லி மக்களை ஏமாற்றி வோட்டுக்களைப் பெற்றிருக்கிறது.

உண்மையை மூடி மறைத்து வைக்க முடியாது. அரசாங்கமே வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் இந்த நஷ்டத்தைப் பறைசாற்றுகின்றன.

அரசாங்கம் தனது நேரடிப் பொறுப்பில் நடத்தி வரும் 73 பெரும் ஸ்தாபனங்களில் 31-3-1961 வரையில் முதலீடு செய்யப்பட்ட மூலதனம் 605 கோடி ரூபாய். இந்த முதலீட்டுத் தொகையிலிருந்து கிடைத்த லாபம் 2.01 கோடி ரூபாய். அதாவது 100 ரூபாய் முதலீட்டுக்கு 33 பைசா! (ஒரு வருஷத்துக்கு.)

1961–62ம் ஆண்டில், ஏற்கனவே போட்டிருந்த 605 கோடி மூலதனம் போதாது என்று 104 கோடி ரூபாய் அதிகப்படியாக முதலீடு செய்யப்பட்டது. ஆக 31-3-62 வரையில் முதலீடு செய்யப்பட்ட மொத்த மூலதனம் 709 கோடி ரூபாய். இதற்கு இந்த ஆண்டில் கிடைத்த மொத்த லாபம் 1.95 கோடி ரூபாய். முந்திய ஆண்டைவிட ஆறு லட்சம் ரூபாய் குறைவு. அதாவது 100 ரூபாய் முதலீட்டுக்கு 26 நயா பைசாதான் லாபம்.

இந்த லட்சணத்தில் நிதி அமைச்சர் மொரார்ஜிதேசாய் நடப்பு ஆண்டுக்குப் புதிதாக 160 கோடி ரூபாய் சர்க்கார் தொழில்களில் முதலீடு செய்யப்படும் என்று தெரிவித்திருக்கிறார். இப்படி அதிகரிக்கப்பட்ட முதலீட்டிலிருந்து எவ்வளவு லாபம் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கிறீர்கள்? மூன்று கோடி கிடைக்கலாம் என்று அமைச்சர் கூறுகிறார். அதாவது 100 ரூபாய்க்கு 36 நயா பைசா கிடைக்கும் என்பது அவருடைய திட்டம்.


லட்சம், கோடி என்று கணக்குச் சொல்லப்படுகிறதே, தலை சுற்றுகிறதே என்று இலேசாக எண்ணிவிட வேண்டாம். இவ்வளவு கோடிகளும் லட்சங்களும் உங்கள் பணம். நாட்டின் பொதுச் சொத்து. உங்கள் மாடும் உங்கள் துணியும் எப்படி உங்கள் சொத்தோ அதே போல் இந்த 73 பெரும் தொழில்களும் உங்கள் சொத்து. அதில்தான் இப்படி நிர்வாகம் நடந்து வருகிறது.


அரசு புரியும் கட்சியினர் உங்கள் அனுமதி பெற்றுத்தானே ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கின்றனர்! அவர்கள் செய்யும் தொழில் நிர்வாகத்தின் லட்சணத்தை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டாமா? மீண்டும் ஒரு முறை மேலே கொடுக்கப்பட்டுள்ள கணக்கைப் படித்துப் பாருங்கள். உங்கள் பணம் எப்படி வீணடிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இது உங்கள் கடமை.

ஒரு வியாபாரத்தில் நூறு ரூபாய் முதலீடு செய்து முப்பத்தாறு நயா பைசா லாபம் கிடைத்தால் அதைக் கண்டு நீங்கள் சந்தோஷப்படுவீர்களா? அதை நடத்தும் நிர்வாகஸ்தர்களைத் தட்டிக் கொடுப்பீர்களா? தனியார்த் துறையில் ஒரு தொழில் இந்தமாதிரி நடத்தப்படுமா? நடத்தப்பட்டால் அதைத் தொடர்ந்து நடக்க விடுவார்களா?

இப்போதுள்ள நிலையில் தொழில் நிர்வாகத்துக்குப் பெயர்பெற்ற சிலரைக் கொண்டு உடனடியாகச் சர்க்கார்த் தொழில்களைப் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகும்.

திட்டத்தின் அழகு ஒருபுறம்-அதனால் விளையும் வேதனை மறுபுறம்





ஜய ஜய சங்கர

வேனிற் காலம் உக்கிரமாகிக் கொண்டு வருகிறது. ஜீவநதிகளைத் திருப்பிவிட்டு வறட்சியைத் தீர்ப்பது பற்றி ஆலோசனைகள் நடைபெறுகின்றன. இது பௌதிக மட்டத்தில் காணும் கோடை காலம்.

மக்களின் ஆன்மீக வாழ்விலும் வேனில் வலுப்பெற்றுத்தான் வருகிறது. அவர்களுடைய இதய வறட்சியைத் தீர்க்கும் ஜீவநதிகளும் இல்லாமல்போகவில்லை. வேனில் காலத்தில் வைசாக சுக்கில பஞ்சமியில் இம்மண்ணில் தோன்றிய ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்களின் பாவனமான சரிதம் அத்தகைய அருட்பூம்புனல்களில் ஒன்றேயாகும். அந்தத் திவ்விய தீர்த்தத்தை இந்த ஆண்டு சங்கர ஜயந்தியை ஒட்டி வரும் மே 13-ந் தேதி கல்கி இதழிலிருந்து வாசகர்களுக்கு வழங்க முன்வருகிறோம். நமது ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஸ்ரீ ரா. கணபதி எழுதியுள்ள இத் தொடர் **ஜய ஜய சங்கர** என்ற தலைப்பில் வெளியாகும்.

'வாழ்க்கையின் வெம்மையைத்தணிப்பது உனது சரிதாமுத நதி. என்னுடைய பாவங்களையெல்லாம் அடித்துச் செல்லும் நீர்ப் பெருக்கு அது. அதனை எனது மனத்தில் மடுவாகத் தேக்கிக் கொள்கிறேன். அந்தச் சிவானந்த வெள்ளம் என்றும் என் உள்ளத்தே நிறைந்து நிற்கட்டும். உன்னுடைய ரசமான சரிதக் கடலை அறிவென்னும் சகடை மூலம் வாக்கெனும் குடத்தில் நிரப்பிக் காவியக் கால்வாய்களில் இறைத்துக் கொள்கிறேன். அதன் மூலம் என் ஆன்மாவில் பக்திப் பயிரை வளர்த்துக் கொள்ள அருள்வாய்'' என்று மகாதேவனை சம்புவை வேண்டினார் சங்கரர். அதாவது எப்படி வேண்டுதல் செலுத்துவது என்று தெரியாத நமக்காகச் சம்புவே சங்கரராகித் தம்மைத்தாமே வேண்டிக் கொண்டார். சங்கரர் என்ற அந்தக் கருணை நதியின் இனிய நீர்ப்பெருக்கினை அடுத்த இதழிலிருந்து வாசகர்களின் உள்ளத்தில் பாய்ச்சுவதில் பெருமை கொள்கிறோம்.


ஆதி ஆசாரியர்களின் சரிதம் சுவை செறிந்த காவியக் கனியாகும். அறிஞர்களில் பேரறிஞராகவும், பக்தர்களுள் பரம பக்தராகவும், கர்ம யோகியரில் உத்தமயோகியாகவும், ஞானிகளில் மகாஞானியாகவும் திகழ்ந்த அந்த வைரமணி அன்பு ஒளியும், அருட் பிரகாசமும், தியாகத் தேசும் சிந்தி நம் இதயத்துக்குள் மிகவும் இதமாகப் புகுந்து சுடர் விடுகிறது. அறிவுக்கு விருந்தளிக்கும் நிகழ்ச்சிகளும், அறிவினால் பகுக்க முடியாத அற்புதங்களும், அவற்றைக் காட்டிலும் முக்கியமாக ஆத்மாவைத் தொடும் கருணைப்பாங்கும் அடர்ந்து விளங்கும் வாழ்க்கை ஸ்ரீ ஆசாரியருடையது. பாவம் தீர்க்கும் அந்தப் பாவன சரிதத்தை வித விதமாக ரசித்துப் பற்பல அடியார்கள் சங்கர விஜய காப்பியங்கள் இயற்றி உள்ளனர். ஆனந்தகிரீய சங்கர விஜயம், வியாஸாசலீயம், கோவிந்தநாதீயம் எனப்படும் கேரளீயம், மாதவீயம், சித்விலாஸீயம், சங்கராப்யுதயம் ஆகியன இவற்றில் சில. ஸ்ரீ ராமபத்திர தீக்ஷிதர் இயற்றிய பதஞ்சலி சரித்திரத்தில் ஆசாரியர்களின் குரு, பரமகுரு இவர்களின் வரலாற்றோடு, ஆசாரியர்களின் சரிதமும் சுருக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. மேலும், சிவரஹஸ்யம் என்ற இதிஹாசத்திலும், மார்க்கண்டேய ஸம்ஹிதையிலும் சங்கரரின் வாழ்க்கை வரலாறு கூறப்படுகிறது. இவை ஒவ்வொன்றுக்குள்ளும் ஓரளவு கதாபேதம் இருக்கும். 'எல்லாவற்றிலும் ஒரே விதமாகச் சொல்லியிருப்பவைகளைச் சத்தியம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அதிகமாகச் சொல்லப்பட்டவைகளில் நல்லவைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். விரோதம் இல்லாதவரை எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளலாம்' என்பது நமது காஞ்சி காமகோடி ஜகத்குருஅவர்களின் அருள் வாக்கு. இக்கருத்தினை ஒட்டியே அவர்கள் 1932-ம் ஆண்டில் சென்னைக்கு எழுந்தருளிய போது ஸ்ரீ சங்கர சரிதத்தை ஓர் உபந்நியாசத் தொடராகத் திருவாய் மலர்ந்தார்கள். பெரும்பாலும் அதனைப் பின்பற்றியே **ஜய ஜய சங்கர** எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ என். ராமேசன் அவர்கள் எழுதிய 'ஸ்ரீ சங்கராசார்யா' என்னும் ஆங்கில நூலும் இந்தத் தொடருக்கு உறுதுணையாக இருந்திருக்கிறது. சில கர்ண பரம்பரைக் கதைகளும் இந்தத் தொடரில் இடம் பெற்றுள்ளன.

தேசிய ஐக்கியத்தைப் பற்றியும், ஒற்றுமையைப் பற்றியும் வெகுவாகப் பேசப்படும் இன்று இந்நாட்டை ஆன்மஉணர்வின் மூலம் ஒன்றுக்கிய ஆசாரியரின் சரிதம், விசேஷ முக்கியத்துவம் பெறு

கிறது. 'ஒன்றே பரம்பொருள்; எல்லாம் அந்தப் பரம்பொருளே. 'நான்' என்னும் பொருளும், அப்பரம்பொருளைத் தவிர வேறில்லை' என்ற அவரது அத்வைதம் சகலஜீவராசிகளையும் ஒன்றாக இணைக்கும் அன்பு மதமாகும். எனினும் இந்த ஒற்றுமையைக் கூற வந்த ஆசாரியரைப் பற்றியே பல சர்ச்சைகள் எழுந்துள்ளன. அவற்றில் ஒன்று அவரது காலத்தைப் பற்றியது.

ஸ்ரீ ஆசாரியரின் காலத்தை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்துகி.பி.எட்டாம் நூற்றாண்டு வரை பலர் பலவிதமாகக் கணக்கிட்டுள்ளார்கள். கி. மு. முதலாம் நூற்றாண்டே அவரது காலம் என்று ஒருவாறு உறுதி கொள்ள நிறைய ஆதாரங்கள் உள்ளன. 'காலம் எதுவானால் என்ன? நமக்கு அநுக்கிரகம்தான் முக்கியம்' என்கிறார்கள் ஸ்ரீ காமகோடி பெரியவர்கள். சத்தியமும், சாந்தமும், சீலமும் நித்திய வஸ்துக்கள். தங்கள் தொன்மையினாலன்றி, என்றும் மாறாத் தன்மையாலேயே அவை போற்றப் பெறுகின்றன. எனவே இந்தத் தத்துவங்களின் உருவகமாக வாழ்ந்து காலத்தைக் கடந்த குருவரரின் கதையில் மட்டுமே மனத்தைச் செலுத்தி மாண்படைவோமாக.

இராமாயணத்தின் தனிச் சிறப்பு காவிய நாயகனான இராம பிரானே அதனை லவ குசர் கானம் செய்யும்போது செவிமடுத்து அங்கீகரித்ததுதான். அத்தகைய மாபெரும் பேறு இந்த **ஜய ஜய சங்கர** நூலுக்கும் கிட்டியது கல்கி பத்திரிகையின் பாக்கியமே. அம்மையப்பனின் அவதாரம் ஆதி சங்கரர் என்றால், அந்த ஆதி ஆசாரியரின் புனர் அவதாரமே ஸ்ரீ காமகோடி பீடத்தை இன்று அலங்கரிக்கும் யதிகவரர்கள். அவர்களுக்கு எண்ணரிய அலுவல்கள் இருந்த போதிலும் இந்த நூலின் பிரதியைத் தமக்கே உரிய அளப்பரிய கருணையுடன் கண் கூர்ந்து பரிசோதித்து, ஆங்காங்கு செப்பங்கள் செய்து, அங்கீகரித்துத் திருவருள் செய்தார்கள். அந்தத் தண்ணருளை மீண்டும் மீண்டும் வணங்கி, இந்தப் புண்ணிய சரிதத்தைத் தொடங்குகிறோம்.



என்ன சேதி?

ஒரு நல்ல அறிகுறி

சென்ற வாரம் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த திரு எஸ்.என். சதுர்வேதி என்ற மக்கட் சபை அங்கத்தினர் ஹிந்தி மொழியாளர்கள் ''ஹிந்தியில் பேசுங்கள்'' ''ஹிந்தியில் பேசுங்கள்!'' என்று கூச்சலிட்டு வற்புறுத்தியும் ஆங்கிலத்திலேயே பேசினாராம்.

அதுமட்டுமின்றி, ''நான் உத்தரப் பிரதேசத்தினின்று வருபவனாயினும் ஆங்கிலத்திலேயே பேசுகிறேன். நாம் (ஹிந்தி மொழியாளர்கள்) மற்றவர்கள் மீது ஹிந்தி திணிக்க முயல்கிறோம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தக் கூடாது. ஹிந்தி பேசப் படாத பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள், தாங்களாகவேவிரும்பி ஹிந்தியில் பேசும்படிசெய்ய வேண்டும். அப்போதுதான் ஹிந்தி செழிக்கும்!'' என்று கூறியிருக்கிறார். இந்த உணர்ச்சி மற்ற ஹிந்தி மொழி பேசுபவர்களுக்கும் ஏற்படுமாயின் தேசத்தின் ஒற்றுமை காப்பாற்றப்படும்!

வெளியிலும் கெட்ட பெயர்

தொழிலதிபர் திரு ஏ. எம். எம். அருணாசலம் செட்டியார் அவர்கள், அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு வந்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் கவனிக்கத் தக்கவையாகும்.

இந்தியாவின் வரிக் கொள்கை மிகக் கடுமையாக இருப்பதுடன் அன்றாட நடைமுறையிலும் சர்க்காரின் தலையீடு மிக அதிகமாக இருப்பதால் அமெரிக்கத் தொழிலதிபர்கள், இந்திய நாட்டில் முதலீடு செய்யத் தயங்குகிறார்கள் என்று கூறுகிறார். இந்திய சர்க்கார், அமெரிக்கத் தொழிலதிபர்களை நம் நாட்டில் முதலீடு செய்யும்படி கேட்டுக் கொண்டு, அவர்களுக்கு இன்ன இன்ன வசதிகள் சலுகைகள் தரப்படும் என்று கூறி அறிக்கைகளும் குட்டிப் புத்தகங்களும் வெளியிடுகிறார்கள். ஆனால் இவைகளை நடைமுறையில் அமுலுக்குக் கொண்டு வருவதில்லை என்று அமெரிக்கத் தொழிலதிபர்கள் குறை கூறுகிறார்கள் என்கிறார் திரு அருணாசலம்.

தென் அமெரிக்க நாடுகள் முன்னேற்றமடையாத நாடுகள் என்று பெயர். நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சைக்கிள்கள், தையல் மிஷின்கள் போன்றவைகளை அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்குமா என்று பார்த்துவிட்டு வந்த திரு செட்டியார் அவர்கள், ''சாத்தியமே இல்லை!'' என்கிறார். அங்கு சில நாடுகள் தாமே சைக்கிள்கள் உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டன என்கிறார். இப்படி வெளி நாட்டு ஏற்றுமதி வர்த்தகத்துக்குச் சாத்தியமில்லாமல் போய்க் கொண்டிருந்தால் நமது சர்க்கார் வெளி நாடுகளில் வாங்கும் கடன்களை அடைப்பதற்கு என்ன வழி?

தமிழ் கூறும் நல்லுலகம்

தில்லி தமிழ்ச் சங்கத்தினர் இந்த ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு விழாவை என்றுமில்லாத சிறப்புக்களுடன் கொண்டாடினர்.


தற்போது மகாராஷ்டிர கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் சுப்பராயன், பீகார் கவர்னராக நியமனம் பெற்றிருக்கும் திரு அனந்தசயனம் ஐயங்கார், இந்திய சுரங்கத் தொழில் அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் திரு சி. சுப்பிரமணியம், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வந்து பங்கு கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.


விழாவுக்கு வந்த அனைவரையும் திரு சாலை இளந்திரையன் வரவேற்றுப் பேசினார். 'புது வருடப் பலன்' என்ற ஓரங்க நாடகமும் குமாரி ஜெயா சங்கரனின் பரதநாட்டியமும் நடந்தன. சொற்பொழிவுகள் முடிந்ததும் மனோன்மணீய நாடகத்தை இசைவடிவில் அமைத்த ''செந்தமிழ்ச் செல்வி'' என்னும் இசைச் சித்திரம் ஒன்று திரு சொக்கு சுப்பிரமணியன் குழுவினரால் நடத்தப் பெற்றது. மணி மூர்த்தி எழுதிய 'இதுதான் உலகம்' என்ற நாடகமும் மிகச் சிறப்பாக நடந்தது.


★

தில்லி பஜனை சமாஜத்தினரால் தில்லியில் ஸ்ரீராம நவமி உற்சவம் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கரோல்பாக்கில் வழக்கப்படி சீதா கல்யாண வைபவத்துடன் விழா நடத்தப்பட்டது. மத்திய அரசாங்கச் சிப்பந்திகளின் புதிய காலனியான ஆண்ட்ரூஸ் கஞ்சிலும் பஜனை சமாஜத்தினர் ஸ்ரீ ராம நவமி உற்சவத்தை இந்த ஆண்டு கொண்டாடினர். காலையில் சகஸ்ரநாம அர்ச்சனையும் பாராயணமும், கர்நாடகப் பத்ததியில் பஜனையும், பிரம்மஸ்ரீ கே. ஆர். லக்ஷ்மண சாஸ்திரிகளால் ஸ்ரீராம ஜனன உபன்யாசமும் நடைபெற்றன. பிற்பகல் ஸ்ரீ எம். ஆர். நாகசுப்பிரமணியம் அவர்களின் சீதா கல்யாண உபன்யாசத்துடனும், ஸ்ரீமதி கோமதி விசுவநாதன் குழுவினரின் இசைக் கச்சேரியுடனும் விழா இனிது முடிந்தது.

நிதி மந்திரியின் பயாஸ்கோப் வித்தை







PHILLIPS பிலிப்ஸ் ஸைக்கிள்

உங்களுக்காகவே தயாரிக்கப்படுகிறது

எழிலும், நாகரீகத் தோற்றமும் கொண்ட பளபளக்கும் பிலிப்ஸ் ஸைக்கிள்கள், உங்களைப்போன்ற இன்றைய சுறுசுறுப்புள்ள இளைஞர்களுக்காக பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படுகின்றன. உயர்ந்த ரக எஃகினாலான இந்த ஸைக்கிள்கள், உறுதியும், எவ்வித கடினமான பணிகளை சமாளிக்க வல்ல சக்தியும் வாய்ந்தவை.

70 வருட காலமாய் உலகெங்கும் புகழ்பெற்ற பிலிப்ஸ் ஸைக்கிள்கள், டி. ஐ. ஸைக்கிள்ஸாரின் மிக்க நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலையில், நுட்பமான முறையில் இப்பொழுது தயாரிக்கப்படுகின்றன.

PHILLIPS

டி. ஐ ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ்

JWT/TIC-PH-1603a

இசைஞானிக்கு இருநூறாண்டு

டாக்டர் வே. ராகவன்

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன் பத்திரிகைகளில் ஒரு வேண்டுகோள் வெளியாயிற்று. அதில் முப்பதுக்கும் மேலான சங்கீத வித்துவான்களும், விதுஷிகளும் கையெழுத்திட்டிருந்தனர். ஸங்கீத மும்மூர்த்திகளான தியாகய்ய சுவாமிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாம சாஸ்திரிகள் மூவரும் அவதரித்த திருவாரூர் க்ஷேத்திரத்தில் இம்மூவருக்கும் ஞாபகார்த்தமாகச் சின்னங்கள் நிறுவ ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் விழாக்கள் கொண்டாட வேண்டும் என்றும் வேண்டுகோள் பிரசுரமாயிற்று.

முக்கியமாக, திருவாரூரில் இம் மூவரும் பிறந்த வீடுகளை வாங்கி நினைவு மண்டபங்களாகச் செய்து, ஆண்டுதோறும் இவர்களுடைய ஜன்ம தினங்களில் இவர்களுடைய ஜயந்தி விழாக்களைக் கொண்டாட வேண்டுமென்று தீர்மானித்துத் திருவாரூரில் நிறுவப்பட்ட திரிமூர்த்தி ஸபைக்கு உதவியாகச் சென்னையில் நிர்வாகக் குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டது. மேற்படி நோக்கத்தோடு இந்தக் குழு நன்கொடைகள் வாயிலாகவும், குறிப்பாக ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் கல்கத்தா, பம்பாய், திருவாரூர், பங்களூர் முதலிய இடங்களில் செய்த கச்சேரிகளின் மூலமாகவும் நிதி சேர்த்தது.



சியாம சாஸ்திரி

முதலில் திருவாரூர் மேட்டுத் தெருவில் உள்ள ஸ்ரீ சியாம சாஸ்திரிகள் பிறந்த வீடு சுமார் 4000 ரூபாய்க்கு வாங்கப் பட்டது. பின்னர், தீக்ஷிதர் ஜனித்த மனைக்கட்டில் சுமார் ரூ. 30,000 செலவில் மண்டபம் கட்டப்பட்டது. புதுத் தெருவில் உள்ள தியாகையர் வீட்டையும் கூடிய சீக்கிரம் வாங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

மும்மூர்த்திகளின் பிறப்பகங்களில் இவர்கள் ஜயந்தி விழாக்களும், பஜனைகளும், சங்கீர்த்தனங்களும் நடத்துவதோடு, அநுபவம் நிறைந்த வித்துவான்களின் ஒத்துழைப்புடன் மும்மூர்த்தி சங்கீத குருகுலமும் உயர்ந்த முறையில் திருவாரூரிலேயே ஸ்தாபிக்கப்பட்டால் அது அவர்களுக்குச் சாசுவதமானதொரு ஞாபகச் சின்னமாகும்.

ஆண்டுதோறும் ஏப்ரல்—மே மாதங்களில் திருவாரூரில் நடந்து வரும் கர்நாடக சங்கீத மும்மூர்த்தி ஜன்மஜயந்தி விழாவுக்கு இவ்வாண்டு தனித்ததொரு சிறப்பு. வருகிற மே மாதம் 5-ந் தேதியன்று கொண்டாடப்பட விருக்கும் ஸ்ரீ சியாம சாஸ்திரிகளின் ஜன்ம தினம் அவரது பிறப்பின் இருநூறுவது ஆண்டு விழாவாகும். அதையொட்டி இவ்வருஷம் திருவாரூரில் சங்கீத வித்துவான்கள், விதுஷிகள், சென்னை சங்கீத நாடக சங்கம், அகில இந்திய ரேடியோ முதலிய எல்லாருடைய ஒத்துழைப்புடனும் ஸ்ரீசியாம சாஸ்திரிகள் இருநூறுவது ஆண்டு விழா விமரிசையாக நடக்கப் போகிறது. 5-ந் தேதி காலை தொடக்க விழா. சாஸ்திரிகளின் சிறப்புபற்றிச் சொற்பொழிவுகள் நடைபெறும்; மாலை, இரவு, மறு இரண்டு நாட்கள் ஸ்ரீமதிகள் பிருந்தா—முக்தா, டி. கே. பட்டம்மாள் ஆகியோரும் மற்றும் பல இளம் வித்துவான்களும், விதுஷிகளும் சியாம சாஸ்திரி உருப்படிகளைக்கொண்டே கச்சேரி செய்வார்கள், விழாவையொட்டி சாஸ்திரிகளின் கிருதிகளை ஸ்வரத்துடன் அச்சிட்டு ஞாபகார்த்த வெளியீடாகக் கொண்டு வர ஏற்பாடு செய்து வருகிறார்கள் சிலர்.

மும்மூர்த்திகளில் தியாகய்யர் போலவோ, தீக்ஷிதர் போலவோ கணக்கில்லா உருப்படிகளை சாஸ்திரிகள் இயற்றவில்லை. இரண்டு மூன்று நூறுகளுக்கும் குறைவாகவே உருப்படிகள் கவனம் செய்திருக்கிறார். எனினும் அவற்றின் சங்கீத, சாகித்தியச் சிறப்பாலேயே இவர் மும்மூர்த்திகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். இவருடைய முழுப்

பெயர் வேங்கட சுப்பிரமணியர்; வட தேசத்து வடமர் என்ற தமிழ்ப் பிராமண மரபைச் சேர்ந்தவர்; காஞ்சியில் காமாக்ஷிதேவியைப் பூஜை செய்து வரும் குடும்பங்களைச் சேர்ந்தவர். காஞ்சிப் பிரதேசத்தில் முகம்மதியக் கலவரம் ஏற்பட்டபோது பங்காரு காமாக்ஷி என்ற உத்ஸவ மூர்த்தியுடன் இக்குடும்பத்தினர் தெற்கே தஞ்சை மன்னர்களின் பாதுகாப்பை நாடி வந்து. தஞ்சை மேல வீதிக்குப் போவதற்கு முன் சுமார் முப்பது ஆண்டுகள் திருவாரூரில் அம்பாளுடன் தங்கி இருந்தனர். அப்போது திருவாரூரில் இக்குடும்பத்தில் கி. பி. 1762, சித்திரை மாதம் கிருத்திகா நக்ஷத்திரத்தில் தோன்றியவர் சியாம சாஸ்திரிகள்.



''என்னடியம்மா! உங்க பிள்ளை கடைசியிலே நர்ஸைக் கல்யாணம் பண்ணிண்டுட்டானுமே?''

'ஆமாம்! அடிக்கடி அவனுக்கு வியாதி வந்துடறது. என்ன பண்ணறது?''

சாஸ்திரிகளின் உருப்படிகள் மிகவும் சொற்பமாகவே நடைமுறையில் கையாளப்பட்டு வருகின்றன. இவை பெரும்பாலும் எளிய, தெலுங்கு மொழியில் உள்ளன. சாஸ்திரிகள் முதலில் சம்ஸ்கிருதத்தில் எழுத ஆரம்பித்து, பின்னர் தான் தெலுங்கில் இயற்றத் தொடங்கினார். தமிழிலும் இரண்டொரு பாட்டுக்களை (தருணமீதம்மா—கௌளிபந்து) யாத்திருக்கிறார். அவர் பாட்டுக்கள் உருக்கமான பாவத்துடன் அம்பாளை நேரே பார்த்துப் பேசுவதுபோல் எளிய நடையில் அமைந்திருக்கின்றன. அவை ரக்தி ராகங்களில் பாடப் பட்டவை; அபூர்வ ராகங்களான மாஞ்சி, கல்கடா, சிந்தாமணி, பரசு முதலியவற்றில் சிறந்த லட்சியங்களைச் சிருஷ்டித்திருக்கிறார் சாஸ்திரிகள். ஆனந்த பைரவி இவரது சொத்து. ஸ்வரஜதி செய்வதில் கைதேர்ந்தவர்; இவரது பைரவி ஸ்வரஜதி அழியாப் புகழோடு என்றும் நிலைத்து நிற்கும். மிச்ரசாபு தாளம், அதிக அனுகத எடுப்புக்கள், பிருகு, 'ஒதுக்கல் - சதுக்கல்', ஸ்வர அக்ஷரப் பொருத்தம், இவையெல்லாம் சாஸ்திரிகளின் உருப்படிகளுக்குத் தனிப்பட்டதோர் அழகையும் சுக பாவத்தையும் தருகின்றன. இவற்றின் நடையழகு தனிப்பட்டது; ராக பாவம், லய விந்யாசத்தின் சுகம், எளிய இனிய — சொற்கள் இவற்றின் ஸாரம்போல் இவருடைய கிருதிகள் துலங்கும். இதே அழகையும் சிறப்பையும் பெற்றவை 'ஜனனி நிநுவினு', 'ஏமானிகே' போன்ற கீர்த்தனைகள்; இந்த ரத்தினங்களைக் கொடுத்தவர் இவரது குமாரர் சுப்பராய சாஸ்திரிகளாவார். சியாம சாஸ்திரிகளின் பேரனை அண்ணுசாமி சாஸ்திரிகளும் சாஹித்ய கர்த்தாவாக இருந்திருக்கிறார்.

உலக சங்கீத சரித்திரத்திலேயே ஏறக்குறைய ஒரே காலத்தில் ஒரே இடத்தில் மூன்று பெரும் வாக்கேயகாரர்கள் தோன்றி அக்கலைக்குப் புத்துயிர் அளித்த மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தது கிடையாது. இத்தனிச் சிறப்பு வாய்ந்த திருவாரூர் சங்கீத மும்மூர்த்தி கைங்கரியத்தில் எல்லா வித்துவான்களும், விதுஷிகளும், ரசிகர்களும் கலந்து கொண்டு ஞாபகார்த்தத் திட்டங்கள் யாவற்றையும் நிறைவு செய்வார்களாக.

புகழால் நிறையும் பிர்லா குடும்பம்

எம். எஸ். சிவஸ்வாமி

பாரத நாட்டுத் தொழில் குடும்பங்களில் மிகவும் முக்கியமானது பிர்லா குடும்பம். தொழில் துறையில் இக்குடும்பம் புகுந்து இப்போது நூறாண்டு காலம் ஆகிறது. இந்தக் குடும்பத்தினர் நான்கு தலைமுறையாகத் தொடர்ந்து தொழில் நடத்தி வந்தாலும் தொழில் பண்பு குன்றாது, செழிப்பாக, சிறப்புடன் பணியாற்றி வரும் குடும்பம் இது.

நல்ல தொழிலதிபர்கள் நாட்டின் புகழையும் பொருளையும் வளர்க்கும் செல்வப் பண்ணைகள் என்று சொல்வதுண்டு. புகழாலும் பொருளாலும் சேர்ந்து நிறைகிற தொழிலதிபர்கள் நாட்டின் பெருமையையே உருவாக்குகிறார்கள். அப்படிப் பெருமையை உருவாக்கிப் புகழால் நிறைந்து வரும் பாரத நாட்டுத் தொழில் குடும்பம் ஒன்று அண்மையில் தனது நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது.

நிறைந்தவை நூறு ஆண்டுகள் என்பதோடு அவை புகழும் பெருமையும் நிறைந்தவை என்பதற்காகவும் சேர்த்துப் பாராட்ட வேண்டும்.



சேத் சிவநாராயண் பிர்லா

மலை உச்சிகளில் எங்கோ ஒரு மூலையில் சலசலக்கும் சிற்றோடை போகப் போக விரிவடைந்து பள்ளம் மேடுகளில் விழுந்தெழுந்து சமவெளியை வந்தடையும்போது பெரிய ஜீவநதி ஆகி விடுகிறது. கரை புரண்டு ஓடும் வெள்ளப் பெருக்கை அணை போட்டுத் தடுத்து நீர்ப்பாசனத்துக்கும் மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்திக் கொண்டு பெருவாரியான மக்கள் சுக வாழ்வு நடத்துகின்றனர். அவ்வப்போது தாங்கள் அடையும் நன்மைக்காக அத்தகைய ஜீவநதிகளுக்கு நன்றியும் செலுத்துகின்றனர்.

அது போலவே தொழில் துறையிலும் சமூகப் பொருளாதார வாழ்விலும் பல சிற்றாறுகள் பெருகி ஓடிக் காலப் போக்கில் பிரமிக்கத் தக்க வளர்ச்சி அடைந்து நாட்டுக்கும், மக்களுக்கும் சுபிட்சம் அளித்து வருகின்றன. பெருந்தன்மை வாய்ந்த தொழில் குடும்பங்களைக் காவிரி, கோதாவரி, கங்கை போன்ற ஜீவநதிகளுக்குச் சமமாகச் சொல்ல வேண்டும். அவர்கள் நடத்தும் தொழில் நிறுவனங்களில் வேலை செய்து ஜீவனம் நடத்தும் குடும்பங்கள் கணக்கற்றவை. நாட்டின் வளத்துக்கு அவர்கள் செய்யும் சேவை மகத்தானது.

வர்த்தகமும் தொழிலும் மார்வாரிக் குடும்பங்களில் ரத்தத்திலேயே ஊறியுள்ளது என்று சொல்லுவார்கள். புகழ் பெற்ற ஜி. டி. பிர்லாவின் பாட்டனார் சேத் ஷிவ் நாராயண் பிர்லா தமது இருபத்திரண்டாவது வயதிலேயே பம்பாயில் மார்வாரி பஜார் பகுதியில் ''ஷோபாராம் ஷிவ் நாராயண்'' என்ற பெயரில் ஒரு சிறிய வியாபாரத்தை ஆரம்பித்தார். அது நன்கு சோபிக்கவே சில ஆண்டுகளுக்குப் பின்னர் சில்லறைக் கடை வர்த்தகத்துடன் 'ஷராப்பு'த் தொழிலையும் சேர்த்துக் கொண்டார். அவருக்கு மேலும் பலம் அளிப்பது போல பல்தேவ் தாஸ் பிர்லா மகனாகப் பிறந்ததும், தொழிலின் பெயர் 'ஷிவ் நாராயண் பல்தேவ் தாஸ்' என்று மாறியது. ஆஸ்திக்கு ஒரு மகன் என்று பிறந்த உடனே, குழந்தை மழலை பேச முன்னரே தொழிலைக் கவனிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள் . போதும்! நம்பிக்கை வீண் போகவில்லை. வர்த்தகம் பெருகியது பழைய தொழிலுடன் தங்கம், வெள்ளி இறக்குமதியும் எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதி வர்த்தகமும் இவர்களால் மேற்கொள்ளப்பட்டன.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, தகப்பனும் தனயனும் ஒரே இடத்தில் ஒரே வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று பல்தேவ் தாஸுக்குத் தோன்றியது. லாபகரமாக வர்த்தகம் நடந்தால் போதாது அதன் வளர்ச்சியிலும் கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு கல்கத்தாவில் 'பல்தேவ்தாஸ் ஜுகல் கிஷோர்' என்ற பெயரில் ஒரு கிளை ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. ஏற்கனவே இருந்த வியாபாரத்துடன் பஞ்சு ஏற்றுமதியிலும் துணி இறக்குமதியிலும் இவர்கள் பெரிதும் ஈடுபட்டனர்.


முதல் உலக மகாயுத்தம் ஆரம்பித்ததும், தொழில் வளர்ச்சி நாட்டுக்கு மிகவும் அவசியமானது என்ற புத்துணர்ச்சி பரவலாக எங்கும் தோன்றியது.உற்பத்தித் தொழிலில் இறங்குவதுதான் உசிதம் என்று பிர்லாக்கள் முடிவு செய்தனர். இதன் விளைவாக அவர்கள் ஒரு

சுதந்திரத்துக்குப் பின் நாட்டின் பொருளாதாரம் வேகமாக விருத்தி அடைந்து வருகிறது. இதைப் போலவே, பிர்லா தொழில்களும் அபிவிருத்தி அடைந்து வளர்ந்து வந்திருக்கின்றன. பிர்லா தொழில்களில் 125000 பங்குதாரர்கள் பணம் போட்டிருக்கின்றனர். எல்லாம் நகர்ப்புறங்களில் வசிக்கும் மத்தியதர வர்க்கத்தினர்.

பிர்லா தொழில்களின் வளர்ச்சி

1961, டிசம்பர் 31 தேதியில் காணும் உத்தேச மதிப்பீடுகள்

தொழில் விவரம்	சொத்தின் மதிப்பு	பொருள் விற்பனை மதிப்பு	வேலை செய்யும் ஊழியர்கள்
	(லட்ச ரூபாய் கணக்கில்)		
நூல் வகைகள்			
பருத்தி, நார் வகை	2182.66	4737.00	55700
ரேயான்	3605.07	2861.00	13200
சணல் வகைகள்	694.86	1004.00	11350
கம்பளி வகைகள்	74.60	140.00	1200
மொத்தம்	6557.19	8742.00	81450
காகிதம்	1785.00	1400.00	7200
எஞ்ஜினீரிங்	2531.82	5627.00	28500
ரசாயனம், சிமிட்டி, வனஸ்பதி	1143.59	1690.00	8400
தோட்டத் தொழில்கள்	276.18	369.00	7950
சர்க்கரை	723.12	1589.00	6350
உலோகங்கள்	1496.33	154.00	2200
நிலக்கரி	194.50	172.00	5000
இதர வகைகள்	273.15	336.00	2800
ஆக மொத்தம்	14980.88	20079:00	149850



புது நூற்பு ஆலையை ஆரம்பித்தனர். இதுவே இவர்களுடைய முதல் உற்பத்தித் தொழில் முயற்சி. 'பிர்லா சகோதரர்கள்' என்று பெயரும் மாறியது. இது நிகழ்ந்தது 1918-ல். எனவே, நமக்குப் பிரபலமாகத் தெரிந்த 'பிர்லா பிரதர்ஸ்' லிமிடெட் இன்றைக்கு 42 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது. தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டதும் பழைய வர்த்தகக் கடையையும், ஷராப்புக் கடையையும் மூடி விட்டார்கள்.

சுமார் நாற்பதாண்டு காலத்தில் இவர்களின் வளர்ச்சி நம்மைப் பிரமிக்க வைக்கும் என்றாலும் சுதந்திர இந்தியாவின் தொழில் வளத்தைப் பெருக்குவதில் பிர்லா குடும்பத்தின் பங்கு கணிசமானது. மேலேயுள்ள புள்ளி விவரப் படத்திலிருந்து இதனைத் தெளிவாக உணரலாம். 1947-48 முதல் பல தொழில்களில் இவர்கள் போட்ட மூலதனமும் அதற்கேற்ற உற்பத்திப் பெருக்கமும் எப்படி விறுவிறு வென்று உயர்ந்து வந்திருக்கின்றன பாருங்கள்!

பருத்தி, ஜவுளி, கம்பளி ஜவுளியுடன், நவீன மோஸ்தர்களான ரேயான் ஆடைகளையும் இவர்கள் தயாரிக்கின்றனர். இந்தியாவிலேயே தயாராகும் மோட்டார் கார் வேண்டுமா? அதையும் ஒரு பிர்லா கம்பெனி தயாரித்தளிக்கிறது. சைக்கிள் வேண்டுமா, மற்றொரு பிர்லா கம்பெனி உற்பத்தி செய்கிறது. மின்சார விசிறிகளா, எஃகுச் சாமான்களா, இறக்குமதிப் பொருள்களா, ஏற்றுமதிப் பண்டங்களா, கனரகத் தொழில்களா, உப தொழில்களா, எல்லாத் துறைகளிலும் ஏதாவது ஒரு பிர்லா கம்பெனி சம்பந்தப் பட்டிருக்கும்.

இவர்கள் நடத்தும் தொழில்கள் பெரும்பாலும் மக்களின் தினசரி உபயோகத்துக்கான பொருள்களைத் தயாரித்தளிக்கும் தொழில்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் நடத்தும் தொழிற்சாலையின் பட்டியலைப் பார்த்தாலே பிரமிப்பு ஏற்படும். பஞ்சாலைகளில் மட்டும் 12 ஆலைகளை இவர்கள் நடத்துகின்றனர். ஆலைகளின் மொத்த மதிப்பு 22 கோடி. அவற்றில் சுமார் 47 கோடி மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகின்றன. ரேயான் வகைகளை ஆறு ஆலைகள் உற்பத்தி செய்கின்றன. சணல் வகைகளை உற்பத்தி செய்யவும் ஆறு ஆலைகள். கம்பளி ஆடைகள் ஓர் ஆலையில் தயாராகின்றன. இரண்டு பெரும் ஆலைகள் காகிதம் உற்பத்தி செய்கின்றன. பதினாறு ஆலைகள் மோட்டார், யந்திர சாதனங்கள், சைக்கிள்கள், மின்சாரப் பொருள்கள்போன்றவைகளைத் தயாரிக்கின்றன. பத்து ஆலைகள் சிமிட்டி, வனஸ்பதி, ரசாயனப் பொருள்கள் முதலியவற்றை உற்பத்தி செய்கின்றன. மூன்று கம்பெனிகள் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. ஒன்பது ஆலைகள் சர்க்கரை உற்பத்தி செய்கின்றன.


இவர்களுடைய தொழில் ஆலைகளின் மொத்த உத்தேச மதிப்பு 150 கோடி ரூபாய். இவற்றில் ஆண்டு தோறும் உற்பத்தியாகும் பொருள்களின் மதிப்பு சராசரி 200 கோடி ரூபாய். இத்தொழில்களில் ஈடுபட்டு வேலை செய்து ஜீவனம் நடத்துபவர்கள் ஒருலக்ஷத்து ஐம்பதினாயிரம் பேர்கள்; ஒவ்வொருவரும் ஒரு குடும்பத்தை ரட்சிப்பவர் என்று கணக்கிட்டால் ஒன்றரை லட்சம் குடும்பங்கள் பிர்லா பரம்பரை நடத்தும்



ஜி. டி. பிர்லா



பி. எம். பிர்லா



ஜி. பி பிர்லா

தொழில்களின் மூலம் ஜீவித்து வருகின்றன என்பது விளங்கும்.

இவ்வளவு விரிவாகத் தொழில் நடத்தும் இக்குடும்பத்தைச் சேர்ந்த இந்தத் தலைமுறையினரான திரு ஜி. டி. பிர்லா தம்மைப் பற்றியும் தமது தொழிலைப் பற்றியும் மிகுந்த தன்னடக்கத்துடன்தான் பேசுகிறார்.

''மூலதனம் சேர்ப்பதற்காக மட்டும் தொழில் நடத்த வேண்டும் என்ற உத்தேசத்துடன் எங்கள் குடும்பம் தொழிலில் ஈடுபடவில்லை. புதுப் புதுத் துறைகளில் பிரவேசிப்பதும், நம் நாட்டு வளங்களெல்லாம் வீணாகாது நன்கு பயன்படச் செய்வதும், தொழில் நுட்ப நுணுக்கங்களை எல்லாரும் உணரச் செய்வதும், நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ வகை செய்வதுமே எங்கள் லட்சியங்கள். இந்த லட்சியங்களை நோக்கியே எங்கள் பணி சென்று கொண்டிருக்கிறது'' என்று அவர் பணிவுடன் சொல்லுகிறார்.

இப்பணிவு பேச்சில் மட்டும் காணப்படும் பணிவு அல்ல. செயலிலும் உண்மையேயென்பது கல்வி அபிவிருத்திக்கு இக்குடும்பத்தினர்செய்துள்ள சேவையிலிருந்து தெரியும். ராஜஸ்தான் பிரதேசத்தைச் சேர்ந்த பிலானியில் உள்ள பிர்லா கல்வி ஸ்தாபனம், தனியார் நிருவியுள்ள கல்வி ஸ்தாபனங்களுள் மிகவும் பெரியது என்றே சொல்ல வேண்டும். இரண்டு கல்லூரிகள் இந்த ஸ்தாபனத்தின் கீழ் செயல் புரிகின்றன. பிர்லா ஆர்ட்ஸ் கல்லூரியில் எம். ஏ. பட்டம் வரை படிக்க வசதியிருக்கிறது. பிர்லா கல்லூரியில் பல துறையிலும் தொழிற் கல்விகள் பயில வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

கல்லூரிகளைத் தவிர பிர்லா நிகேதன், என்றும், பிர்லா பாலிகா வித்தியா பீடம் என்றும் மத்திய படிவ, உயர் படிவ பள்ளிகள் செயல் புரிந்து வருகின்றன.

பிலானியைத் தவிர, நைநிடால், ராஞ்சி, கல்கத்தா, பனாரஸ் முதலிய இடங்களிலும் பல பள்ளிகளையும் பிர்லா கல்வி தரும ஸ்தாபனம் நடத்துகிறது.

மகாத்மா காந்தியிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் திரு ஜி. டி. பிர்லா என்பது நாடறிந்ததே. தேசப் பற்று மிக்கவர். கல்வித் துறையில் காந்திஜியின் கருத்துக்களைச் செயலில் வடித்துக் காட்டியுள்ளார் திரு ஜி. டி. பிர்லா.

பிர்லா குடும்பத்தினர் வர்த்தகம், தொழில் இவற்றில் ஈடுபட்டுக் கடந்த நூறாண்டுகளாகப் பொருள் ஈட்டிவந்ததோடு பொருள் ஈந்தும் வந்திருக்கிறார்கள். பெருந்தன்மை உடையவர்களின் செல்வம் ஊருணி நீராக விளங்கி நாடு உயரவும் மக்கள் மாண்புறவும் பயன்பட்டிருக்கிறது. இந்த நூறாண்டு நிறைவு விழாவைச் சமீபத்தில் பம்பாயிலும், கல்கத்தாவிலும் மற்றும் பல இடங்களிலும் விமரிசையாகக் கொண்டாடினார்கள். அவர்களுடைய நற்பணி மேலும் மேலும் வளர்வதாக. அவர்களுடைய தொழில் வளம் தழைத்தோங்கி வளர்ந்து நாட்டினைச் செழிப்புறச் செய்வதாக!

எம். பி. பிர்லா



எம். என். பிர்லா



பி. கே. பிர்லா





மணிபல்லவம்



— உங்கள் கருத்து

"கல்கி" மலரில் வெளி வந்த 'மணி பல்லவம்' காவியம் முடிவுபெற்றது கண்டு கலக்கம் அடைந்தேன். இனி யார் வாரந்தோறும் மனத்துக்கு ஞான போதனையும், நீதியும், வாழ்வுநெறியும் கூறப்போகின்றனர். நான் அக்காவியத்தைப் படிக்குந்தோறும் ஒரு புனிதமான உணர்வை அடைந்தேன். தீய எண்ணங்களை அழித்தும் நல்ல எண்ணங்களை வளர்த்தும் வாசகர்களுடன் ஒன்றிப் பெரும் பணி புரிந்து வந்த காவியம் முற்றுப் பெற்று விட்டது. ஆசிரியர் நா. பார்த்தசாரதி வணக்கத்துக்குரியவர்

சண்முகஞானபுரம்
5—4—62 தி. சகன் பி. காம்

திரு பார்த்தசாரதி அவர்கள் மணி பல்லவம் என்ற தலைப்பில் வீரம் காதல், ஞானம், வஞ்சம், கடமை, தோல்வியிலும் இன்பம் ஆகிய துறைகளில் எம் போன்றோருக்கு அறிவை ஊட்டி வந்தார். அவரின் பணி அளவிட முடியாதது. 'வானளாவ வாழ்க அவர் புகழ்' என வாழ்த்தி மீண்டும் எமக்கு ஆதரவு தரும் வண்ணம் வேண்டுகின்றேன்.

இலங்கை, 5—4—62 ச. சிதம்பரப் பிள்ளை

உலக சரித்திரத்திலே இடம் பெற்ற நெப்போலியன் சொல்கிறார்: "நான் ஓர் எழுத்தாளனுக்கு மட்டும் என் வாழ்க்கையில் பயப்படுகிறேன். யாதெனில் அவன் ஒருசிறந்த வீரனையும் மடக்கும் தகுதி உடையவன்." இதைத் திரு நா. பார்த்தசாரதி அவர்கள் 'மணிபல்லவம்' என்னும் சரித்திரக் கதையைக் கொண்டு நிரூபித்து விட்டார்.

இக்கதையில் வரும் பெருநிதிச் செல்வர் ஒரு பெரிய கொலைகாரர். இவர் எந்தக் கொலைகளையும் செய்வதற்குப் பயப்பட மாட்டார். இப்படிப் பட்டவர் இளங்குமரன் சொல்லும் நற் சொற்களால் தாம் செய்த தீமைகளையே எண்ணி வருந்துகிறார் சுருங்கக் கூறின் மணி பல்லவம் நற்றமிழைக் கொண்ட ஒரு சிறந்த சரித்திரக் கதை. இக்கதை என்றும் நம் மனத்தை விட்டு அகலாது செய்து விட்டார் ஓவியர் வினு.

இலங்கை
9—4—62 பொ. தேவராஜா

இளங்குமரன் படைப்பு அற்புதம். மிக ஆரவாரத்துடன் புறப்பட்ட அருவியானது ஓர் இடத்தில் தேக்கப்பட்டால் எப்படியோ அப்படி மிக உயர்ந்த ஞான எல்லையை அடைந்ததன் மூலம் கடலில் சங்கமமாவதைப் போன்று ஓசையின்றி அடங்கிவிட்டது. தெளிந்த நீருடைய ஒரு தடாகம் போல் ஞான அறிவினால் இளங்குமரன் சிறந்து விளங்கினான்

பம்பாய், 6—4—62 கோ

சுரமஞ்சரியின் ஆசை நிராசையாகி விடுமோ என அஞ்சினேன். அப் பேதையின் துயரைத் துடைத்த இளங்குமரனுக்கும் குமரனைப் படைத்த ஆசிரியருக்கும் என் உள்ளம் மலர்ந்த நன்றி. முல்லைக்கு என் இமையருவி.

சிவகாசி, 6—4—62 பொ. ஜெகந்நாதன்

நீலநாகர் மூலமாய் வீரத்தையும் நகைவேழம்பர் மூலமாய்க் குரூர குணத்தின் எல்லையையும் சுரமஞ்சரியின் வாயிலாய் உண்மைக் காதலின் வெற்றியையும், இளங்குமரன் நாங்கூரடிகள் விசாகை மூலமாய் வேதத்தையும் ஆத்மீக தத்துவத்தையும் மனத்தில் பதியும்படி போதித்த பார்த்தசாரதியை எப்படிப் புகழ்வது என்றே தெரியவில்லை.

சென்னை, 8—4—62 பி. கிருஷ்ணராஜ்

வீரமும், ஞானமும், சீலமும், கருணையும், தியாகமும் ஒருங்கே அமைந்த பண்பாளனை அடைய முல்லை பாக்கியம் செய்யவில்லையாயினும், சுரமஞ்சரி தன் அதிகாரம், ஆணவம், ஆத்திரம், பகட்டு முதலிய பணக்காரத் தன்மைகளை விட்டொழித்து, இளங்குமரனுடன் வாழக் கிளம்பியதற்காகப் பெண்கள் அனைவருமே பாராட்டத்தான் வேண்டும்.

முல்லையைப் போன்று நாம் எல்லோரும்கூட ஆசிரியரின் சொல்லோவியத்தில் மனத்தைப் பறி கொடுத்து விட்டுத் தோற்று, அவரிடம் இன்னும் எதையோ எதிர்பார்க்கிறோம்.

புதுக்கோட்டை
7—4—62 பத்மாமணி

திரு நா. பார்த்தசாரதி எழுதிய 'மணிபல்லவம்' கதையின் தொடக்கத்தி லிருந்து 'முடிவு' வரை சிறப்புமிக்க நிலையில் அமைந்து நேயர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விட்டது. கதையை இனிமையான தமிழில் வரைந்த நா பார்த்தசாரதிக்கும் ஓவியத்தை வண்ணமுறத் தீட்டிய வினு அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவிக்கிறோம்.

மாம்பலம்
9—4—62 பிரமிளா



இந்திய சர்க்கார் வாய்ப்பாட்டு சங்கீதத்துக்காகக் குமாரி வி. மீனாக்ஷிக்கு இரண்டு வருடங்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கிச் சங்கீதக் கலையில் தேர்ச்சி பெற வழி வகுத்திருக்கிறார்கள். ஆற்றல் வளர வாழ்த்துகிறோம்.

‘‘மணிபல்லவம்’’ ஓர் உன்னதமான இலக்கியக் காவியமாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய மாபெரும் காவியங்களில் வரும் பூம்புகாரை, நிலைக்களமாய்க் கொண்டு, இந்தக் கதையைப் புனைந்திருப்பதால், சென்ற ஓர் ஆண்டுக் காலமாக, அந்தக் காவிய காலத்துக்கே, நேயர்களை அழைத்துச் சென்று விட்டார் இக்கதையின் ஆசிரியர்.

பெங்களூர்
—4—62 வள்ளி. தக்ஷிணாமூர்த்தி

எவ்வளவோ கற்பனைக் கதைகளையும், நடந்த கதைகளையும் படிக்கிறோம். ம் மனம் ஒன்றி, நெகிழ்ந்து, நாமும் அப்படி வாழக் கொடுத்து வைக்கவில்லையே என்ற ஏக்கத்தை உண்டாக்கித் தரவல்லது ஒன்றிரண்டுதான். அந்த ஒன்றிரண்டில் மணிபல்லவம் இடம் பெறுகிறது. வாழ்வதற்குத் துணைபுரியும் இன்றியமையாத படைப்புக்களில் இதுவும் ஒன்று.

கும்பகோணம்
5—4—62 உமா மகேசுவரன்

ஒவ்வொரு வாரமும் மணிபல்லவத்தைப் படித்து முடிக்கும் போதெல்லாம் ஒரு சிறந்த காவியப் பூஞ்சோலையில் உலாவி விட்டு வந்ததைப் போன்ற மனத்தூய்மை ஏற்பட்டதே, அல்லாமல் கதை படித்த உணர்வே ஏற்படவில்லை.

பெரம்பூர்
5—4—62 அருணாசலம்



சொந்த ஊர்

புத்தாண்டு மலரில் வையவனின் ‘சொந்த ஊர்’ அற்புதமான கதை. ஆசிரியர் குறிப்பிடுகிற சொந்த ஊர் எதுவோ தெரியவில்லை! ஆனாலும் அந்த ஊரில் இருப்பது போலவும் அதே பாத்திரங்களோடு நாமும் உரையாடுவது போலவும் பிரமை எழுந்தது.

சென்னை
16—4—62 ஈ. லக்ஷ்மணன்

பள்ளிக்கூடங்களா?

இராமநாதபுரம் ஜில்லா போர்டு பெண்கள் உயர்தரப் பள்ளிகளில் ஐந்தாம் படிவத்தில் படிக்கும் மாணவிகளுக்கு இவ்வருட ஆண்டு பரீட்சையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்படி கொடுத்திருக்கிறார்கள்:

‘‘பனிக்காலம் வந்து, காதலர்கள் சந்திப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஆனால் இதன் காரணமாக அவர்களுடைய கடிதங்கள் இன்னும் அதிகமாயின. விலாடிமிர் தன் ஒவ்வொரு கடிதத்திலும் தன் காதலியைத் தன்னுடையவளாகி விடும்படியும், ரகசியமாக மணம் செய்துகொண்டு சிறிது காலம் தலைமறைவாக வாழலாம் என்றும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அப்படிச் சிறிது காலம் தலைமறைவாக இருந்து விட்டு, தன் பெற்றோர்களின் கால்களில் விழுந்து கேட்டுக் கொண்டால், தங்கள் மாசற்ற காதலின் சக்தியைக் கண்டு மனமிளகி காதலின் உண்மையை ஒப்புக்கொண்டு, தங்கள் துயரங்களைப் போக்கி, அன்போடு வரவேற்பார்கள்’’ என்றான்.

இப்பள்ளிகளில் பயிலும் மாணவிகள் வயது வந்தவர்கள் கல்யாணமாகாதவர்கள் இவர்கள் பயிலும் இடங்கள் பள்ளிக்கூடங்களா, அல்லது காதல் கூடங்களா?

சிவகெங்கை
16—4—62 எம். ஜி. குருஸ்வாமி அய்யர்

வெறும் மனிதன்!

சென்ற சித்திரை மலரில் ஜெகசிற்பியன் எழுதிய ‘வெறும் மனிதர்கள்’ கதை மலருக்கே புது மணத்தைக் கூட்டியது. மிஸ்டர் அவசரத்தின் ஒவ்வொரு செயலும் துப்பறியும் கதை மாதிரி திடுக்கிடும்படியாக இருந்தது. கடைசியில் மிஸ்டர் அவசரம் ஒரு கேடிதான் என்று நம்பும்படியான கட்டத்தில் நெய் ஜாடியின் பிரவேசம் கதைக்குச் சிகரம் வைத்தாற் போன்ற இருப்பத்தைத் தந்தது. இதுபோன்ற கதைகளை மனமார வரவேற்கிறோம்.

இடப்பாவ் துறை
17—4—62 ஜானகி, உஷா, உமா

‘‘வெறும் மனிதனை’’ப் பட்டிக்காட்டானாகவும், பட்டணத்தானாகவும் அறிஞனாகவும், அசடனாகவும், கோழையாகவும், இரக்கமுள்ளவனாகவும், நல்லவனாகவும், நயவஞ்சகனாகவும் படைத்து வாசகர்களின் இதயங்களில் போராட்டங்களை ஏற்படுத்திச் ‘சிறு உலகத்தில்’ மனிதர்களைப் படம் பிடித்துக் காட்டிய திரு ஜெகசிற்பியனுக்கு எனது பாராட்டுக்கள்.

கம்பளை
16—4—62 மோசஸ் ஜி. ஜேசுடியான்

விதியின் கை

காதல் கதைகளையே படித்துச் சலித்துப் போயிருந்த என் போன்றவர்களுக்கு 15-4-62ல் வெளியான புத்தாண்டு மலரில் திரு கௌசிகன் அவர்கள் எழுதியுள்ள விதியின் கை ஒரு நல்ல மாற்றமாகும். ஆசிரியருக்கு என் நன்றியைத் தெரிவிப்பதுடன் இது போன்ற சரித்திர சம்பந்தமான கதைகளை இன்னும் கல்கியில் வெளியிட வேண்டுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ராமநாதபுரம்
16-4-62 பி. ஆனந்தவல்லி

நட்பின் சரங்கள்

டி.எஸ்.கோதண்டராமன்

தெருவை அடைத்துக் கொண்டு பந்தல். பந்தலை அடைத்துக் கொண்டு தோரணங்கள். தென்னங் குலைகள். பழுப்பு கொத்துக்கள். வண்ண வண்ண மின்விளக்குச் சரங்கள். வரிசை வரிசையாகக் கார்கள் சுற்று வட்டாரத்தில் போக்குவரத்தே ஸ்தம்பித்துப் போய் விட்டது. ஒலிபெருக்கியில் கார் களின் எண்களைச் சொல்லி அறிவிப்புக் கொடுத்துக் கொண்டிருந்தார் ஒருவர்.

ஆயிற்று. இன்னும் சிறிது நேரத்தில் ஊர்வலம் கிளம்பப் போகிறது. மாளிகையின் ஒவ்வோர் அறையிலும் அடைந்து கிடந்த உறவினர்களும் நண்பர்களும் கதவைப் பூட்டிக் கொண்டு வாசற்புறத்துக்கு வந்து விட்டார்கள். பொறுப்புள்ள ஏழெட்டுப் பேர்கள் மட்டும் பங்களாவிலேயே தங்கி அதை மீண்டும் சீர்ப்படுத்தி வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார் நீலமேகம். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களில் வேணுவும் ஒருவன்.

ஊர்வலம் புறப்படும் வரையில் வாசலில் இருந்து விட்டு அது நகரத் தொடங்கியதும் உட்புறம் விரைந்தான் வேணு. கூட்டத்தால் நிரம்பி வழிந்த நடு ஹால் இப்போது அனாதையாகக் காட்சி தந்தது. ஒழுங்காகப் போடப் பட்டிருந்த நாற்காலிகள் நவக்கிரகங்களாக வக்கரித்துக் கொண்டிருந்தன.

ஓரத்தில் கிடக்கும் 'சோபா'க்களையும் குழந்தைகள் விடவில்லை. அவை ஏறிக் குதித்துத் துவம்சம் செய்ததைக் காண்கையில் நீலமேகத்தின் கண்களில் செந்நீர் கசியும். 'இவன் பாட்டுக்குக் கல்யாணத்தைப் பண்ணிப்பிட்டுப் போயிடுவான். கிழிஞ்ச போன சோபா உறையை மாத்தறதும் கால் ஒடிஞ்ச நாற்காலியை ரிப்பேர் பண்ணறதும் இந்தத் தண்டச் செலவெல்லாம் நம்ம தலையிலே....' நீலமேகம், 'இவன்' என்றது, சொந்தத் தம்பி பரமசிவத்தைததான்!

தொடர்ந்து சிந்தனை செய்யக்கூட முடியவில்லை வேணுவால். உடலும் உள்ளமும் அவ்வளவு அசதி அடைந்திருந்தன. கடந்த ஒரு மாதமாகவே ஒரே அலைச்சல்தான். இந்நாலு நாட்களாக இராத் தூக்கம் கூட இல்லை. ஆட்களைக் கட்டி மேய்க்கும் பொறுப்பெல்லாம் அவனுடையது. அவனுக்குச் சமான அந்தஸ்துடன் நீலமேகத்திடம் வேலை பார்க்கும் ராகவன், கோவிந்து, வேதாந்தம்கூட அவனுக்குக் கீழ்ப்படிந்துதான் நடக்க வேண்டும்—திருமண ஏற்பாடுகள் பற்றிய வரையில். இந்த நான்கு பேர்களுக்குமே கடந்த ஒரு வாரமாக ஓரிடத்தில் நிற்க நேரம் இல்லை; பேச நேரமில்லை; ஒரு வாய் காப்பி குடிக்க நேரமில்லை.

அப்பா!... இன்னும் நான்கு மணி நேரத்துக்குக் கவலை யில்லை. ஊர்வலம் திரும்புவதற்குக் குறைந்தது நான்கு மணி நேரமாவது ஆகாதா? நல்ல காலமாக, ராகவன் இருக்கிறான். அவனிடம் வேலைகளை ஒப்படைத்து விட்டு ஹாய்யாக.....?

அசதியின் கனத்தைத் தாங்காமல் உடல் தள்ளாடியது. ஓரத்தில் கிடந்த சோபா 'வா, வா' என்று அழைத்தது. படுத்துக் கொண்டு இரண்டு மணி நேரமாவது தூங்கினால்போதும். கால்கள் சுவரோரத்துக்கு அவனை அழைத்துச் சென்றன. 'இனி உட்கார வேண்டியது தான்' என்று எண்ணும் போதே ....

''என்ன மிஸ்டர்! உடம்பு ரொம்பக் களைச்சுப் போச்சா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் ராகவன்.

''ஆமாம்டா, என்னாலே முடியல்லே. ஆட்களை வைத்துக்கொண்டு நீயே கொஞ்சம் பார்த்துக்கோ....''

''ரொம்ப நன்றாயிருக்கிறது, நீ பேசுவது! மூன்று நாட்கள் வேலையை மூன்று மணியில் செய்தாக வேண்டும். நான் ஒண்டியாக என்ன பண்ணுவேன்? சரி, சரி, எழுந்து மாடிப் பக்கம் போ. நான் கீழே கவனித்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டு வாசற்புறம் திரும்பினான் ராகவன்.

வேணு மௌனமாக எழுந்தான். மாடிக்குப் போக வேண்டியதுதான். வேலைகள் தங்கிப் போனாலும் நீலமேகத்தின் கோபத்துக்குப் பதில் சொல்ல முடியாது!

மாடிப் படி ஒவ்வொன்றிலும் காலை எடுத்து வைப்பதே பெரும் பாடாக இருந்தது அவனுக்கு. இருபது படிகளும் இருபதாயிரம் படிகளாக அவனுக்குத் தோன்றின.

மேலே வந்த பின்புதான் என்ன கண்ணராவிக் காட்சி! பழத் தோல்களும், டவராத் தம்ளர்களும் தரையெங்கும் மண்டிக் கிடந்தன. 'மொஸெய்க்' தள வரிசை தெரியாமல் சந்தனக் குழம்பு அப்பியிருந்தது.

வேணு மேலே இருந்தபடியே கீழ்த் தளம் நோக்கிக் குரல் கொடுத்தான். ''சுப்பா, சுப்பா....''

ராகவனிடமிருந்து பதில் வந்தது. 'இங்கே சுப்பனுக்கும் குப்பனுக்கும் வேலை இருக்கு! ஆக வேண்டியதை நீயே பார்!''

தாங்க முடியாத எரிச்சல் வந்தது வேணுவுக்கு. அவனுடைய எசமானர், அவர்தான் சென்னையிலேயே மிகப் புகழ் பெற்ற வருமானம் உள்ள வழக்கறிஞர் நீலமேகம்! கடைந்தெடுத்த கஞ்சமகாப் பிரபு! வேலை செய்வதற்குப் பத்து ஆட்களுக்கு மேல் அமர்த்திக் கொள்ள மறுத்து விட்டார். 'சிக்கனம் சிக்கனம்' என்று எந்தெந்த வழிகளில் சிக்கனம் செய்ய முடியுமோ அப்படியெல்லாம் செய்து விட்டார். பலன், குமாஸ்தாக்கள் நால்வருக்கும் இடுப்பு முறிகிறது! ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வருமானத்துக்கு வழி செய்த ஆண்டவன் தாராள மனத்தையும் கொடுத்திருக்கலாகாதா? பெட்டி வழியும் படி பணத்தைச் சேர்த்து வைத்திருக்கிறாரே, அதனால் மன நிறைவடைந்தாரா? பெண்டு பிள்ளைகளுக்காவது மகிழ்ச்சியைத் தருகிறாரா? இல்லை! கல்லூரியில் படிக்கும் மூத்த பையனுக்குச் சட்டை வேண்டும் என்றால்கூட அவரிடம் நாலு முறை அவன் மன்றாடித்தான் ஆக வேண்டும்!

சுவர்க் கடிகாரம் 'டிங்' என்றது!

கிரே இரைச்சல் மயம்! ஆட்களுக்குள் வாத விவாதம். எல்லோர் குரலையும் அடக்கிக் கொண்டு ராகவனின் குரல் அதிகாரம் செய்து கொண்டிருந்தது. 'பயல் கெட்டிக்காரன் தான்! எல்லா ஆட்களையும் தன்னிடம் வைத்துக்கொண்டு என்னை மட்டும் மாடிக்கு அனுப்பி விட்டானே '

ரத்தினக் கம்பளத்தை உதறினாற் போல் எடுத்து, மடித்து, நாற்காலியில் வைத்து விட்டு, டபராத் தம்ளர்களைப் பொறுக்கி, எவர்சில்வர் தட்டுக்களை ஓரிடத்தில் சேர்த்து..!

நினைக்கும்போதே வேணுவின் ஆத்திரம் பன்மடங்கு அதிகமாயிற்று. ஆனால் அவன் செய்துதானே ஆக வேண்டும்!

கம்பளம், அந்த ரத்தினக் கம்பளம் மிகப் பெரியது. பல வண்ணப் பூக்கள் பின்னப்பட்டிருந்தாலும் செஞ்சிவப்பு நிறமே மேலோங்கி யிருந்தது விலை உயர்ந்த அந்த ரத்தினக் கம்பளத்தை வெளியே எடுத்துப் போடுவதற்குள் நீலமேகம் தவிப்பாய்த் தவித்துவிட்டார்.

''வேணு! கம்பளத்துக்குப் பதிலா இரண்டு ஜமக்காளத்தை விரிச்சுப்புடேன்'' என்ற யோசனையும் கூறினார் நீலமேகம்.

அந்த மகாப் பிரபுவின் சொல்லைக் கேட்டு வேணு தன்னுள் சிரித்துக் கொண்டான். நீலமேகத்தின் மனைவி பார்வதம் அவனுக்குப்பதிலாகப் பதில் சொல்லி விட்டாள். ''உங்க பேச்சு உங்களுக்குத்தான் பிடிக்குது! பிரோ கொண்ணாமல் ரத்தினக் கம்பளத்தையும் பட்டு ஜமக்காளத்தையும் வைச்சிக்கிட்டு, வாடகை ஜமக்காளத்தைப் போடுவாங்களா. யாராவது? நம்ம வீட்டிலே நடக்கிற முதல் கல்யாணம்..''

''அது சரி. நம்ம பெண் கல்யாணம் இல்லையே!..''குரல் சற்று அடங்கித்தான் வந்தது, நீலமேகத்துக்கு!

''அய்யய்யய்ய....! என்னங்க இது, நீங்க பேசறது? உங்க தம்பி நம்மை நம்பித்தானே இந்தப் பட்டணத்திலே கல்யாணம் பண்றாரு? கல்கத்தாவிலேயே நடத்திவிட அவங்களாலே முடியாதா? உறவுக்காரங்க, சிநேகிதருங்க எல்லாரும் வரணும்னுட்டுத்தானே இங்கே பண்றாங்க? கல்யாணத்தை விமரிசையாக நடத்திக் கொடுக்கிறது நம்ம பொறுப்பு...''

கல்யாணி ஆறும் படிவம் படிக்கும் பெண்; —தந்தையிடம் தனிச் சலுகை பெறுபவள்— கேட்டுக் கொண்டிருந்தாள், இதை.

''அப்பா, ஆர்குமெண்டு கோர்ட்டிலேதான் எடுபடும்! அம்மாவின் ஒரு பேச்சுக்கு எதிர்ப்புக் கூற அப்பாகிட்டே சரக்கு கிடையாது! இந்த விஷயத்திலும் அம்மா பக்கம் டிகிரி ஆயிட்டுது, அப்பா!''

நீலமேகம் ஒரு புன்சிரிப்புக்குள் மூழ்கித் தம்மை மறைத்துக் கொண்டார்.

வேணு ரத்தினக் கம்பளத்தின் ஒரு மூலையைப் பிடித்துத் தூக்கினான். கைகள் இரண்டும் தனியே கழன்று விழுந்து விடும் போல் ஆகிவிட்டது. ஆறு பேர்களாகச் சேர்ந்தல்லவா அதை விரித்திருக்கிறார்கள்?

மூலையைத் தூக்கிக் கம்பளத்தி மையத்தை நோக்கி வீசி எறிந்தபோது, ஏதோ ஒன்று உருண்டு போய்த் தரையில் விழுந்தது. கூர்ந்து பார்த்தான் வேணு. இளம் செவ்வண்ணப் பேனா! தங்க நிற மூடி!

வேணு அதைக் கையில் எடுத்தான். புத்தம் புதிய பேனாதான்.' வாங்கி ஓரிரு மாதங்கள் கூட ஆகியிருக்கும் என்று தோன்றவில்லை; அதிக விலை உடைய பேனா என்பதை அதன் தோற்றமே பறைசாற்றியது. எந்தப் புண்ணியவான் அதைத் தவற விட்டுப் போனாரோ?

அதற்கு முன் விநாடி வரை கள்ளமறியாத வேணுவின் உள்ளத்தில் சிறு சிறு சலசலப்புத் தோன்றியது. 'இந்தப் பேனாவை நாமே எடுத்துக் கொண்டால் என்ன?'

வேணுவின் பெண் கமலி, ஆறு மாதங்களாக அவனைத் துளைத்துக் கொண்டிருந்தாள், ஒரு நல்ல பேனா வாங்கிக் கொடுக்கும்படி. அவளுடைய ஒரு ரூபாய்ப் பேனா நிரந்தர வியாதியஸ்தனாகி விட்டது! எப்போது பார்த்தாலும் மூக்காலும் வாயாலும் கக்கிக் கொண்டிருந்தது. அதற்குப் பதிலாக வேறொரு புதுப் பேனா வாங்கிக் கொடுக்க இயலவில்லை, வேணுவால். அவனுக்குச் சக்தி இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் கை வரவில்லை.

தரையிலிருந்து எடுத்த பேனாவைக் கண்டதும் அதைக் கமலிக்குக் கொடுக்கலாமே என்ற எண்ணம் இயல்பாகத் தோன்றியது வேணுவுக்கு. 'இதைத் திருடி மறைத்துக் கொண்டு போகிறோம்' என்ற மாதிரியான நச்சு எண்ணம் இல்லை. சட்டையின் உட்புற 'ஜேபி'யில் பேனாவைச் செருகிக் கொண்டிருக்கும் போதே 'என்னடா மலைத்துப் போய் அப்படியே நின்னு விட்டே?' என்ற குரல் பின்புறத்திலிருந்து — ஹாலின் நுழை வாயிலிலிருந்து — கேட்டது. வேணு பதறி விட்டான்.

ராகவன்!

''நினைவுகளிலே மூழ்கிப் போய் நிற்கிறயே? என்ன?....வீட்டு ஞாபகமா?''—கேட்டு விட்டு ஒரு மாதிரியாகச் சிரித்தான் ராகவன். அந்தச் சிரிப்பு!...ஆ, அது கள்ளச் சிரிப்பா? இல்லை, கேலிச் சிரிப்பா?

''ஒ...ஒ...ஒன்றும் இல்லை...வந்து...!'' வியர்த்துக் கொட்டியது அவனுக்கு.

''என்ன வந்து... போய்....?''

ஐயோ, ராகவனுக்கு என்று அந்த நமட்டுச் சிரிப்பு எவ்வளவு சாதகமாக வருகிறது!

வேணுவின் உடலில் எலும்பே இல்லாமல் போய் விட்டது! அவ்வளவு கூனிக் குறுகி விட்டான். இருபது ஆண்டுகளாக வளர்ந்த புகழ், ஒரு விநாடியில் பாழ்! மாபெரும் பஞ்சுப் பொதியை மாய்க்க ஒரு சிறு பொறி போதாதா?

அவன் இமைகள் மூடி மூடித் திறந்தன. 'கவர்களில் டிஸ்டெம்பரை அழித்து விட்டு, செம்பஞ்சுக் குழம்பை யார் பூசினார்கள்?'


''சரி, சரி. நீ இப்படியே மயங்கி நில்லு! எனக்கு வேலை கெடக்கு. ஆமாம், உன்னை ஒரு விஷயம் கேட்கத்தானே வந்தேன். வாசற்புறத்தில் கிடக்கும் மடக்கு நாற்காலிகளையெல்லாம் மடக்கிப் போட்டு விடச் சொல்லட்டுமா?'

''........ம்ம்ம்...''

வாயைத் திறக்கத் தோன்றவில்லை அவனுக்கு. 'இவன் பார்த்திருப்பானோ பேனாவை எடுத்து வைத்துக் கொண்டதை? நமக்குப் பின்னால் எத்தனை நேரமாக நின்று கொண்டிருந்தானோ? இப்படிக் குடைந்து எடுத்து விடுகிற மாதிரி ஏன்தான் பார்க்கிறானோ?'

''ஒரு மூலையில் அடுக்கி விடட்டுமா?''

''இம்ம்ம்....''



ராகவன் இன்னமும் போகாமல் அவனையே துருவித் துருவிப் பார்த்துக் கொண்டிருப்பதன் காரணம் என்ன? அவனுக்கு அந்த இரகசியம் தெரிந்து விட்டது என்பதாகத் தான் இருக்கும். அப்படியானால், அவனிடம் உண்மையைத் தெரிவித்து விட்டால், பெரும் பழியிலிருந்து தப்பி விடலாம். ஒன்றும் இப்பொழுது தாமதமாகி விடவில்லை. இப்போது சொன்னாலுங்கூடப் போதும்.

ராகவன் தட தடவென்று படி இறங்கிச் சென்று விட்டான்.

வேணு கல்லாகச் சமைந்து நின்றான். இனி என்ன செய்வது என்றே அவனுக்குப் புரியவில்லை. ராகவனுக்கு அந்தத் 'திருட்டு' தெரிந்திருக்குமானால் அநேகமாக அவனையே அதைப் பற்றிக் கேட்டிருப்பான். ஓட்டை வாய். அவனுக்கு அவன் வேறு ஒன்றும் கேட்காததிலிருந்து வேணு பேனாவை எடுத்துப் பையில் செருகிக் கொண்டதை அவன் பார்க்கவில்லை என்றே ஆகிறது.

நீலமேகத்தின் குடும்பத்தினருக்குத் தான் வேணுவிடம் எவ்வளவு நம்பிக்கை! அலுவல் சம்பந்தப்பட்ட மட்டும் அவன் குமாஸ்தா. மற்றச் சமயங்களில் அவர்களுடைய ஆலோ

சலையாளள். பார்வதம் அவளிடம் குடும்பச் சமாசாரங்களை யெல்லாம் சொல்லுவாள். ஏன், இந்தக்கல்யாணம் விமரிசையாக நடக்கிறதென்றால், பார்வதியும், வேணுவும் சேர்ந்து போட்ட திட்டம்தான் அது. எனினும் சொந்த முறையில் ஐந்து ரூபாய் செலவழிக்கக் கூடப் பார்வதத்தால் முடியாது. அப்புறம் நீலமேகத்தின் ஆயிரம் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும் இதை உணர்ந்திருந்த பார்வதம் தன் கணவருக்குத் தெரியாமல் ஒரு சிறு செயலையும் செய்யாதவாறு தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டிருந்தாள். பணத்துக்கு அடுத்தபடியாகப் பார்வதத்திடம் தான் நீலமேகத்துக்கு அபார அன்பு!

ஆங்காங்கே சிதறிக் கிடந்த டம்பரா தம்ளர்களை ஒரு கூடையில் எடுத்துப் போட்டான் வேணு. மனத்தின் சஞ்சலப் பரபரப்புக்குக் கைகளால் ஈடு கொடுக்க முடியவில்லை. ஓடி ஓடி வேலை செய்வதாக எண்ணிக் கொண்டான். ஆனால் கால்கள் கனத்தன; பின்னிக் கொண்டன. ஜன்னலுக்கு அப்பாலிருந்து இரு கண்கள் தன்னையே ஊடுருவதாகப் பிரமை தோன்றியது. அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கண்டான்—யாரோ வரும் காலோசை கேட்ட மயக்கத்தில்!

'அது என்ன பேனாவா? அல்லது, அவன் நிறைவைக் குலைக்க வந்த நச்சுப் புழுவா?'

கமலி ஏன் புதுப் பேனா கேட்டாள்? அதனால் வந்த வினைதானே இது? சேச்சே! அவன் என்ன செய்வான் பாவம்! ஒழுகும் பேனாவை வைத்துக் கொண்டே ஆறு மாதங்களாகச் சமாளித்து வருகிறாள் அவள். வேறொரு பெண்ணாக இருந்தால் தகப்பன் முகத்திலேயே அதை வீசியிருக்கும்!

மாடியிலிருந்து வேணு கீழே இறங்கிய போது கீழ் ஹாலில் நீலமேகம் மட்டும் அமர்ந்திருந்தார். அருகில் ராகவன் நின்று கொண்டு ரகசியமாக ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். பக்கத்து அறை ஒன்றிலிருந்து வந்த வேணுவுக்குத் 'திக்' என்றது!

'பயல் வத்தி வைத்து விட்டான். இனி வெடிக்க வேண்டியதுதான் பாக்கி'

அதற்கேற்றாற் போல், வேணுவைக் காட்டி 'இதோ வருகிறான்' என்று சொன்னான் ராகவன்.

வேணுவால் இனி தப்ப முடியாது! வசமாக மாட்டிக் கொண்டுவிட்டான்! 'திருடின' அந்தப் பேனாவை வேறு எங்கேனும் ஒளித்து வைக்கலாவது தோன்றியதா, அவனுக்கு?

''ஏய், வேணு! என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் மனசிலே?....'' என்று கடுமையாகக் கேட்டார் நீலமேகம்.

வேணு விதிர்த்து விட்டான். 'பேனாவை இழந்தாலும் சரி, மானத்தை இழக்காமலிருந்தால் போதும்' என்றுதி விட்டது அவனுக்கு.

''இல்லே, ஸார்....நான் வந்து....''

''.......நீ வந்து....? ஒரு முட்டாள் இதோ ராகவன் சொல்கிறானே....!''

சரணாகதியைத் தவிர வேறு வழியே இல்லை, அவனுக்கு. சட்டென்று உட்புறப் பையிலிருந்து பேனாவை எடுத்து அருகே இருந்த மேஜை மீது வைத்தான்.

''மாடி ஹாலில் கிடந்தது. நீங்கள் திரும்பி வந்ததும் கொடுக்கலாம் என்று வைத்திருந்தேன்...'' குரல் நடுங்கிற்று, அவனுக்கு.

''பேனா கிடக்கட்டும். கவனம் இல்லாதவன் இப்படித்தான் நஷ்டப்படணும்! உனக்கு உடம்பு சரியில்லையாமே? அதைக் கேட்கத் தானே உன்னைக் கூப்பிட்டேன்.....''

வேணுவுக்கு ஜுரம் விட்ட மாதிரி வேர்த்தது.

''ராகவன் சொல்லா விட்டாலும் எனக்கே தெரியாது. மாடியில் வேலை செய்யமுடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தாயாமே?.. உடம்பு சரியில்லை என்றால் என்னிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குப் போகக் கூடாதா?. நான் என்ன கிராதகனா — உடல் நிலை சரியில்லாதவனிடம் வேலை வாங்க? சேச்சே! இவ்வளவு நாட்கள் என்கிட்ட வேலை செய்தும் என் மனசைப் புரிஞ்சுக்கல்லியே?''

மாடியிலிருந்து இறங்கி வந்த கல்யாணியைக் கண்டதும் நீலமேகம் பேச்சை நிறுத்தினார். 'அப்பா' என்று அழைத்துக் கொண்டே கல்யாணி அவரருகே வந்தாள்.

''என்னம்மா?.....''

''அம்மா, சின்னம்மா, சித்தப்பா — எல்லாரும் மேலே பேசிக்கிட்டிருக்காங்க. உங்ககிட்டே ஒரு விஷயம் கேட்கணுமாம். கூப்பிடறாங்க....'' என்றவாறே கண்களைச் சுழல விட்டாள், அவள். மேஜைமேல், அது, என்ன?

அடுத்த கணம், கல்யாணியின் கைகளில் இடம் பெற்று, அந்தப் பேனா பிரகாசித்தது.

''ஏது, அப்பா, இந்தப் பேனா? ரொம்ப நல்லாயிருக்கே? எனக்குத் தானே, அப்பா?''

நீலமேகம் புன்சிரிப்புச் சிரித்தார்.. ''பின்னே, வேறே யாருக்குக் கொடுக்கப் போகிறேன்?''

''நல்ல அப்பா, நீங்க!... நாளைக்கு என் பிரண்ட்ஸ் கிட்டே காட்டி, அதுங்க மூக்கை உடைக்கிறேன். பத்து ரூபாய் பேனா வச்சிருக்கேன்னு என்னைக் கேலி பண்ணிக்கிட்டேஇருந்தாங்க!...இது நாற்பது, ஐம்பது ரூபாய் இருக்குமே?''

''ஆமா. நீ போம்மா. நான் பின்னாலேயே வரேன்....''

கல்யாணி நகர்ந்ததும் வேணுவைப் பார்த்தார் நீலமேகம்.

''கல்யாணியின் வெகு நாளைய குறை இன்னிக்குத் தீர்ந்தது. சரி, டிரைவர் இருக்கான். சின்ன வண்டியை எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போ. காலையிலே நம்ப டாக்டர்கிட்ட உடம்பைக் காட்டி விட்டுத்தான் இங்கே வரணும். என்ன, தெரிகிறதா? பொழுது விடிந்ததும் நானே டாக்டருக்குப் போன் செய்கிறேன்..'' மாடியை நோக்கி நடந்தார், அவர்.

ராகவன் வேணுவைத் தன் கைகளால் அணைத்தவாறு வாசற்புறமாக அழைத்துச் சென்றான். வேணுவுக்குத் தன்னென்று உடல் முழுதும் சிலிர்த்தது. கமலிக்குக் கிடைக்கவிருந்த பேனா கல்யாணிக்குப் போய்ச் சேர்ந்து விட்டதோ, பெரும் பிரச்னையாகத் தோன்றிய அந்தச் சம்பவத்தைத் திருவாளர் நீலமேகம் கன அலட்சியமாகத் தீர்த்துவிட்ட விதமோ, அந்தக் கணத்தில் அவன் உள்ளத்தில் தலை காட்டவே யில்லை. ஆனால், தன்னைத் தாங்கிக் கொண்டு செல்லும் அந்தக் கரங்களைப் பார்த்தான் வேணு. ராகவனின் கரங்களோ, அவை? இல்லை, இல்லை. இதயத்தினுள்ளே ஆணி வேர் விட்டோடிய நட்பின் கரங்கள்! ஆமாம், வரம்பிலா நட்பின் கரங்கள்!

நந்தவனம்

18, கல் மழை

வில்வநாதனுல் ஊகிக்க முடிந்தது. அந்த ஜாடை நாய்க்குட்டி அத்தனை உற்சாகத்தோடு குதி போட்டுக் கொண்டு, வீட்டுக்குள்ளும், வெளியேயும் ஓடியதையும் குமுதவல்லி அம்மாளின் சாய்வு நாற்காலியிலே தொத்தி ஏறியதையும் பார்த்த போது, வெளியே வந்திருக்கிற மனிதர் அந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து போகிறவராக இருக்க வேண்டும் என்பதையும், குமுதவல்லியின் அன்புக்குப் பாத்திரமானவராக இருக்க வேண்டும் என்பதையும் வில்வநாதன் புரிந்து கொண்டான்!

''செண்பகம்!'' என்று கூப்பிட்டாள் தாயார். மகள் மறுமொழியில்லாமல் மௌனமாக இருக்கவே, மறுபடியும் உரத்த குரலில் ''செண்பகம்!''என்ருள். இதற்குள் வெளியேயிருந்து வேக நடை போட்டு வந்த வல்லாள வேலர், கூடத்துக்குள்ளே நின்று கொண்டே அறைக்குள்ளே பார்த்தார். வில்வநாதன் அவரை அடையாளம் தெரிந்துகொண்டதற்கு அறிகுறியாக நாற்காலியை விட்டு எழுந்தான். ஆனல் இவன் அவருக்கு வணக்கம் தெரிவிப்பதற்குள் மறுபக்கம் திரும்பி வெளியே நடந்து விட்டார் வல்லாளர்!

''செண்பகம்!'' என்று மூன்ரும் முறையாக மிகுந்த கோபத்தோடு கூப்பிட்டாள் குமுதவல்லி! செண்பகசுந்தரி நடுநடுங்கிக் கொண்டே வெளியே வந்து, கூடத்திலே போய் வல்லாள வேலரை வரவேற்பதற்குள் தெரு வாசலில் நின்று கொண்டிருந்த வில் வண்டியில் ஏறிக் கொண்டு மறைந்து விட்டார் வல்லாளவேலர்!

''அம்மா! நான் வெளியே போவதற்குள் வண்டியில் ஏறிப் போய் விட்டார்கள்!''

என்ருள் செண்பக சுந்தரி! குமுதவல்லியின் முகத்தில் அனல் கொட்டியது!

''நான் ஒருத்தி எழுந்து வர முடியாது என்று தெரிந்துதானே இத்தனை மெத்தனம் உனக்கு! அப்படித்தானே?''

இவ்வாறு குமுதவல்லி சொல்லும் போது அவளுடைய முகத்தைப் பார்த்தான் வில்வநாதன். அந்த முகத்தில் பயங்கரமான பூத கணங்கள் கூத்தாடின! 'அவளால் எழுந்திருக்க மட்டும் முடிந்திருந்தால் இதற்குள் செண்பக சுந்தரியை அவள் என்ன செய்திருப்பாளோ' என்று எண்ணிப் பார்க்கவே பயமாக இருந்தது வில்வநாதனுக்கு!

''தம்பீ! இப்படித்தான் இந்த அசட்டுப் பெண் ஒவ்வொரு காரியமும் செய்கிருள்! எத்தனை பெரிய மனிதர்கள் வீட்டுக்கு வந்தாலும் அவள் பொருட்படுத்துவதில்லை! அத்தனை கர்வம்! திமிர்! இளக்காரம்!....''

இப்படி வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே போனுள் குமுதவல்லி!

''தம்பீ! வந்த மனிதர் எத்தனை முக்கியமான வேலையாக வந்தாரோ! அதையெல்லாம் பற்றி இவளுக்கு அக்கறை யிருந்தால்தானே?''

வில்வநாதனுக்கு மனத்தில் அனல் காய்ந்தது. அவன் சொன்னுன்:

''அம்மா! நான் இடைமறித்துப் பேசுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். அவ்வளவு முக்கியமான காரியமாக வருகிறவர் ஏன் இப்படி ஆத்திரப்பட்டுக் கொண்டு மறு பக்கம் திரும்பிப் போகிருர்?''

இவ்வாறு வில்வநாதன் கேட்டதும் குமுதவல்லிக்கு மேலும் ஆத்திரம் உண்டாயிற்று.

''கேளுங்கள்! அப்படிக் கேளுங்கள்! அந்தக் கேள்வியை இந்த அசட்டுப் பெண்ணைப் பார்த்தே கேளுங்கள்! அவ்வளவு முக்கியமான வேலையாக வருகிறவருக்கும்கூட ஆத்திரம் வரும்படி

ஸோமு



இந்த வீட்டில் ஓர் அகங்காரம் தலையெடுத்து நிற்கிறது! வருகிற மனிதரிடம் முகம் கொடுத்துப் பேசக்கூடாதபடி, அத்தனை அலட்சியம் இவளுக்கு! 'மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்' என்று போய் விட்டார் அந்த மனிதர். மானம் உள்ளவர் அவர்! வேறு என்ன செய்வார்!''

செண்பக சுந்தரி அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. வேகமாக நடந்து உள்ளறைக்குள்ளே சென்று கட்டிலில் விழுந்து 'கோ' என்று கதறினாள். அவளுடைய அழுகுரலைக் கேட்கவே கஷ்டமாக இருந்தது வில்லவ நாதனுக்கு!

''அம்மா! இங்கு வந்தது வல்லாள வேலர் தானே?'' என்று மெதுவாகக் கேட்டான்.



''ஆமாம். யாரோ பேசிக் கொண்டு இருக்கிறார்களே என்று தயங்கி நின்றிருக்கிறார் வெளியே! அப்படிப்பட்ட ஒரு பெரிய மனிதரை நாம் வரவேற்க வேண்டிய முறை என்ன? நீங்களே சொல்லுங்கள் தம்பி! தயங்கி நிற்கிற மனிதரை நாம் அல்லவா வரவேற்று அழைக்க வேண்டும்? முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தால் எப்படி?''

வில்வநாதனுக்குத் தலை சுற்றியது. குமுதவல்லியின் பேச்சிலே இருந்த தர்க்க நியாயம் அவனுக்குப் பிடிபட வில்லை! வேண்டுமென்றே மகளைக் கொடுமைப்படுத்துவது போலப்பட்டது அவனுக்கு!

'என்ன அதிசயம் இது! அழகும், பண்பாடும், இசையாற்றலும் நிரம்பிய அபூர்வமான ஒரு மகளை இப்படியும் கொடுமைப்படுத்துகிற தாய் இந்த உலகத்தில் இருக்கிறாளா? இறைவனுடைய படைப்பில் இப்படியும் ஒரு பிறவியா!' என்று எண்ணிக்கொண்டே தரையைப் பார்த்தவாறு மௌனமாக இருந்தான் வில்வநாதன்!

''செண்பகம்! இங்கே வா!'' என்று பலமான குரலிலே மகளைக் கூப்பிட்டாள் குமுதவல்லி.

''அடுத்த முறை அவர் இங்கே வரும் போது அவருடைய காலிலே விழுந்து நீ மன்னிப்புக் கேட்க வேண்டும்! தெரிந்ததா?''

இப்படி ஓர் அதட்டல் அதட்டினாள் தாயார்.

''அம்மா! வீணாக ஏன் கோபப்படுகிறாய்? அவர் வந்ததை நான் கவனிக்கக் கூட இல்லை. அதற்குள் அவர் மறுபக்கம் திரும்பிப் போய் விட்டார். எனக்கோ அவரைப் பார்த்தாலே—''

''என்ன! என்ன சொல்லுகிறாய்? உனக்கு அவரைப் பார்த்தால் என்ன செய்கிறது?''

சாய்வு நாற்காலிக்கு அருகிலே இருந்த தம்ளரை எடுத்து ஓங்கித் தரையிலே வீசினாள் குமுதவல்லி! அந்த நீர்க்கதியான வெண்கலப் பாத்திரம் 'டணார்' என்று ஓலமிட்டுக் கொண்டே கதவிலே போய் மோதி விழுந்தது! செண்பக சுந்தரி மறுபடியும் கதறியழத் தொடங்கி விட்டாள்!

வில்வநாதன் நாற்காலியிலிருந்து எழுந்தான்!

''அம்மா! இன்றைக்கு நான் இங்கே வந்த வேளை சரியில்லை! நான் இன்னொரு நாள் வருகிறேன்!''

இவ்வாறு சொல்லிக் கொண்டே கைகூப்பினான். மறுமொழிக்குக் காத்திராமல் அறையிலிருந்து புறப்பட்டான். ஆனாலும் அவனால் அங்கிருந்து நடக்க முடியவில்லை. அறையிலிருந்து வந்த சுந்தரியின் அழுகுரல் அவனுடைய நெஞ்சகத்திலே எதிரொலி செய்தது.

''அம்மா! வல்லாளவேலர் இங்கிருந்து கோபித்துக் கொண்டு போய் விட்டதாக எண்ணித் தயவுசெய்து வருத்தப்படாதீர்கள்! அவருக்கு உங்களிடமோ அல்லது செண்பக சுந்தரியிடமோ எவ்விதகோபமும் இராது! உண்மையில் என்னை இங்கே பார்த்தது அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்! அவ்வளவுதான்! அடுத்த முறை அவர் இங்கே வரும் போது நீங்களே அந்த விவரங்களைத் தெரிந்து கொள்வீர்கள்! அது வரை பொறுமையாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய சங்கீதத்திலும், உங்களுடைய இசைப் பரம்பரையினிடத்திலும் எனக்கு ஏற்பட்டுள்ள மதிப்பினால் உங்களைப் பணிந்து வேண்டிக் கொள்ளுகிறேன். இவ்வளவு தூரம் நீங்கள் கோபப்படுவதற்கு அவசியம் இல்லை! நான் போய் வருகிறேன்!''

வில்வநாதன் அங்கிருந்து நடந்து வெளியே வந்து, எல்லையற்ற வேதனையோடு மலைப் படிகளில் நடக்க ஆரம்பித்தான். உடம்பை மட்டுமே தூக்கிச் சுமந்தான், அந்தப் படிகளின் மீது! அவனுடைய உள்ளமோ செண்பக சுந்தரியின் அழுகுரலைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது!

'செண்பகசுந்தரி தனது எதிர்கால வாழ்வை வேறுவிதமாகத் திட்டமிட்டு வாழ நினைக்கிறாள். அவளுடைய அன்னையின் நோக்கமோ இதற்குமாறாக இருக்கிறது! இதனால் ஏதேதோ உணர்ச்சி மோதல்கள் இந்த வீட்டில் நிகழ்ந்தவண்ணமாக இருக்கின்றன! மற்றப்படி இத்தனை பூசல்களுக்கும் வேறு எந்த விதமான காரணமும் இருக்க முடியாது!'

இவ்வாறு எண்ணமிட்டவனாக நந்தவனத்தை நோக்கி நடந்து சென்றான் வில்வநாதன்.

'பாவம்! நான் வெளியே வந்த பிறகு இன்னும் என்னென்ன குழப்பங்கள் எல்லாம்நேருமோ? அந்த அரக்கி வெண்கலத் தம்ளரைத் தூக்கி எறிந்தாளே! தப்பித் தவறி அது சுந்தரியின் முகத்திலேயே விழுந்திருந்தால் என்ன ஆகும்! இன்று இல்லாவிட்டால் என்றோ ஒரு நாள் அப்படித்தான் ஆகப் போகிறது! அந்த ராட்சசி, மகளை மகள் என்று பார்க்க மாட்டாள்!'

காலிலே படி தட்டியது! வில்வநாதன் சமாளித்துக் கொண்டே மேலே நடந்தான்.

க்ரைமிக்ஸ் போட்டி



ரொக்கப் பரிசுகளாக ரூ. 8,000 பெறுங்கள்

முதல் பரிசு ரூ. 3,500

2-வது பரிசு ரூ. 1,000

3-வது பரிசு ரூ. 500

மற்றும் 30 பரிசுகள் ரூ. 100 வீதம்

உங்கள் குழந்தையை ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வைப்பதோடு இந்த மதிப்புள்ள ரொக்க பரிசுகளையும் பெறுங்கள்.

எல்லாவற்றிலும் சிறந்த க்ரைப் மிக்சர்தான் உங்கள் குழந்தைக்கு மிக உகந்தது. அதனாலேயே விவேகமுள்ள தாய்மார்கள் **க்ரைமிக்ஸையே** கேட்டு வாங்குகிறார்கள். குடல் வலி, வாயு மற்றும் இதர வயிற்றுக் கோளாறுகளிலிருந்து க்ரைமிக்ஸ் துரிதமாக நிவாரணமளிக்கிறது. பல் முளைக்கும் பருவத்திலும் தாய்ப்பாலை மறக்கடிக்கும் சமயத்திலும்கூட குழந்தையை சந்தோஷத்துடனிருக்க வைக்கிறது. பூட்ஸின் தரமுள்ள தயாரிப்பான **க்ரைமிக்ஸை** உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள்.

விதிகளும் முறைகளும்:

1) குழந்தை பராமரிப்பு பற்றிய கீழ்க்கண்ட ஆறு குறிப்புகளை நீங்கள் கருதும் முக்கியத்துவப்படி வரிசைப்படுத்தி வையுங்கள். உதாரணமாக, நீங்கள் 4-வது குறிப்பு எல்லாவற்றிலும் அதிக முக்கியமானதென்று நினைத்தால், 4-வது குறிப்பின் எதிரேயுள்ள கட்டத்தில் "1" என்று போடவும். 2-வது குறிப்பு அதற்கடுத்தபடியாக அதிக முக்கியமானதாகத் தோன்றினால், அப்பொழுது 2-வது குறிப்பின் எதிரேயுள்ள கட்டத்தில் "2" என்று போடவும். இதேபோல மற்றவைகளையும் வரிசைப்படுத்துங்கள்.

2) பூர்த்தி செய்த போட்டிக் கூப்பனையும் **க்ரைமிக்ஸ்** அட்டைப் பெட்டியின் மேற்பாகத்துடன் இணைத்து, **"க்ரைமிக்ஸ் போட்டி"**, தபால்பெட்டி 680, பம்பாய்-1 என்ற விலாசத்திற்கு 1962, மே 31-ம் தேதிக்கு முன் அனுப்பவும்.

3) போட்டிக் கட்டணம் கிடையாது. நீங்கள் உங்கள் விருப்பப்படி எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் **ஒவ்வொரு** போட்டிக் கூப்பனுடனும் **க்ரைமிக்ஸ்** அட்டைப் பெட்டியின் மேல்பாகத்தைச் சேர்த்து அனுப்பவேண்டும்.

4) போட்டியில், சேர்த்த எந்த ஒரு கூப்பனுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகள் வழங்கப்பட மாட்டாது.

5) இந்தியாவில் வசிப்பவர்கள் மட்டுந்தான் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம். பூட்ஸ் ப்யூர் ட்ரக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட் மற்றும் நேஷனல் அட்வர்டைஸிங் ஸர்வீஸ் பிரைவேட் லிமிடெட் கம்பெனிகளின் ஆபீஸ்களில் வேலை செய்வோரும் அவர்களது குடும்பத்தினரும் இப் போட்டியில் கலந்துகொள்ள அருகதையற்றவர்கள்.

6) நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. எவ்விதமான சந்தர்ப்பங்களிலும் இதைப்பற்றிய கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளப்படமாட்டாது.

7) முதல் மூன்று பரிசு பெற்றவர்களின் பெயர்கள் முக்கியமான தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். இதர பரிசு பெற்றவர்கள் தபால் மூலம் அறிவிக்கப்படுவார்கள்.

முடிவு தேதி 1962, மே 31



ஒவ்வொரு கூப்பனுடனும் ஒரு க்ரைமிக்ஸ் அட்டைப் பெட்டியின் மேற்பாகத்துடன் சேர்த்தே அனுப்பப்பட வேண்டும். க்ரைமிக்ஸ் Boots பூட்ஸின் தரமுள்ள தயாரிப்பு



— போட்டிக் கூப்பன் —

"க்ரைமிக்ஸ் போட்டி"

தபால் பெட்டி நெ. 680, பம்பாய்-1

ஒரு குழந்தை ஆரோக்கியமாயும் மகிழ்ச்சியாயும் இருப்பது—

1. பிரகாசமான வெளிச்சம் மற்றும் காற்றோட்டத்தினால்
2. க்ரைமிக்ஸ் ஒழுங்காகச் சாப்பிடுவதால்
3. உணவில் சிறந்த பால் சேருவதால்
4. அதைக் குழந்தைகளின் குழுவில் வளர்ப்பதால்
5. பெற்றோர்கள் அன்புடன் கொஞ்சுவதாலும் பிரியம் காட்டுவதாலும்
6. தவறாமல் குளிப்பாட்டுவதால்

நான் விரும்பும் வரிசைக்கிரமம்		

பெயரும் விலாசமும் (கொட்டை எழுத்துக்களில்) ______________________

____

____

இந்தப் போட்டியில் கலந்துகொள்வதால், நான் போட்டியின் விதிகள் மற்றும் முறைகளுக்கு கட்டுப்படுவதுடன் நடுவர்களின் தீர்மானத்தை முடிவானதென்று ஒப்புக்கொள்ளச் சம்மதிக்கிறேன்.

______________________ கையொப்பம்

NATIONAL

'நான் ஏன் திடீரென்று அங்கிருந்து புறப்பட்டு வந்தேன்! இன்னும் கொஞ்ச நேரம் அங்கே இருந்து சுந்தரியின் மனம் சரியான பிறகு புறப்பட்டிருக்கலாமே...?'

இப்படி ஒரு நினைப்பு! மறுபடியும் படி தட்டியது!

''என்ன இது! கால் இப்படிச் சருக்குகிறதே!' என்று நினைத்தானோ இல்லையோ, வில்வநாதனுக்குத் தன் தந்தையின் ஞாபகம் வந்து விட்டது!

''வாழ்க்கைப் பாதையிலே காலை நன்றாக ஊன்றி நடந்து செல் மகனே!'' என்று நினைவுச் செவியிலே தந்தை மந்திரோபதேசம் செய்தார்!

'ஆம்! என் கால் தவறி விடாமல் நான் நடக்க வேண்டும்! உண்மை! ஆனால் நிர்க்கதியாக நிற்கும் அந்தப் பேதைப் பெண் என்ன ஆவாள்? ஈவு இரக்கம் இல்லாமல் நான் இதயத்தைக் கல்லாக்கிக் கொள்ளவேண்டுமா? மனித அபிமானம் என்று ஒன்று இருக்கக் கூடாதா எனக்கு?'

இப்படி ஒரு சிந்தனை எழுந்து வில்வநாதனுடைய நெஞ்சைச் சூழ்ந்து கவிந்தது.

'மனித அபிமானம்! மனித அபிமானம்! ஆனால் இது மனித அபிமானம் தானா? உண்மையில் செண்பக சுந்தரியிடம் எனக்கு ஏற்பட்டுள்ள இந்த அனுதாபம் வெறும் மனித அபிமானம்தானா? இரக்கமும் அபிமானமும்தானா இத்தனை தூரம் என்னை வேதனை செய்கின்றன!'

குழம்பிக் குழம்பித் தள்ளாடிக் கொண்டே மலையின் படிகளிலே ஏறினான் வில்வநாதன்! ஆனால்....மலையடிவாரத்திலோ?...

மலையடிவாரத்திலிருந்த குமுதவல்லியின் வீட்டிலிருந்து கிளம்பிய வல்லாளவேலரின் வில்வண்டி, ஒரே வேகமாகச் சாலையிலே ஓடியது. குண்டுகுழிகள், மேடு பள்ளங்கள், இண்டு நொடிகள் ஒன்றையும் சட்டை செய்யாமல் 'தட தட' என்று ஓடியது அந்த வண்டி! இருபுறமும் மரங்களும், வயல்களும், பனைவிடலிகளுமாக இருந்த அந்த வளமான சூழலிலே, வல்லாளவேலரின் வில் வண்டி ஒரு சர்வாதிகாரமான கம்பீரத்தோடு சாடிச் சென்று கொண்டிருந்தது! அந்தக் கம்பீரத்தைப் பார்த்தால், வல்லாளருடைய உள்ளத்தில் அப்போது எத்தகைய வெற்றிக் குதூகலம் கூத்தாடிக் கொண்டிருந்தது என்பதை யாரும் ஊகித்து விடலாம்!

ஆம், வில்வநாதனை அங்கே பார்த்தது ஒன்றே அவருக்குப் போதும்! அதற்கு மேல் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து அவர் ஒரு விநாடி கூடத் தாமதிக்க விரும்பவில்லை! வில் வண்டி அப்படி ஓடியது, அத்தனை வேகத்தோடு!

ஏலமலை வட்டாரத்துக்கு அருகிலேயிருந்த மருதச் சாலையிலே வண்டியை நிறுத்தி விட்டுச் சற்றுத் தொலைவிலே போய்த் தனியாக நின்று கொண்டார் வல்லாளர்! குதிரைச் சவாரி போய் விட்டு இளைய ஜமீந்தார் அரமனைக்குத் திரும்பி வருகிற நேரம் அது! அவர் வருகிற பாதையிலேயே பார்வையை நிறுத்திக் கொண்டு நின்றார் வல்லாளர்!

'கட் கட் கட்' என்று பூமிக்கும் ஆகாசத்துக்குமாகத் தாளம் பேசிக் கொண்டே பறந்து வந்தது ஏலமலைக் குதிரை! வில்வண்டியை எங்கேயோ நிறுத்தி விட்டுத் தன்னந்தனியாக வல்லாளவேலர் நின்று கொண்டிருந்த நிலையைப் பார்த்ததும், பொன்னுத்துரை அப்படியே குதிரையிலிருந்து கீழே குதித்தான்!

''சித்தப்பா! என்ன இப்படி இங்கே நின்றுகொண்டிருக்கிறீர்கள் தனியாக!'' என்று பதற்றத்தோடு கேட்டான் பொன்னுத்துரை!

''பொறுப்பேற்றுக் கொண்ட காரியம் இரண்டில் ஒன்று ஆகிற வரை எனக்கு இருப்பு ஏது? நீங்கள் இளம் பிள்ளை! குதிரையிலே சுற்றுகிறீர்கள்! எனக்கு உட்காரவே முடியவில்லை!''

இப்படிப் போட்டார் வல்லாளர்!

''சித்தப்பா! என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்!''

''தம்பீ! அரமனைக்குள்ளிருந்து பேச வேண்டிய செய்தி இல்லை இது! அத்தனை இரகசியம்! அதனால்தான் நீங்கள் திரும்பி வருகிற வழியிலேயே பார்வையாக நின்று கொண்டிருக்கிறேன்!''

வல்லாளர் இப்படிச் சொல்லிக் கொண்டே பொன்னுத்துரையின் அருகிலே சென்றார். குதிரையின் லகானை ஒரு கையிலே பிடித்துக் கொண்டே பொன்னுத்துரை ஒரே ஆச்சரியத்தோடு வல்லாளரைப் பார்த்தான்.

''தம்பீ! 'நமதே ராஜ்யம், அடைந்தே தீருவோம்' என்று யார் யாரோ தெருவிலே சத்தம் போட்டுக் கொண்டுபோகிறார்களே, இப்போது உண்மையில் நாம் தான் அப்படிச் சத்தம் போட வேண்டும்! தெரிந்ததா? நமதே ராஜ்யம், அடைந்தே தீருவோம்!''

இப்படிச் சொல்லிக் கொண்டே ஒரு குதி குதித்தார் வல்லாளர்.

''சித்தப்பா!'' என்று குழப்பத்தோடு பார்த்தான் பொன்னுத்துரை.

''தம்பி! சிங்கம்புத்தூர் ராஜ்யம் நமதே! அதை அடைந்தே திருவோம்!''

இப்படி ஓங்கி அடித்தார் வேலர்!

பொன்னுத்துரை மேலும் குழப்பத்தோடு அவரைப் பார்த்தான்.

''தம்பி! வில்வநாதன் சரியான இடத்தில் சிக்கி விட்டான்! இனி நம்முடைய காரியம் முடிந்தது என்று வையுங்கள்!''

''சித்தப்பா! நீங்கள் கேள்விப்பட்டது உண்மைதானா? சரி பார்த்து விட்டீர்களா?'' என்று ஆவலோடு கேட்டான் பொன்னுத்துரை.

''தம்பி! நாம் வலையை விரிப்பதற்கு முன்னமேயே அவனாகவே வலையிலே வந்து சிக்கிக் கொண்டு விட்டான்! குமுதவல்லியின் வீட்டிலேயே ஆசாமியைப் பார்த்து விட்டேன்!''

வல்லாளர் இப்படிச் சொன்னதும் பொன்னுத்துரையின் முகம் மலர்ச்சி அடைந்தது.

''சித்தப்பா! அப்படியானால் அடுத்தபடி என்ன யோசனை?'' என்று கேட்டான் துரை.

''தம்பி! கொக்கின் தலையிலே வெண்ணெயை வைத்துப் பிடிப்பது என்கிற காரியம் கூடாது. ஜமீந்தாருடைய குணம் சேற்றிலே நட்டுவைத்த கம்பைப் போல! எந்தப் பக்கம் சாயும் என்று உறுதி சொல்ல முடியாது! ஆகையினால் இந்தப் பயலை ஒரே போடாக ஒழித்துக் கட்டி விடுவதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது!''

இப்படிச் சொன்னார் வல்லாளவேலர்.

''சித்தப்பா! நீங்கள் சொல்வது எனக்குச் சரியாகப் புரியவில்லையே!'' என்றான் பொன்னுத்துரை.

''தம்பி! குறிப்பிட்ட ஒரு நாளில், குறிப்பிட்ட ஓர் இடத்துக்கு அவனை வரும்படியாகச் செய்வதற்குக் குமுதவல்லியைத் தவிர நமக்கு நம்பிக்கையானவர் வேறு யார் உண்டு? அப்படிச் செய்து விட்டால் பிறகு நம்முடைய காரியம் காதும் காதும் வைத்தாற் போல் நடந்து விடும்!''

வார்த்தைகளை மெதுவான குரலில் நிறுத்தி நிறுத்திச் சொன்னார் வல்லாளர்.

''அது சரி சித்தப்பா! அந்தப் பையனுக்குச் செண்பகசுந்தரியிடம் உறவு ஏற்பட்டு விட்டால் அது ஒன்றே போதுமே நமக்கு! ஜமீந்தார் மாமாவின் மனம் மாறுவதற்கு அந்த ஒரு காரணம் போதாதா!''

பொன்னுத்துரை இப்படிக் கேட்டதும் வல்லாள வேலர் 'கடகட' என்று சிரித்தார். சொன்னார்:

''தம்பி! அந்தச் சித்திரக்காரனுக்குப் பெண் பார்த்துக் கொடுக்கவா நாம் கிளம்பியிருக்கிறோம்! என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்! அந்தப் பையன் இந்த வட்டாரத்தில் வளைய வருகிற வரையில் நமக்கு நிம்மதி இருக்குமா? அவனைத் தொலைத்துக் கட்டுவதற்கு வழிசொல்ல வருகிறேன் நான். நீங்களானால் ஏதேதோ பேசுகிறீர்களே!''

வல்லாள வேலர் இப்படிச் சொன்னதும் பொன்னுத்துரைக்கு மறுபடியும் சித்தம் குழம்பியது.

''சித்தப்பா! அவனைத் தொலைப்பதற்கு இப்போது என்ன அப்படிப் புதிய வழியைக் கண்டு பிடித்து விட்டீர்கள்?'' என்று கேட்டான்.

''தம்பீ! நந்தவனத்தில் ஓர் ஒதுக்கமான இடத்துக்கு இந்தப் பையனை வரும்படியாகச் செய்ய வேண்டும்! இரவு நேரமாக இருக்க வேண்டும்! மரமும் செடியும் அடர்ந்த புதர்க்காடான இடமாகவும் இருக்க வேண்டும்! அப்போது, எங்கோ ஒரு மறைவிலிருந்து 'டுமீல்' 'டுமீல்' என்று சத்தம் கேட்கும்! அவ்வளவுதான்! ஆட்டம் குளோஸ்!''

வல்லாள வேலருடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பொன்னுத்துரை தனது கண்களை இறுக மூடிக் கொண்டு விட்டான்.

''சித்தப்பா! பயங்கரமாக இருக்கிறதே நீங்கள் சொல்லுவது!''

வல்லாளர் சிரித்தார்!

''தம்பி! இதுவே இப்படிப் பயமாக இருக்கிறதா உங்களுக்கு! அப்படியானால் அடுத்த யோசனையைச் சொன்னால் நீங்கள் மயக்கம் போட்டு விழுந்து விடுவீர்கள் போலிருக்கிறதே!''

''அது என்ன அடுத்த யோசனை?'' என்று கேட்டான் பொன்னுத்துரை.

''குதிரை லகானை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள்! கீழே விழுந்து விடாமல் பிடித்துக் கொள்ளுங்கள்! சொல்லுகிறேன்...!''

இப்படிச் சொல்லிச் சிரித்துக் கொண்டே, வல்லாளர் தொடர்ந்து சொன்னார்:

''மகளுக்கும் தாயாருக்கும் நடுவில் இந்தப் பையனைக் காரணமாக வைத்து ஒரு பெரிய சண்டையை உண்டாக்க வேண்டும். அதற்கு வித்து இன்றைக்கே ஊன்றியாகி விட்டது! இந் நேரம் சண்டை நடந்து கொண்டிருக்கும்! அதற்காகவே நான் தலையைக் காட்டி விட்டுப் பேசாமல் வந்து விட்டேன். இனிமேல் நாளுக்குநாள் இந்தச் சண்டை முற்றிக்கொண்டே வரும்போது, தாயாரைக் கொண்டே இந்தப் பையனைத் தீர்த்துக் கட்டி விட வேண்டும்! இதுவே என்னுடைய இரண்டாவது யோசனை!''

பொன்னுத்துரை குழப்பம் மேலிட்டவனாகக் கேட்டான்:

''சித்தப்பா! குமுதவல்லியைக் கொண்டு எப்படி இதை நிறைவேற்றுவது...?''

''தம்பி! அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு இல்லை! அது எனக்கு! தெரிந்ததா? நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமோ? அதைச் சொல்வதற்காகத்தான் நான் இத்தனை அவசரமாக இங்கே வந்தேன். நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், இன்னும் இரண்டு நாட்களில் கல்கத்தா, பம்பாய், அல்லது தில்லி இந்த மூன்று ஊர்களில் ஏதாவது ஓர் ஊருக்குப்புறப்பட்டுப் போய், நல்ல பெரிய ஹோட்டலாகப் பார்த்து அங்கே தங்கியிருக்க வேண்டும்! நாளைக்கே சிங்கம்புத்தூருக்குப் போய் உங்கள் மாமாவிடம் விடைபெற்றுக் கொள்ள வேண்டும்! எதற்காக அங்கே போகிறீர்கள் என்பதற்கு ஒரு சரியான காரணம் யோசித்து அவர்களிடம் சொல்ல வேண்டும். செண்பக நாயகித் திருவிழாவுக்கு ஒரு வாரம் இருக்கும் போது, நீங்கள் இங்கே திரும்பி வந்தால் போதும்! அதற்குள் இங்கே ஆக வேண்டிய காரியங்கள் எல்லாம் முறைப்படி நடந்து விடும்! அதுவரை நீங்கள் வெளியூரிலிருந்தீர்கள் என்பதற்கு ஹோட்டலில் ரிகார்ட் வேண்டும்! அது ரொம்ப முக்கியம்! வக்கீல் குமாஸ்தா பஞ்சவர்ணம் இது விஷயத்தில் மிகவும் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார். தெரிந்ததா?''

வல்லாளர் இப்படிச் சொன்னதும் பொன்னுத்துரை பரிதாபமாகப் பார்த்தான் அவரை!

''சித்தப்பா! என்னென்னவோ சொல்லுகிறீர்களே! எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறதே!''

வல்லாளருக்கு இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பில் ஒரு சிறு தாபமும் இருந்தது.

''தம்பி! உங்களைத் தயார் பண்ணுவதே பெரும்பாடாக இருக்கும் போல் இருக்கிறதே! சரி. நீங்கள் குதிரையிலே ஊருக்குப் போங்கள். நான் நாளைக் காலையில் பஞ்சவர்ணத்தோடு அரண்மனைக்கு வருகிறேன். உங்களுக்கு ஒத்திகை செய்வதற்கு அவர் ஒருவர்தான் சரியான பேர்வழி! அவரையே கூட்டிக் கொண்டு வந்து சேருகிறேன். நீங்கள் புறப்படுங்கள்!''

இப்படிச் சொல்லிப் பொன்னுத்துரையை அனுப்பி விட்டு, வில் வண்டியை நிறுத்தியிருந்த சாலையை நோக்கி நடந்தார் வல்லாள வேலர்.

'இவனுக்காக நாம் இத்தனை தூரம் யுத்த களத்தில் இறங்கி வேலை செய்கிறோம், இவனோ இப்படி அசடாக இருக்கிறானே!' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டே வில்வண்டியில் ஏறினார் வல்லாளர்! வண்டிக்காரன் சாட்டையைச் சுண்டுவதற்குள், 'தட தட' என்று சாட ஆரம்பித்தது வண்டி! மருத மரங்கள் சூழ்ந்து நின்ற அந்த அடர்த்தியான சாலையிலே, ஒரே வேகமாகப் பாய்ந்து சென்றது வில் வண்டி! ஏரிக்கரையோரமாக ஓடி ஒரு பெரிய வளைவிலே திரும்பி, மறுபடியும் சாலையிலே செல்லத் தொடங்கிற்று. அப்போது 'மடமட' என்று எங்கிருந்தோ வண்டியின் கூண்டுக்கு மேலே தொடர்ச்சியாகக் கற்கள் வந்து விழுந்தன! 'என்ன அது' என்று வல்லாள வேலர் யோசிப்பதற்குள், சரமாரியாக வந்து பொழிந்தது கல் வரிசை! (தொடரும்)


ரெமி
கேஸ்டர்
ஹேர்
ஆயில்
CASTOR
HAIR OIL
கூந்தல்
வளர்ச்சிக்கு

ஸர் தாமஸ் மன்ரோ

சென்னை நகரில் கலைத் திறனோடு கம்பீர மாகத் தோற்றமளிக்கும் சிலை ஒன்று உண் டென்றால், அது, ஸர் தாமஸ் மன்ரோவின் சிலை என்றே கூற வேண்டும்.

குதிரை மீது அமர்ந்த முறையில் போர் வீரர்களுக்குச் சிலை அமைப்பது தான் எங்கும் வழக்கம். ஆனால், அந்த வழக்கத்தையொட்டி அமைக்கப்படவில்லை மன்ரோவின் சிலை. ஈக் வெஸ்டிரியன் (Equestrian) எனப்படும் பாணி யில் புராதன கால ரோமர்களின் சிற்ப சாஸ் திரத்தை யொட்டி உருவாக்கிய சிலையே இது.

போர்வீரனாக இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, உயர்ந்த குணம் உடையவர் களைக் குதிரை மீது அமரச் செய்து, ரோமாபுரி அரசர்கள் தங்களுடன் சமமாக அழைத்துச் செல்வது வழக்கம். அரசனோடு சமமாகக் குதிரை மீது செல்லும் கௌரவம் எல்லோருக் குமே எளிதில் கிடைத்து விடாது. இந்த மதிப்பை ஒருவர் அடைய வேண்டுமானால், அவர் புகழ் பெற்ற அறிவாளியாகவும், நடத் தையில் சிறந்த பண்பாளராகவும் திகழ வேண் டும். இவர்களுக்கே அந்த மரியாதை கிடைக் கும். இவர்கள் இறந்தபின் குதிரை வாகனத் தில் இவர்கள் வீற்றிருப்பது போல் அரசர்கள் சிலை செய்து வைப்பார்கள். இவ்விதச் சான் றோர் சிலைகளுக்குத்தான் ஈக்வெஸ்டிரியன் சிலைகள் என்று பெயர்.

இன்று, உலகிலேயே நாலைந்து இடங்களில் தான் ஈக்வெஸ்டிரியன் சிலைகள் இருக் கின்றன. அவற்றுள், சென்னை நகர் நுலைந்துத் திடல் பக்கமிலுள்ள மன்ரோ சிலையும் ஒன்று. இந்தச் சிலை விஷயத்தில் மன்ரோவின் வர லாறு மட்டுமல்ல, இந்தச் சிலையைச் செய்து முடித்த சிற்பியின் கதையும் ஆச்சரியமானது. இவருடைய பெயர் 'சான்ட்ரி' என்பதாகும்.

சிலைகளைப் பற்றி யாரும் குறைகூறியதில்லை. ஆனால், இந்த அரைகுறை ரசிகர்கள், மன்ரோ சிலை குறித்து வெளியிட்ட விமரிசனங்களைக் கேட்டுச் சிற்பி அதிர்ச்சி தாளாமல் மனம் ஒடிந்து போனார். இந்த அதிர்ச்சியில் படுத்த வர் பிறகு எழுந்திருக்கவில்லை. ஒரு சாரார் சிற்பி சான்ட்ரி, மனவருத்தம் தாளாமல்தான் உயிரை மாய்த்துக்கொண்டுவிட்டார் என்றும் கூறுவார்கள். அவர் உயிர் விட்டது எப்படி யிருப்பினும், உயிர் வாழ்ந்தது மட்டும் கலைக் காகவே என்பது மட்டும் நிச்சயமாகத் தெரி கிறது. இவ்வாறு, சிறந்த கலைஞனின் வர லாறு ஒன்றும் மன்ரோ சிலையில் கலந்து நிற் பதைக் காண்கிறோம்.

மன்ரோவின் வரலாறு இன்னும் பிரமிப் பூட்டுவதாகும். இங்கிலாந்திலுள்ள கிளாஸ்கோ நகரில் 1761-ம் ஆண்டு மே மாதம் 27-ந் தேதி பிறந்தார் மன்ரோ. இவ ருடைய தந்தை ஒரு வர்த்தகர். ஓரளவு கல்விப் பயிற்சி பெற்ற பின், பிரிட்டனி லிருந்த மேற்கத்திய வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் குமாஸ்தாவாக அமர்ந்தார் மன்ரோ. இந்தியாவில் ராணுவ சேவையில் சேரு மாறு இவருக்கு அழைப்பு வந்தது. அதன்படி ஒரு சிப்பாயாகச் சென்னை நகரத்தில் முதன் முறையாக 1780-ம் ஆண்டு ஜனவரியில் வந் திறங்கினார். அவர் இங்கு வந்தபோது, நாட் டின் சிற்சில பகுதிகளில் கிழக்கிந்தியக் கம் பெனி டைரக்டர்களே ஆட்சி செய்து வந் தார்கள். இந்த வர்த்தகர்களில் பெரும்பா லோர், வியாபாரம் செய்த நேரம் போக மீதி நேரத்தில் ராணுவ உடை தரித்துப் படையின ராகவும், நிர்வாகம் செய்பவர்களாகவும் விளங்கி வந்தார்கள். இதன் விளைவு எப்படி இருக்குமென்பதை விவரிக்கத் தேவையில்லை.

கலைக்காகவே உயிர் வாழ்ந்து கலைக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து கொண்ட சிற்ப வல்லுனர் இவர். ஐரோப் பிய நாடுகளில் பிரபலமாக விளங் கிய சிற்பிகளில் இவரும் ஒருவர்.

மன்ரோ சிலையைக் கப்பல் மூலம் சென்னைக்குக் கொண்டு வந்து நிலைநிறுத்திய பின், இதை 'ஆங் கிலேய ரசிகர்கள்' பார்த்து விட்டு இங்கிலாந்துக்குத் திரும்பினார்கள். அங்கு அவர்கள் இந்தச் சிலையைப் பற்றி இல்லாத பொல்லாத குறை களையெல்லாம் வெளியிட்டு வம் பளந்தார்கள். ''சிலையில் அப்படி யொன்றும் கலைத் திறமை ததும்பி விடவில்லை! இங்கும் அங்கும் குறைகள் இருக்கின்றன! மொத் தத்தில் ஏதோ 'பரவாயில்லை, சுமார்' என்று வேண்டுமானால் இந்தச் சிலை அமைப்பைப் பற்றிக் கூறலாம்!'' என்று விமரிசனம் செய்தனர்.

அதுவரை யில் சான்ட்ரி உருவாக்கிய



மன்ரோ, விரைவிலேயே பிரிட் டிஷ் சேனையிலிருந்த சில நல்ல அதி காரிகளின் கவனத்தைப் பெற்று, ஒரு படைத் தலைவனாகப் பொறுப் பேற்றார். அப்போது, மகாராஷ் டிரர்கள் அந்நிய ஆட்சிக்கு எதி ராகக் கிளர்ந்தெழுந்து நின்ற சம யம்.. மன்ரோவின் தலைமையில் ஐந்நூறு பேர் கொண்ட பட்டா ளம் ஒன்று மகாராஷ்டிரத்துக்கு அனுப்பப்பட்டது. அதிலே, மன்ரோ அடைந்த வெற்றி வியப் பூட்டக் கூடியதாகும்! இந்த வெற் றியைக் குறித்து பிரிட்டிஷ் பார்லி மெண்டு சபையில் 'காலிங் பிரபு' என்பவர் புகழ்ந்துரைக்கும்போது, ''போர்த் திறனிலும், எண்ணிக் கையிலும் பலம் பொருந்தி விளங் கிய மகாராஷ்டிரர்களுக்கு மத்தி யில் ஐந்நூறு, அறுநூறு பேர்களே கொண்ட சிறியதொரு படை யுடன் மன்ரோ புகுந்தார். தமது அன்பு, நல் லெண்ணம் இந்த நற் குணங்களை ஆயுதமாகக்

கொண்டு மகாராஷ்டிரர்களின் இதயத்தையே வென்று விட்டார். இப்பேர்ப்பட்ட ஒரு ஞான வீரன் இன்று உலகில் எங்கு தேடினாலும் கிடைப்பது அரிது'' என்று புகழ்ந்துரைத்தார்.

ஸர் தாமஸ் மன்ரோவின் குணச் சிறப்பு இங்கிலாந்தில் பரவியதும், இந்தியாவில் கம்பெனியாரின் நிர்வாகத்தைப் பற்றி அபிப்பிராயம் கூற வருமாறு, இவரைப் பிரிட்டிஷ் அரசினர் அடிக்கடி அழைத்துச் சென்றனர்.

அப்படிச் செல்லும் போது ஒவ்வொரு முறையும் மன்ரோ, இங்கு கம்பெனி நிர்வாகத்தில் இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துரைக்கத் தயங்கவில்லை. இந்த அநீதிகளைப் போக்க என்னென்ன செய்ய வேண்டும் என்று யோசனைகளும் கூறினார். அவற்றில் அநேக யோசனைகளை பிரிட்டிஷ் ஆட்சியினர் ஏற்றனர்.

''இந்தியாவில், நமது அதிகாரத்தை அதிக இடங்களில் பரவச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு, இப்போது நமது ஆளுகைக்கு உட்பட்ட சிற்சில இடங்களில் அதிக நல்லெண்ணத்தைப் பரவச் செய்தாலே போதும்'' என்று வெளிப்படையாகவே உரைத்து வந்தார் மன்ரோ. இவருடைய அறிவாற்றலை நிர்வாகத் துறையில் பயன்படுத்திற்று அரசாங்கம். ஆந்திரத்தில் ராயலசீமை என்று கூறப்படும் பகுதியை ஹைதராபாத் மன்னர் ஆங்கிலேயரின் பொறுப்பில் விட்டுக் கொடுத்தார். இந்தப் பகுதிக்கு மன்ரோ கலெக்டராக நியமிக்கப்பட்டார். ராயலசீமைப் பகுதியில் விவசாய வளர்ச்சிக்கும், கல்விக்கும் மன்ரோ மிகவும் பிரயாசையுடன் பாடுபட்டதாகத் தெரிகிறது. 1820-ம் ஆண்டு இவரைச் சென்னை கவர்னராக நியமித்தார்கள். இந்தப் பதவியில் மன்ரோ கடைப்பிடித்த கொள்கைகள் இதர மாகாணங்களுக்கும் வழிகாட்டுவதாக அமைந்திருந்தன.

முதன் முதலில் சென்னை மாகாணத்தின் எல்லையை நிர்ணயித்து அதற்கு ஓர் உருவம் அளித்தவர் இவர்தான். விவசாயத் துறையில் இவர் செய்த சீர்திருத்தங்களில் முக்கியமாக 'ரயத்துவாரி' திட்டத்தைக் குறிப்பிட வேண்டும். விவசாயிகளுக்குத் தங்கள் நிலத்தில் சகல உரிமைகளையும் அளிப்பது இந்த ரயத்துவாரித் திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். பிறர் குறுக்கீடு, தலையீடு, அதிகாரிகளைக் குறித்த பயம் இவை இல்லாதிருந்தால் தான் விவசாயிகள் தங்களது நிலத்தில் கவலையின்றிச் சிரத்தை செலுத்துவார்கள் என்ற கருத்தை மன்ரோ பல சந்தர்ப்பங்களில் வெளியிட்டு வந்தார். இந்தியாவில் பிரபலமாகி யிருந்த கிராமப் பஞ்சாயத்து முறையை இவர் மிகவும் பாராட்டியதோடு, அந்தத் திட்டங்களை உயிர்ப்பிக்கவும் பாடுபட்டார்.

கல்வி வளர்ச்சியில் இவர் மேற்கொண்ட ஊக்கம் கொஞ்சநஞ்சமல்ல. இந்தியர்களின் கல்வி அறிவு, உயர்ந்த மனப்பான்மை இவற்றைப்பல பல சமயங்களில் வாயாரப் புகழ்ந்து விட்டு, இங்கு கல்விப் பிரசாரம் செய்ய வந்த பாதிரிகளுக்கு, ''கற்றுக் கொடுக்கும் நோக்கத்தோடு, கற்றுச் செல்லும் நோக்கமும் கொள்ளுங்கள். நாம் கற்றுச் செல்ல வேண்டிய விஷயங்கள் இங்கு அளவற்று இருக்கின்றன'' என்று நினைப்பூட்டி வந்தார். திரு மன்ரோ ஹிந்துஸ்தானி, பாரசீகம் ஆகிய மொழிகளிலும் தேர்ந்திருந்தார். சம்ஸ்கிருதத்திலும் அவர் கொண்டிருந்த ஆர்வம் கொஞ்சமல்ல. இவை அவர் இங்கிலாந்திலிருந்த தமது சகோதரிக்கும், மற்ற உறவினர்களுக்கும் எழுதிய கடிதங்களிலிருந்து தெரிய வருகின்றன.

திரு மன்ரோ அவர்கள் சிறந்த இலக்கியச் செல்வராகவும் விளங்கி வந்தார் என்பதற்கு அவர் எழுதிய கடிதங்களின் கருத்தழகும், எளிய நடையுமே சான்றாகத் திகழ்கின்றன.

அவர் காலத்திலேயே இந்தியாவில் ஒன்றிரண்டு பத்திரிகைகள் தோன்றியிருந்தன. அதிகாரிகளின் தவறான போக்குகளைக் கண்டித்து அந்தப் பத்திரிகைகள் எழுதி வந்தன. இதைப் பற்றி மன்ரோவிடம் சில அதிகாரிகள் புகார் செய்தனர். மன்ரோ அவர்களுக்கு அளித்த அறிவுரையில் ''உங்கள் குறைகளைப் பத்திரிகைகள் எடுத்துரைப்பது பற்றி வருத்தப் படுவதற்குப் பதிலாக, அவற்றுக்கு நன்றி செலுத்துவதே பொருத்தமா யிருக்கும். நிர்வாகம் நன்றாக நடைபெற, இவ்வாறு தைரியமாகத் தங்கள் கருத்துக்களை வெளியிடும் பத்திரிகைகளின் சேவையே தேவை'' என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

நாற்பத்தேழு ஆண்டு நீடித்துச் சேவை செய்து விட்டபடியால் தாம் களைத்து விட்டதாகவும், தாய் நாடு திரும்ப வேண்டும் என்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அவர் கடிதம் எழுதினார். கவர்னர் பதவிக்குத் தகுந்த ஒருவர் கிடைக்கும்வரை சற்றே பொறுத்திருக்குமாறு அரசாங்கம் அவரைக் கேட்டுக் கொண்டது.

மன்ரோ தமது மனைவியுடனும், மூன்று வயதே நிரம்பிய ஒரே மகனுடனும் சென்னை நகர் கிண்டியிலுள்ள கவர்னர் மாளிகையில் தான் வசித்து வந்தார். தாய் நாடு திரும்பும் நாளை ஆவலோடு எதிர்பார்த்து எதிர்பார்த்து அவரது மனைவியார் ஏக்கமுறத் தொடங்கினார்: இதைக் காண மன்ரோவின் மனமும் கலங்கிற்று. அருமை மனைவியின் உடல் நலனைக் கருதி, மனைவியையும் மகனையும் இங்கிலாந்துக்குக் கப்பலேற்றி அனுப்பி வைக்கத் தீர்மானித்தார். அதன்படி, சென்னையிலிருந்து புறப்பட்ட மறு கப்பலில் மனைவியையும் மைந்தனையும் ஏற்றி வழி அனுப்பி வைத்தார் மன்ரோ. இங்கிலாந்து சென்ற மனைவிக்கு மன்ரோ எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:—

''அன்பே! கப்பலில் உன்னையும் மைந்தனையும் வழி அனுப்பி வைக்கும்போது நான் செயலற்றவனாகவே தவித்தேன். பிரிவாற்றாமையின் கொடுமைதான் என்ன! கப்பல் புறப்படுவதற்கு ஆயத்தமாகி விட்டது. அதன் நூலேணியை உயர்த்துவதைக் கரையிலிருந்து பார்த்தேன். அந்தக் காட்சி என் மனத்தில் விவரிக்க வொண்ணாத துயரை வளர்த்துக் கண்களை இருள் திரையால் மூடிற்று. அந்த நிலைமையில் கிண்டி மாளிகைக்கு நான் எப்படித்தான் திரும்பினேனோ தெரியவில்லை. மாளிகையில் நுழைந்ததும் நீ இல்லாமல் எல்லாமே வெறிச்சென்று இருந்தன. மரங்களின் அசைவற்ற நிலையும் அவற்றின் அடியில் பரவிக் கிடந்த கருநிழலும் என் தனிமையின்

சோகத்தை இன்னும் வளர்த்தன. கிணற்றடி வழியாக நடந்தேன். அங்கு என்றுமில்லாத ஒரு பயங்கர நிசப்தமும் இருளும் குடி கொண்டிருந்தன. மாளிகையில் கலகலப்பும், உற்சாகமும் மறைந்து எந்த அறைப் பக்கம் பார்த்தாலும் ஒளி இழந்த தோற்றம் உள்ளத்தைத் துன்புறுத்திற்று. தத்தி நடந்து விளையாடும் மகனின் அறைக்குள் இருந்து வந்த சிரிப்பொலியும், பொலிவும் மாயமாய் மறைந்திருந்தன. எல்லாப் பொருள்களும் அப்படி அப்படியே அவன் கைபடாமல் ஏங்கிக் கிடந்த காட்சியைத் தான் கண்டேன். அன்பே, நம் செல்வன் அடிக்கடி ஓடி வந்து என் உடுப்புக்களைத் தாறுமாறாக அள்ளிப் போட்டு விளையாடுவானே! அவனில்லாமல் உடுப்புக்கள் அங்கங்கே கலையாமல் தொங்கிக் கொண்டிருக்கும் காட்சிதான் என்னைத் துன்ப வெள்ளத்தின் ஆழத்திலேயே கொண்டு போய்ச் சேர்க்கிறது. நீ இல்லாத உன் அறைப் பக்கம் செல்லவே எனக்கு மனத்தில் தெம்பு ஏற்படவில்லை. அங்கு ஏதோ பெயரளவுக்கு ஒரு விளக்கு எரிகிறது. ஆனால் அதன் ஒளியிலே உயிர் இல்லை. இந்த நிலைமையில் இந்த மாளிகையில் இருக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. நீ இல்லாத இடம் எப்படி ஒரு மாளிகையாக முடியும்? கவலையுறாதே. விரைவிலேயே நான் உன்னைச் சந்தித்து விடுவேன். செல்வக் குமாரனுக்கும் இதைச் சொல்லவும். 'உன் தந்தை இதோ வந்து விடுவார்' என்று சொல்லி மகிழ்வூட்டிக் கொண்டிரு.'' இவ்விதம் மனைமாட்சி பொங்கும் கடிதம் ஒன்றை எழுதினார் ஸர் தாமஸ் மன்றோ.

பதவியிலிருந்து ஓய்வு பெற்றுத் தாய்நாடு திரும்பச் சில தினங்களுக்குள் உத்தரவு பெற்று விட்டார் மன்றோ. எல்லோரிடமும் விடை பெற ஆயத்தமானார். ராயல சீமை மக்களிடம் விடைபெற்றுக் கொள்ள அங்கு சென்றார். பெல்லாரிக்கடுத்த பட்டி கொண்டா கிராமத்தை அடைந்த போது கொடிய தொத்து நோய் ஒன்று அவரைப் பிடித்தது. காலையில் பற்றிய நோய் அன்று மாலையில் (1827-ம் ஆண்டு ஜூலை 6-ந் தேதி) அவரை இரை கொண்டு விட்டது. அருமை மனைவியையும் செல்வக்குமாரனையும் சந்திக்கக் கிளம்பிய மன்றோ இறைவனடியைச் சந்தித்தார்.

மன்றோ அவர்கள் இறந்த இடத்தில், அவர் நினைவாகக் கிராமவாசிகள் களைப்பாறும் விடுதி ஒன்று கட்டி அதைச் சுற்றிலும் நிழல் தரும் தோப்பு ஒன்றை வளர்த்தார்கள். திரு மன்றோ அவர்கள் மறைவில் இந்திய மக்கள் சிறந்ததொரு ஆங்கிலேய நண்பரை இழந்ததாகக் கருதி ஒருமுகமாக வருந்தினார்கள். பிரிட்டனில் ஏற்பட்ட துயரத்துக்கோ அளவில்லை. பண்பாளர் மன்றோவின் சந்ததியார் இன்றும் இங்கிலாந்தில் அவருடைய புகழின் சின்னமாக விளங்கி நற்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். விவசாயப் பண்ணைகளை நடத்தி வருவதோடு, மன்றோவின் நினைவாகச் சஞ்சிகை யொன்றும் வெளியிட்டு வருகிறார்கள். இவர்கள் தங்களைப் பெருமையோடு ''மன்றோவின் உறவினர்கள்'' என்று சொல்லிக் கொள்வது இயற்கையே. ஆனால், பண்பாளர் உலகம் முழுவதுக்குமே மன்றோவுடன் உறவு உண்டு என்று கூறினாலும் பிழையாகாது. —கதிர்



பவழத்தீவு
18
தவித்தும் உள்ளத்தோடு தலைகீழாகத் தொங்கியபடி, தன் நினைவிழந்து மட்டை மீது மிதந்து வரும் ஆனந்தனை நோக்கி கூவி அழைக்கிறான் கந்தன், வேசுவ டும் தன் கையைப் பற்றிக் கொள்ளும்படி. தெய்வாதீனமாக மயக்கம் தெளிந்து கண் விழிக்கிறான் ஆனந்தன்....
கதை : வாண்டுமாமா
சித்திரம் : ரமணி
அப்பாடா! நல்ல வேளை இனிப் பயமில்லை பிழைத்தாய். ஆனந்தா நீ கண் விழித்து என்னைப் பற்றிக் கொள்ள வேண்டுமே என்று கலங்கிப் போய் விட்டேன்......
மெதுவாகக் கிளையைப் பற்றிக் கொள். பிடி நழுவினால் அவ்வளவுதான்! ஆற்றின் வேகத்தை நம்மால் சமாளிக்க முடியாது.
மெதுவாக நகர்ந்து வா...
கந்தனுக்கு ஆனந்தன்தான் ஆற்றில் மூழ்க நேர்ந்த சம்பவத்தை விளக்குகிறான்........
உன் அம்மா செய்த புண்ணியம்தான் உனக்குச் சரியான சமயத்தில் நினைவு திரும்பியது.
ஆனந்தா, இதெல்லாம் இலபாணியின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசம். இந்த உடையோடு நீ பிரயாணம் செய்வது நல்லதல்ல.
இப்போதே உன்னைப் போல மாறி விடுகிறேன்! போதுமா?


கந்தா! உற்றுக் கேள். ஏதோ கூச்சல் மாதிரி இல்லை.....
இப்போது உன்னை உன் அம்மானினால் கூடச் சட்டென்று அடையாளம் கண்டு கொள்ள முடியாது.
சூழ்நிலையை உற்று உணருவதற்குள் புதர்களின் மறைவிலிருந்து சூலபாணியின் வீரர்கள் தோன்றிச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள்.......
உளவாளிகள்...
தப்பவிடாதீர்கள்..
ஓடி விடப் போகிறார்கள்....
கந்தா! அதோ பார் அந்தக் கிழவன் உட்கார்ந்திருக்கிறான்.
அருகில் சூலபாணியும் இருக்கிறான்...
இந்தச் சிறுவர்கள் யார் என்று தெரியவில்லையா? உருமாறி வந்திருக்கிறானே மங்கள நாகத்தின் மாட்சிமை தங்கிய இளவரசர் இவர்தான் சூலபாணி! கட்டியங் கூறி வரவேற்று உபசரி!
நமது திட்டங்களை எல்லாம் நாசமாக்கிய மோசக்காரப் பயல் இவன் தானா?
வீரத்தினால் அடைய முடியாததை வஞ்சகத்தினால் பெறப் பார்க்கும் பேடி - சூலபாணி என்பவன் நீ தானா?
யாரடா பேடி? பொடிப் பயலே! சூலபாணியின் வீரத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்.



தெரியுமே! பெண்களைக் கொண்டு போய்ச் சிறை வைப்பதிலும், கட்டி வைத்துக் கன்னத்திலடிப்பதிலும் அசகாய சூரன் என்று தெரியாதா?
சூலபாணி! இந்தப் பயல் நம்மிடம் வந்து சிக்கியதும் ஒரு நன்மைக்குத்தான். நமக்கு இணங்கி வராத அந்த மடையன் மகிபாலனை இவனைக் கொண்டு பணிய வைக்கலாம்.
இவ்விருவரின் கை கால்களைக் கட்டி ஒரு கூடாரத்தில் சிறை வையுங்கள்.....
ஆனந்தா, என்ன சோர்ந்து போய்விட்டாய்?
கைதியானதற்காகச் சோர்வடையவில்லை சுந்தா. என் சிந்தனையெல்லாம் அந்தக் கிழவனைப் பற்றியே தான். அவன் குரல் மிகவும் பழக்கப்பட்டதாக இருக்கிறது. ஆனால் எங்கே கேட்டேன் என்றுதான் நினைவுக்கு வரவில்லை.
ஆனந்தா! இதோ என் தோழன் நம்மை விடுதலை செய்து அழைத்துப் போக வந்து விட்டான். இதன் கூரிய பற்களுக்கு இந்தக் கட்டுகள் ஒன்றும் பிரமாதம் இல்லை.
சுந்தா! நான் விடுதலையை விரும்பவில்லை. கிழவனின் பேச்சிலிருந்து அவர்கள் நம்மை நாளைக்கு என் அப்பாவிடம் அழைத்துப் போகப் போகிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே....
ஆனந்தன் எதிர்பார்த்தபடியே மறுநாள் காலை இருவரையும் எங்கோ கொண்டு போனார்கள். முடிவில்...
அந்தப் பாதாளச் சிறைக்குள் தள்ளுங்கள் இவனை....
சூலபாணியின் கட்டளை நிறைவேற்றப்பட்டது.......
தொடரும்



சுந்தரபுரிஅரசர் மன்மத வர்மருக்கு அன்று தர்பாரில் அலுவல் அதிகமில்லை. ஆகவே எழுந்து செல்ல நினைத்த போது அங்க தேசத்திலிருந்து தூதுவன் வந்திருப்பதாகச் செய்தி வரவே, தூதுவனை வரச் சொல்லி விட்டு மறுபடியும் சிங்காதனத்தில் அமர்ந்து கொண்டார். விறைப்பாக வந்த தூதுவன் மன்னருக்கு வணக்கம்கூடச் சொல்லவில்லை. அரசர் உட்கார்ந்திருந்த சிங்காதனத்தைச் சுற்றிக் கோடு கிழித்து விட்டு அருகிலிருந்த ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டான். அவனது இந்தச் செய்கையின் பொருள் யாருக்கும் விளங்கவில்லை.

மந்திரியோ மன்னரோ கேட்ட எந்தக் கேள்விக்கும் அவன் பதில் சொல்லவில்லை. அரசருக்கு அவன் மௌனம் ஆத்திரத்தை உண்டாக்கிற்று. ஆனால் அவனைக் கோபிக்கவோ அவமதிக்கவோ அவரால் முடியவில்லை. அங்க நாட்டரசன் விடுகதைகளாகவும் பாடல்களாகவும் சங்கேதக் குறிகளாகவும் தம் கருத்தை அனுப்புவது வழக்கம் என்று மன்மதவர்மர் கேள்விப்பட்டிருக்கிறார். மன்னருக்குக் கடுங்கோபம். தூதுவனோ சிங்காதனத்தை விட்டு எழுந்திருக்க முடியாதபடி கோடு கிழித்து விட்டான். அவனுக்குப் பதில் சொல்லி விட்டல்லவா அவர் எழுந்திருக்க வேண்டும்?

மந்திரிகள் பிரதானிகள் தவிப்போடு நாட்டின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் ஓடினார்கள். அங்க நாட்டுத் தூதுவனுடைய செய்கையின் பொருள் அறியக் கிராமம், கிராமமாக, வீதி வீதியாக, வீடு வீடாக ஏறித் தேடினார்கள்.

ஊரின் மூலையிலே ஒதுக்குப் புறமான ஒரு குடிசை. அதில் எந்த அறிவாளி இருக்கப்போகிறான் என்று திரும்ப நினைத்த மந்திரியை அதனுள்ளிருந்து வந்த இனிய கீதம் தடுத்து நிறுத்தியது. வியந்தவாறு குடிலை நோக்கி நடந்தார்.

மௌன நாடகம்

மெள்ள உள்ளே எட்டிப் பார்த்தார். நடுத்தர வயதுடைய ஒரு மனிதன். உழைப்பால் உரம் ஏறிய உடல். தறியின் முன்னே உட்கார்ந்து துணி நெய்து கொண்டிருந்தான்.

மந்திரி அவனிடம் சுருக்கமாகத் தான் வந்த காரணத்தை விளக்கினார். முருகன் என்ற அந்தச் சேணியன் ஒரு நிமிஷம் யோசித்தவாறு இருந்தான். பிறகு சிரித்துவிட்டு, ''வாருங்கள், அரண்மனைக்குப் போகலாம்'' என்று கிளம்பினான். வெளியே வந்ததும் கூடை போட்டுக் கவிழ்த்து மூடியிருந்த தனது கோழியையும் வாசல் மாடப் பிறையில் வைத்திருந்த சொக்கட்டான் காய்களையும் எடுத்துக் கொண்டான். மந்திரிக்கு அவனது செய்கையின் பொருள் புரியா விட்டாலும் ஒரு தைரியம் ஏற்பட்டது.

அரண்மனையில் மன்மதவர்மர் தவித்துக் கொண்டிருந்தார். எத்தனை நேரமாகச் சிங்காதனத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பது? இடுப்பெல்லாம் வலித்தது. மன்னரின் முன்னால் அசையாச் சிலை போல் அந்நிய நாட்டுத் தூதுவன் உட்கார்ந்திருந்தான்.

சேணியன் முருகனோடு மந்திரி உள்ளே வந்தார். முருகன் நிலைமையைக் கூர்ந்து பார்த்தான். பிறகு தன்னிடமிருந்த சொக்கட்டான் காய்களைத் தூதுவன் முன் விட்டெறிந்தான். அதைக் கண்டு உருட்டி விழித்த தூதுவன் தன் மடியிலிருந்து ஒரு பிடி தானியத்தை எடுத்து வாரி இறைத்தான். முருகன் உடனே தான் கொண்டு வந்திருந்த கோழியை எடுத்துக் கீழே விட்டான். கோழி விநாடியில் தானியங்களைக் கொத்தித் தின்று விட்டது. இதைக் கண்ட தூதுவன் பீதியடைந்த முகத்துடன் எழுந்து மன்னருக்குச் சிரம் தாழ்த்தி வணங்கி, அரண்மனையை விட்டு வேகமாக வெளியேறினான்.

இவர்களின் மௌன நாடகம் அங்கிருந்தோருக்கு வியப்பை அளித்தது. முருகன் அங்கு நடந்த மௌன நாடகத்தை விளக்கலானான்.

''அரசே! அங்கநாட்டரசன் செய்தி இது தான். 'நான் என் படைகளை அனுப்பி உங்கள் நாட்டைச் சூழ்ந்து கொண்டால், நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவீர்களா?' என்பதற்கு அடையாளமாகவே தூதுவன் உங்களைச் சுற்றிக் கோடு கிழித்தான். நான் அதற்குப் பதிலாக 'எங்கள் மன்னரோடு ஒப்பிடும் போது உங்கள் அரசர் சிறு குழந்தைக்குச் சமானம். போர்க்களத்திலே அவருக்கு வேலையில்லை. இந்தக் காய்களை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கச் சொல்' என்று பொருள்படும்படி சொக்கட்டான் பொம்மைக் காய்களை உருட்டி விட்டேன். அவன் உடனே தன் அரசர் யுத்தகளத்தில் கொண்டு நிறுத்தும் படைபலத்தை அறிவிக்கும் வகையில் தானியங்களை அள்ளி வீசினான். அதற்குப் பதிலாக, 'உங்கள் பெரும் படையை எங்கள் வீரரில் ஒருவனே அழிக்கும் வல்லமை பெற்றவன்' என்பதை அறிவிக்கும் வகையில் அவன் இறைத்த தானியங்களை என் கோழியைக் கொண்டு கொத்தித் தின்னச் செய்தேன். தூதுவனும் பயந்து திரும்பி விட்டான்'' என்றான் முருகன்.

மன்னர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தன் நாட்டையும் கௌரவத்தையும் காப்பாற்றிய முருகனுக்கு ஏராளமான வெகுமதி யளிக்க முன் வந்தார். ஆனால் முருகன் அவர் அளித்த எதையும் ஏற்றுக் கொள்ள வில்லை. ''உழைத்துச் சாப்பிடுவதில்தான் இன்பம் இருக்கிறது. உட்கார்ந்து சாப்பிட விரும்பாதவன் நான்'' என்று சொல்லித் தன் குடிசையை நோக்கி நடந்தான்.





இவரைத் தெரிகிறதா ?

யார் இவர் அறிவாயோ ?

இவர் வான சாஸ்திர வல்லுநர். இத்தாலியிலுள்ள பைசா நகரில் 1564-ம் வருடம் பிப்ரவரி மாதம் 15-ந் தேதி பிறந்தார். தமது மகன் மருத்துவம் பயில வேண்டும் என்று விரும்பினார் தந்தை. அப்பாவின் விருப்பத்துக்காக மருத்துவம் பயின்றாலும் இவரது சிந்தனை யெல்லாம் கணிதத்திலேயே இருந்தது. பெண்டுலத்தின் சீரான அசைவிலிருந்து மனித உடலின் நாடித் துடிப்பைக் கணக்கிட்டு உணரலாம் என்ற உண்மையைக் கண்டுபிடித் தார் இவர். மாறுபட்ட எடையும் உருவமும் உடைய பொருள்கள் ஆகாயத்தில் வீசி எறியப்பட்டால் ஒரே வேகத் தில்தான் அவை பூமியை அடைகின்றன என்ற தத்துவத் தைப் பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்திலிருந்து பல விதமான உருவமும் நிறையும் கொண்ட பொருள்களைக் கீழே வீசி நிரூபித்துக் காட்டினார்.

'டெலஸ் கோப்' என்ற தூரதரிசினியைக் கண்டு பிடித்து ஜூபிடர் என்ற வியாழனின் உபகிரகங் களைப் பார்த்துச் சொன்னார். சூரியனில் கறுப்புப் புள்ளிக ளிருக்கின்றன என்ற உண்மையை வெளியிட்டவர் இவர். சூரியனைச் சுற்றித்தான் மற்றக் கிரகங்கள் சுழலுகின் றன என்ற உண்மையை முதன் முதலில் கண்டறிந்த மேதை இவர். பூமியைச் சுற்றித்தான் சந்திரன் சூரியன் எல்லாம் சுற்றுகின்றன என்ற நம்பிக்கையிலேயே ஊறிக் கிடந்தது அவர் காலத்திய உலகம். இவரது முடிவைக் கேட்ட பழைய கொள்கையாளர்கள் கொதித்தெழுந்தார்கள். மத குருமார்களின் கோபத்துக்கும் ஆளானார். கடைசி எட் டாண்டுகளைப் பிளாரன்ஸ் நகரில் தனிமையோடு உற வாடிக் கழித்தார் இந்தக் கணித மேதை. 1637-ம் ஆண்டு இவரது கண் பார்வை போய் விட்டது. அந்த நிலையிலும் இவர் தமது ஆராய்ச்சியை நிறுத்தாமல் தொடர்ந்து செய்து வந்தார். இவர் பிறந்த மாதமான பிப்ரவரியில் 7-ந் தேதியன்று (1642ம் வருடம்) கொடுமை நிறைந்த இப்பூவுலகிலிருந்து விடைபெற்றுக் கொண் டார். இத்தகைய புகழ் வாய்ந்த விஞ்ஞானி, வான சாஸ்திரி, கணித மேதை யார் என்று இன்னும் தெரியவில்லையா? இவர்தான் கலிலியோ.




விளையாடிப் பாருங்கள் !

உங்களுக்கெல்லாம் ஒரு புதிய பந்தாட்டத்தைப் பற்றிச் சொல்லித் தரப் போகிறேன். இதற்கு வேண்டியதெல்லாம் ஒரு முழு சீட்டுக் கட்டு. பந்தாகப் பாவிக்க ஒரு பழைய பித்தான்.

இனி அருகே உள்ளது போலத் தரையில் பெரிதாக வரைந்து கொள்ளுங்கள். பக்கத்துக்கு ஒருவராக உட்கார்ந்துகொள்ள வேண் டும். பந்தை, வரைந்துள்ள மைதானத்தின் மத்தியில் வையுங்கள். சீட்டுக் கட்டை நன்றாகக் கலந்து எண்ணிக்கைகள் தெரியாதபடி குப்புறக் கவிழ்த்து வையுங்கள். இனி விளையாட ஆரம்பிக்கலாம். சீட்டுக் கட்டிலிருந்து வரிசையாக ஒவ்வொரு சீட்டாக எடுத்து நிமிர்த்த வேண்டும். அப்படி நிமிர்த்தும் போது கிடைக்கும் எண் ணிக்கைக்குத் தக்கபடி கீழே கொடுத்துள்ள விதிகளின்படி பந்தை நகர்த்தி எதிராளியின் கோலுக்குக் கொண்டு போக வேண்டும்.

இரண்டு பேரில் யார் சிவப்புக் கட்சி, யார் கறுப்புக் கட்சி என்பதை முதலிலேயே முடிவு செய்து கொள்ள வேண்டும். சீட்டுக்களை நிமிர்த்தும்போது எந்த வர்ணத்தில் எண்ணிக்கை வரு கிறதோ அந்தக் கட்சிக்கு ஆட்டம். பந்தை எதிர்க் கட்சியின் கோலை நோக்கி நகர்த்த வேண்டும். ஒற்றைப் படை எண்களானால் பந்தை ஒரு கட்டானுக்கும் இரட் டைப் படை எண்களானால் இரண்டு கட்டானுக்கும்—எந்தத் திசையிலும்—நகர்த்தலாம். ராஜா ராணி, ஜாக்கி போன்ற படமுள்ள சீட்டுக்கள் வந்தால் எந் தத்திசையில் வேண்டுமானாலும் ஒரு கட்டான் நகர்த்தலாம்.

ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே இத்தனை கோல்கள் போட்டால் வெற்றி என்று முடிவு செய்துகொள்ள வேண் டும். ஒரு கோல் போட்டதும் பந்தை மறுபடியும் நடுவில் கொண்டு வந்து வைத்து விளையாட ஆரம்பிக்க வேண்டும். எல்லாச் சீட்டையும் நிமிர்த்தியானதும் மறுபடியும் கட்டைக் கலந்துக் கவிழ்த்து வைத்துக்கொண்டு விளையாட் டைத் தொடர வேண்டும். பந்து ஒன்றுதான். சீட்டுக் காட்டும் வர்ணத்தின்படி அந்த ஆட்டக்காரன்பந்தை எதிர்க் கட்சியின் கோலை நோக்கி நகர்த்த வேண்டும். எதிர்க் கட் சிக்காரன் தனக்குச் சாதகமான சீட்டு வரும்போது தன் எல்லைக்குள் வந்துள்ள பந்தை எதிர்த் திசைக் கோலை நோக்கி நகர்த்த வேண்டும். இப்படி மாறி மாறிப் பந்து கோலை நோக்கிப் போவதும் திரும்புவதும் ரொம்பவும் சுவாரசியமாக இருக்கும். விளையாடிப் பாருங்கள்.




பாமாலிவ் லவண்டர்

வசீகரிக்கும் நறுமணம்....

பெருமிதத்தையும், அழகையும் அளிக்கிறது!






வசீகரம்...பாமாலிவ் லவண்டர் டால்கம் பெருமிதத்திற்கும், அழகிற்கும் உற்ற நண்பன். சிறிது பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பின்மேல் தூவிக்கொண்டால், அதன் இனிய நறுமணம் உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள். பாமாலிவ் உபயோகித்து எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும், நறுமணத்துடனும், அழகுடனும் விளங்குங்கள்.

பாமாலிவ் டீலக்ஸ்—மயக்கும்
17 ஸென்டுகளின் அற்புதமான கலவை!

PT-G-6-TAM.



படித்தால் மட்டும் போதுமா?

காந்தன்

போதாது. அதுபோல் படம் எடுத்தால் மட்டும் போதுமா? பாம்பை எடுத்துக்கொள்ளுங்கள். படம் எடுக்கும் பாம்பு அத்துடன் நின்றுவிட முடிகிறதா? கொஞ்சம் சீற வேண்டியிருக்கிறது; நாக்கை நீட்ட வேண்டியிருக்கிறது; மகுடி வாசிப்புக்குத் தகுந்த மாதிரி ஆட வேண்டியிருக்கிறது; யாராவது அடிக்க வந்தால் கடித்து விட்டு ஓட வேண்டியிருக்கிறது.

அண்ணன் ராஜு பட்டதாரி; தம்பி படிக்காதவன். ஒருவருக்காக மற்றொருவர் பெண் பார்க்கிறார்கள். தம்பிக்கு நிச்சயிக்க இருந்த படிக்காத பெண்ணின் அழகில் மயங்கி அண்ணன் அவளையே மணக்க ஒரு மொட்டைக் கடிதத்தைத் தயார் செய்கிறான். பலன்? படித்த பெண் படிக்காதவனை மணக்க நேரிடுகிறது. பட்டதாரி படிக்காத பெண்ணை மணந்து கொள்ளுகிறான். அந்த ஆணவக்காரியை மட்டும் மணக்கவில்லையென்றால் படிப்பேயில்லாத கோபால் அடியோடு நடிப்பும் இல்லாதவனாக அல்லவா போய்விட்டிருப்பான்!



சிவாஜி கணேசனுக்கு அந்தப் பாத்திரம் மிகப் பொருத்தம் என்பது அவர் அண்ணனுக்காகப் பெண் பார்க்கப் போனபோதே நன்கு வெளிப்படுகிறது. பட்டதாரி மீனாவை அவர் கேள்விகள் கேட்ட மாதிரியே போதுமே! அண்ணியின் பிரிவில் நெகிழ்ந்து போகிற காட்சி சுலபமாக நம்மை நெகிழச் செய்கிறது.

கோபால்தான் கெட்ட நோக்கத்தோடு அந்த மொட்டைக் கடிதத்தை எழுதியிருக்க வேண்டும் என்று நிர்மானித்து அவன் தந்தை அவனை அடித்த போது கோபால் துடித்த துடிப்பில் நடிப்பின் உயிர் நாடியே வெளிப்படுகிறதே! அண்ணியின் விருப்பப்படி மனைவியை அழைத்து வரப் போய் மாமனாரிடம் அடி வாங்கிக் கொண்டு அடிபட்ட வேங்கையாகச் சீறிப் பிறகு அமைதியாக வெளியேறின காட்சியில் நல்ல மெருகு ஏறியிருக்கிறது.

எம். ஆர். ராதா சத்தம் போட்டுப் பேசிக் கல்யாணத்தை முடித்து வைத்துக் கோமாளிக் கூத்து ஆடித் தீர்க்கிறார். அதைக் கணிசமாகக் குறைத்திருக்கலாம். காட்டு நடனம் தேவையே இல்லை. இந்தப் பயங்கர நடனத்தைச் சேர்த்தால் மட்டும் போதுமா? மக்கள் அதையெல்லாம் ரஸிப்பார்களா என்று கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

படிக்காத பெண் சீதாவாக வருபவர் சாவித்திரி என்று சொன்னாலே போதும். பெண் பார்க்க வந்த ராஜுவை நாணத்தோடு பார்த்த பார்வையே நம் நெஞ்சை அள்ளிவிடுகிறதே! அதிலிருந்து அவர் நடிப்பு சிகரமாகவே விளங்குகிறது. கணவன் கடப்பட்ட பிறகு நீதி மன்றத்தில் சாட்சி கூறிவிட்டு, சீதா அமைதியாக வெளியேறி விட்டால் மட்டும் போதுமா? நம் நெஞ்சை விட்டு அவளால் வெளியேற முடியவில்லையே!

ராஜசுலோசனாவுக்கு வசதியான பாகம். அவரது சுபாவத்துக்கு ஏற்ற பாகம்; ஆகவே நன்றாய் நடிக்கிறார்.

எஸ். வி. ரங்காராவ் பட்டதாரி தகப்பனாராக வந்தால் மட்டும் போதுமா? நடிப்புக்கு நல்ல வாய்ப்பு வேண்டாமா?

எஸ். வி. சகஸ்ரநாமம் ஜமீந்தாராக வந்து கம்பீரமாகப் பேசியதோடு நின்றுவிடாமல் கோபாலை அடித்து விரட்டிக் கதையையும் மேலே ஓட ஓட விரட்டியிருக்கிறார்!

பாடல்கள் நிறைய இருந்தால் மட்டும் போதுமா? அவை கேட்கும் ரசிகர்களின் உள்ளங்களில் பதிய வேண்டாமா?

ராஜுவாக வரும் பாலாஜி ஆரம்பத்தில் அதிகமாக அலட்டிக் கொண்டா விட்டாலும், தாம் செய்த தவற்றை எண்ணி வருந்தி நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொண்டு விடுகிறார்.

படித்தால் மட்டும் போதுமா? — ஒரு முறை பார்த்தால் மட்டும் போதாது!



போர்முனை

அத்தியாயம் 7

தவிப்பு

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அந்தப் பெண் யார் என்று அடையாளம் கண்டு கொண்டு விட்டான் வடிவேலு. சந்தேகமேயில்லை, தாராதான் அவள்! அச்சமயம் அவனுக்கு ஏற்பட்ட முதல் எண்ணம், 'முன்னைப்போதையும் காட்டிலும் எவ்வளவு அழகாக இருக்கிறாள் இவள்' என்பதுதான். நெடுந்தூரப் பிரயாணத்தின் வாட்டமோ களைப்போ தெரியாதவாறு அப்போதுதான் பறிக்கப்பட்ட ஓர் அல்லி மலரைப் போல் காட்சி தந்தாள் அவள். தேகம் ஒரு சுற்று இளைத்து அவள் உயரத்தை அதிகமாக்கிக் காட்டித் தோற்றத்தைச் சிறக்கச் செய்தது. மாம்பழக் கதுப்புக்களாக முன்பு விளங்கிய கன்னங்கள் ஓரளவுக்கு ஒட்டிப் போனதால் வட்ட வடிவமான முகத்தை நீள வாட்டில் சற்று இழுத்து வைத்தாற் போலிருந்தது. அன்றையத் தாரா செல்வத்திலும் சொகுசான வாழ்க்கையிலும் புரண்டு வளர்ந்த செருக்கு மிக்க நங்கை. இன்று அவள் ஆணவம் அடங்கப் பெற்ற ஆனால் அழகினை அளவிட முடியாத அணங்கு. நான்கு வருஷங்களுக்கு முன்னால் மதர்ப்புடன் கூடிப் பார்ப்பவர்க்கு ஒருவித மயக்கத்தை உண்டாக்கிய மேனி. இப்போதும் வனப்பிலே லவலேசமும் மங்கி விடவில்லைதான். என்றாலும் கண்ணியத்துடன் மிளிர்ந்து காண்பவரிடத்தில் மரியாதையை உண்டு பண்ணியது. இப்போது அவள் வதனம் அந்திப் பொழுதினை நினைவூட்டவில்லை. நட்ட நடு நிசியில் ஒளிரும் வட்ட நிலாவையே ஞாபகப்படுத்தியது. பளிங்கு போல் வெளிறிப் போயிருந்த அந்த மதிமுகத்தில் நெற்றியில் அலைப்புண்ட கேசச் சுருள்களும் வளைந்த புருவங்களும் விழிகளின் கருமையும் மட்டுமே களங்கங்கள். சந்திரனைச் சூழ வரும் மெல்லிய வெண் மேகத்திரளாகப் புடவைத்தலைப்பு அவள் சிரத்தைச் சுற்றி வந்து கன்னங்களை வருடியது. இதழ்க் கோணங்களில், குறுநகை குலவி விளையாடிய போதிலும் கண்களில் கரை காணமுடியாத ஓர் ஏக்கம் நிலவுவதையும் கவனிக்காமல் இருக்க முடியவில்லை.

தன்னையே அவன் உற்று நோக்குவது கண்டு அவளுக்கும் துணிவு பிறந்திருக்க வேண்டும். ''நீங்கள் பாருவின் அண்ணனில்லை?'' என்று கேட்டாள்.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான் அவன். ''நீங்கள் எங்கே போய் விட்டீர்கள்? எவ்வளவு நேரமாகத் தேடுவது

உங்களை?'' என்று துணிச்சலுடன் பழியை அவள் மீதே சுமத்தினான்.

''அடடா! எனக்குத் தகவலே இல்லையே, நீங்கள் இங்கே வந்து என்னைச் சந்திக்கப் போவதாக? எனக்காகவா இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள்?''

''இங்கே வேறு என்ன வேலை இருக்கிறது எனக்கு?''

''அனாவசியமாகச் சிரமம் கொடுத்து விட்டேன் உங்களுக்கு.''

''சொல்லிப் பார்த்தேன், கேட்டால் தானே, உங்கள் சிநேகிதி?'' என்ற வடிவேலு சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டான், தான் அவசரப்பட்டு எதையோ உளறி விட்டதை உணர்ந்து. ''நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. எனக்குக் கொஞ்சம்கூட இதனால் கஷ்டமே இல்லை'' என்று வலியுறுத்திக் கூறினான்.

கலகலவென்று சிரித்தாள் தாரா. ''பரவாயில்லை, நான் ஒன்றும் தப்பாக எடுத்துக் கொண்டு விட மாட்டேன்.'' அவன் மனத்தில் நிம்மதி நிலவச் செய்த அவள், திடுக்கிட்டு ஓடிப் போய் ரயில் பெட்டியின் கதவருகே வந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த சிறுவனைப் பற்றித் தூக்கினாள். ஹிந்தியில் அவனிடம் ஏதோ கண்டித்துக் கூறிவிட்டு வடிவேலுவின் பக்கமாகத் திரும்பினாள். ''படா பத்மாஷ் இவன்! கொஞ்சம் ஏமாந்தால்போதும், கையை, காலை உடைத்துக் கொண்டு நிற்பான்.'' செல்லமாகப் பாலகனின் கன்னத்தைத் தட்டியவள், ''சாச்சாகோ நமஸ்தே கஹோ'' என்றாள். வணக்கம் தெரிவித்த சிறுவனின் முகவாயை அன்புடன் ஒரு முறை கிள்ளி விட்டு, ''இதோ ஒரு நொடியில் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்றான் வடிவேலு.

பத்தடி எடுத்து வைப்பதற்குள் திடீரென்று ஏதோ சந்தேகமடைந்து சரேலென்று திரும்பினான். கிட்டத்தில் நெருங்கி, ''பஸ்டு கிளாஸிலேயே அழைச்சுக்கிட்டு வந்து விடச் சொன்னான் பாரு!'' என்று தன் தயக்கத்துக்குக் காரணத்தை விளக்கி வைத்தான்.

''நான் முதல் வகுப்பிலே போவதை நிறுத்தி மூன்று வருஷங்களுக்கு மேல் ஆகின்றனவே.'' தாராவின் இதழ்களில் புன்னகை அரும்பியது.

விழித்துக் கொண்டவனாக, ''ஓ! ஏமாந்துவிட்டேன், கதர் கட்டுபவராயிற்றே நீங்கள்!'' என்றான் வடிவேலு. படுக்கையை ஜன்னல் வழியே ரயில் பெட்டிக்குள் தள்ளி விட்டு மீண்டும் விழுந்தடித்துக்கொண்டு ஓடினான்.


டிக்கெட்டைக் கேட்டு வாங்கிப் பெற்றுக் கொண்டு இரைக்க இரைக்க விரைந்து வரும் அவனைக் கண்டதும் கிளர்ந்தெழுந்த சிரிப்பைத் தாரா புடவைத் தலைப்பால் மறைத்துக் கொண்டாள். ''உங்களை இப்போது பார்த்தால் எப்படி இருக்கிறது தெரியுமா? அரசியல் பொதுக்கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்து விட்டு, தலைவர் வரக் காணாததால் திண்டாடித் தெருவில் நிற்கும் காரியதரிசி மாதிரி! எதற்கு இப்படி அவசரப்படுகிறீர்கள்? ரயில் புறப்படுவதற்கு இன்னும் பதினைந்து நிமிஷங்கள் இருக்கின்றனவே?''

உடனடியாக உண்மையை ஒப்புக் கொண்டு விட்டான் வடிவேலு. ''உங்களைப் பார்த்ததும் எனக்குத் தலைகால் புரியவில்லை. எங்கே நான் மட்டும் தனியாகத்தான் ஊருக்குத் திரும்ப வேண்டியிருக்குமோ என்று பயந்து கொண்டிருந்தேன். போன உயிர் சற்று முன்னால் தான் திரும்பி வந்தது! உங்களைக் கையோடு அழைத்துப் போகாமல் பாருவின் முகத்திலே எப்படி விழிப்பது?''

''தேவலையே, நன்றாகக் கதை அளக்கிறீர்களே? நம்புவதற்கு வேறு ஆளைப் பாருங்கள்!''

''என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள், ஒரேயடியாக?''

''இங்கே நடந்ததை அப்படியே தலைகீழாக மாற்றி விட்டீர்களே? அந்தச் சுவரில் சாய்ந்தபடி நீங்கள் தூங்கிக்கொண்டிருந்ததைப் பார்த்தால்



கி.ராஜேந்திரன்

ரயிலே நீங்கள் கோட்டைவிட நான் மட்டும் தேனூருக்குப் போகும் நிலை உண்டாகியிருக்கும் என்றல்லவோ தோன்றியது? எழுப்புவதா வேண்டாமா என்று யோசனையாக இருந்தது எனக்கு.''

'நான் தூங்கவில்லை தாரா! ஏதேதோ பழைய ஞாபகங்கள் எழுந்தன. கல்லூரி மாணவியாக நீ அளித்த காட்சியைத் தான் மனக் கண் முன்னால் நிறுத்திப் பார்த்துக் கொண்டிருந்தேன்'-இப்படிக் கூற வேண்டும் என்று அபரிமிதமான ஆசை எழுந்தது வடிவேலுவின் உள்ளத்தில். ஆனால் வார்த்தைகளால் விண்டுரைப்பது சாத்தியமான காரியமாகப் படவில்லை அவனுக்கு. ''இரவு சரியான தூக்கமில்லை. மத்தியானமும் ஏக அலைச்சல். என்னையுமறியாமல் கண்ணயர்ந்திருக்கிறேன்.''

''இன்றைக்குக் கூட்டத்தை அதிகமாகக் காணோம் ரயிலில்; சௌகரியமாகப் படுத்துத் தூங்குங்கள்.''

''உண்மையில் மூன்றுநாட்கள் பிரயாணம் செய்து வந்த உங்களுக்குத் தான் என்னைக் காட்டிலும் களைப்பு அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் உங்கள் முகம் என்னவோ ரொம்பவும் தெளிவாக இருக்கிறதே. அது எப்படி?''

''பரம ரகசியம் அது! கலபத்தில் அந்த விந்தையை வெளியிட்டு விடலாமா?'' என்றாள் தாரா. 'பெரிய ரயில் நிலையங்களில் 'ரிடையரிங் ரூம்' என்பதாக ஓய்வெடுக்கும் அறைகள் உண்டு என்பது தெரியாதா உங்களுக்கு?' என்று அவள் கேட்கவில்லை.

''நீங்கள் யாருக்கும் சொல்லக் கூடாத இன்னொரு விஷயமும் இருக்கிறது'' என்றான் வடிவேலு.

''என்ன அது?''

''சென்ட்ரல் ஸ்டேஷனிலேயே வந்து நான் உங்களைச் சந்திக்கவில்லை என்பதைத் தப்பித் தவறிக் கூறி விடாதீர்கள்! விவரம் தெரிந்தால் பாரு என்னை வறுத்தெடுத்து விடுவாள்!''

''அடேயப்பா! அவ்வளவு பயமா உங்களுக்குத் தங்கையிடம்?''

''இல்லை, இல்லை. பயமொன்றுமில்லை....''

''பின்னர் எதற்கு இப்படித் தவிக்கிறீர்கள் கிடந்து?''

வடிவேலு திகைத்து விட்டான். இதற்கு அவன் பதில் கூறவில்லை. மண்டையிலடிப்பது போல அவள் கேள்வியைப் போட்ட அந்தத் தோரணையில் அவன் அசந்து விடவில்லை. விடை சொல்லத் தெரியவில்லை அவனுக்கு. அதனால் வாயடைத்து நின்றான். தாராவும் ஏதோ சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டவளாகக் காணப்பட்டாள். அடி உதட்டைப் பற்களால் அழுத்திக் கடித்துக் கொண்டு இமைகளைக் கொட்டியவாறே தலை குனிந்தாள். சில நிமிஷங்களுக்கு அவர்களிடையே நிலவிய மர்மமானதொரு மௌனத்தைக் கலைத்தது ரயில் புறப்படப் போவதை அறிவிக்கும் ஸ்டேஷன் மணி.

''ஏறிக் கொள்ளுங்கள்'' என்றான் வடிவேலு.

''குழந்தை தூங்கியே போய் விட்டான்'' என்ற தாரா சிறுவனை அவனிடம் தந்து விட்டு ரயிலேறினாள். மோகனை இறுகப் பற்றியபடியே அவளைப் பின் தொடர்ந்தான் வடிவேலு.

அத்தியாயம் 8

உமாகாந்த்

செங்கல்பட்டைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது ரயில். 'கூ'வென்று அது ஒரு முறை ஊதி முடித்ததும் ஒரே சமயத்தில் ஆயிரமாயிரம் நெருப்புப் பொறிகள் எஞ்சினிலிருந்து கிளம்பிக் கன்னங்கரிய இருளில் ஏதோ வாண வேடிக்கை போலச் சிதறிப் பறந்தன. கண்கவரும் இந்த அற்புதத்தை அசையாது உட்கார்ந்து ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான் வடிவேலு. ஒவ்வொரு நெருப்புப் பொறியும் தன்னிடம் ஒரு கேள்வியை, இல்லை, ஒரே கேள்வியைப் பளீரென்று கேட்டு விட்டு மங்கி மறைவதாக ஒரு பிரமை அவனுக்கு. 'ஏன் இப்படித் தவிக்கிறாய் கிடந்து?' என்றுதான் வினவின அவை.

சென்ட்ரல் ஸ்டேஷனில் தாராவைக் காணவில்லை என்றதும் ஏற்பட்ட மனச் சோர்வு, ஏக்கம் எழும்பூரில் அவளைப் பார்த்ததும் உண்டான அபரிமிதமான மகிழ்ச்சி, உற்சாகம் — இவையெல்லாம் தங்கை பாருவின் தோழி அவள் என்பதால் உடன் பிறந்தவளின் சார்பிலே அவனடைந்த உள்ளக் கிளர்ச்சிகளா? அல்லது அவனையுமறியாமல் கட்டுமீறிப் பெருகிய உணர்ச்சிக் குவியல்களா?

விடை கண்டு பிடிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தவனைத் தன்

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.


கால்கேட் உடனடியாக வாய் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், நுரைக்கும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

க்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- துர் நாற்றத்தை அகற்றுகிறது
- சொத்தையைத் தடுக்கிறது
- பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



ீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

சுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெற
ம் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும்
விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.






ளிலைக்குக் கொண்டு வந்து சேர்த்தான் தாரா. ''என்ன விநோதம் பாருங்கள்'' என்றாள் அவள், தூங்கிக் கொண்டிருந்த மோகனின் உச்சந் தலையைக் கோதி விட்டபடியே. ''பாட்டியை விட்டுப் பிரிந்து வரவே மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தவனுக்கு ரயிலில் ஏறியதும் ஒரே குஷி பிறந்து விட்டது. சென்னையில் கீழே இறங்கவே முடியாது என்று அமர்க்களம் பண்ணி விட்டான். பிறகு ஒரு மாதிரியாகச் சாயந்திரம் வேறு ஒரு ரயிலில் போகலாம் என்று சமாதானப் படுத்தி அழைத்து வந்தேன். அடுத்தாற் போல் மாட்டு வண்டியில் செல்ல நேர்ந்தால் பின்னர் ரயிலைப் பற்றி லட்சியம் செய்யவே மாட்டான்!''

''குழந்தைகளுக்கு என்ன? எதையும் சுலபமாக மறந்து விடுவார்கள். எல்லாமே புதியவையாகத் தோன்றி அவர்களை அதிசயிக்க வைக்கிற வயதில்லையா இது?'' என்றான் வடிவேலு.

''ஆமாம்'' என்று ஒப்புக் கொண்டான் தாரா. ''நம்மைப் போன்ற பெரியவர்களுக்குத்தான் சில விஷயங்களை நினைவிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று எவ்வளவோ பிரயாசை எடுத்துக் கொண்டாலும், அது சாத்தியமாவதில்லை.''

தாராவின் இந்த வார்த்தைகள் வடிவேலுவின் இதயத்தில் 'சுரீர்' என்று





தைத்து வேதனை அளித்தன. 'மறப்ப தென்பது இலகுவான காரியமல்ல' என்று அவள் எதை மனத்தில் வைத்துக் கொண்டு சொல்கிறாள்? கல்லூரி நாட்களையா? அல்லது தாம்பத்திய வாழ்வு என்று அவளுக்குக் கிடைத்த, விரல் விட்டு எண்ணி விடக் கூடிய, ஒரு சில மாதங்களையா?

வெளியே கண்ணோட்டம் செலுத்திக் காரிருளில் எதையோ தேடிக் கொண் டிருந்த தாராவுக்கு இதமளிப்பதாய் எண்ணிக் கொண்டு, ''மறக்க முடியாது தான்'' என்று ஆரம்பித்தான் வடி வேலு. ''உங்களுக்கு ஞாபகம் இருக் கிறதா; காலேஜில் இணை பிரியாத தோழிகளாக விளங்கிய உங்களையும் பாருவையும் பார்த்து, 'படிப்பெல்லாம் முடிந்து கல்யாண மென்றும் ஆகிவிட் டால் பிறகு என்ன செய்வீர்களாம்?

வெவ்வேறு ஊர்களில் கணவன்மார்களுடன் தனித்தனியாக வாழ்ந்துதானே ஆக வேண்டும்?' என்று ஒரு முறை விளையாட்டாகக் கேட்டேன். முன் கூட்டியே பேசி வைத்துக் கொண்டது போல் இருவரும் விம்மி விம்மிக் கண்ணீர் பெருக்கி என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டார்கள். இப்படியும் ஒரு சிநேகம் இருக்க முடியுமா என்ன? என்று நான் அதிசயப் பட்டேன். 'இன்னொரு முறை அப்படிச் சொல்லாதே அண்ணா!' என்றாள் பாரு, அழுகை அடங்கிய பிறகு. 'எப்பாடு பட்டாவது ஒன்றாகவே வாழ்வது என்று நாங்கள் நிச்சயித்திருக்கிறோம்!' பாரு பேசி முடிப்பதற்குள் நீங்கள் அவள் கையைப் பற்றித் தரதரவென்று.....''

தாராவுக்கு ஆறுதல் அளிக்கிறோம் என்ற நினைப்பில் பழைய சம்பவம் ஒன்றைக் கூறத் தொடங்கிய வடிவேலு, பாதியில் நிறுத்தி விட்டான். தான் ஏதோ பைத்தியக்காரத்தனமாக உளறுவதாகப் பட்டது அவனுக்கு. இப்படி யெல்லாம் பேசினால் தாராவுக்குப் பிடிக்கவே பிடிக்காது என்று தனக்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்து கவலை அடைந்தான்.

''ஏன் மென்று விழுங்குகிறீர்கள்?'' என்று கேட்டாள் தாரா, அப்பட்டமாக. ''பாருவைத் தரதரவென்று இழுத்துச் சென்றேன். மாடிப்படிகளில் பாதி தூரம் ஏறிப் போனதும் அங்கே நின்று தயக்கத்துடன் உங்களை அடிக்கடி திரும்பிப் பார்த்தவாறே நாங்கள் ரகசியம் பேசினோம். ஒருவருக்கொருவர் கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்தோம். அது ஒரு பருவம்; அந்தரங்க அபத்தப் பேச்சுக்களுக்கும் அர்த்தமற்ற சபதங்களுக்கும் அங்கே நிறைய இடம் உண்டு.''

ரொம்பவும் அலட்சியமாகத் தாரா அந்த நாட்களை ஒதுக்கித் தள்ளுவதாக முடிவு செய்தான் வடிவேலு. மனத் தாங்கலாக இருந்தது அவனுக்கு. அவ்வளவு அழுத்தந் திருத்தமாகவும் கண்டிப்புடனும் கல்லூரித் தோழமையை இழிவுபடுத்த வேண்டியதன் அவசியம் தான் என்ன? 'பாருவிடம் நீங்கள் கொண்டிருக்கும் நட்பு வெறும் அபத்தப் பேச்சும் அர்த்தமற்றசபதங்களும்தானா?' கோபமாகக் கேட்கத்தான் வாயெடுத்தான் வடிவேலு. ஆனால் அதற்குள் தாராவின் கீழுதடு இலேசாகத் துடிப்பதையும் கண்களில் மெல்லிய நீர்த்திரையிட்டு, அது ரயில் பெட்டியினுள்ளிருந்த மங்கிய வெளிச்சத்திலும் ஒளிக்கதிர் பரப்பிப் பிரகாசிப்பதையும் கவனித்து விட்டான். கலவரமடைந்தவனாக அவன் தன் இமைகளை மூடிக் கொட்டாவியையும் சிரமப்பட்டுத் தருவித்துக் கொண்டான். மேலும் மேலும் பேசி அவளுக்குத் தொந்தரவு கொடுக்க அவன் விரும்பவில்லை.


ஃ ஃ ஃ

தாராவின் கல்லூரிப் படிப்பு முடியு முன்னரே உயர்தர சர்க்கார் வேலையில் இருந்து வந்த அவள் தகப்பனார் துவாரகாநாத் உத்தியோகத்திலிருந்து ஒய்வு பெற்று விட்டார். சொந்த ஊரான கான்பூருக்குத் திரும்பிப் போவதைத் தாராவின் படிப்பை முன்னிட்டு ஒத்திப் போட்டார் ஆறு மாதங்களுக்கு. பரீட்சை முடிந்த கையோடு வடக்கே அழைத்துப் போய் உமாகாந்தின் கரங்களில் அவளை ஒப்படைத்தும் விட்டார். ஏறக்குறைய அதே சமயத்தில்தான் பாருவுக்கும் தேனூரில் திருமணம் நடைபெற்றது. தோழியின் கல்யாணத்துக்குத் தன்னால் போக முடியவில்லையே என்று ரொம்பவும் வருத்தப்படத்தான் செய்தாள் பாரு. தாராவும் இந்தப் பிரிவாற்றாமையால் உள்ளூற உருகித் தானிருப்பாள். ஆனால் தேனூர் எங்கே? கான்பூர் எங்கே? முகூர்த்த நாளுக்கான காரியங்கள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அவ்வளவு தூரம் போய்த் திரும்புவதென்பது அசட்டுத்தனம் என்று கூறிப் பாருவைக் கட்டுப்படுத்தி விட்டார் முத்தையா. மனைவியின் ஸ்தானத்தை அடைந்த தாராவை அவள் கணவனோடு சேர்த்துப் பார்க்க அவள் ஆருயிர்த் தோழியாகிய பாருவுக்குக் கொடுத்து வைக்கவில்லை. தேச பக்தர் உமாகாந்த் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட சிறிது காலத்துக்கெல்லாம் அவருக்கு அறிமுகமாகும் வாய்ப்பு வடிவேலுவுக்குத்தான் கிட்டியது. அதுவும் தற்செயலாகத்தான். பல வருஷங்களாகவே பாரு கண்டு வந்த கனவு நனவாகி அவள் தன் புருஷன் வீட்டில் அடியெடுத்து வைப்பதைக் கண்குளிரக் கண்ட சிறிது காலத்துக்குப் பிறகு வடிவேலு தன் அப்பாவிடம் தேசத்தில் தான் அன்றுவரை சென்றறியாத நகரங்களுக்கெல்லாம் போய்த் திரும்ப அனுமதி கோரினான். ''காலேஜ் படிப்புத்தான் கூடாது உங்கள் பிள்ளைக்கு. கொஞ்சம் உலக அனுபவமாவது எனக்கு ஏற்படலாமோ இல்லையோ?''


''அதுதாண்டா உண்மையான படிப்பு!'' என்று ஆமோதித்து முதுகில் தட்டிக் கொடுத்தார் தகப்பனார். தடை ஏதும் சொல்லாமல் வழிச் செலவுக்குப் பணத்தைத் தாராளமாக, ஆனால் கணக்காக எண்ணித்தான் — தந்து அனுப்பி வைத்தார். சென்னைக்கு ரயி


நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!
புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!
குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

லேறினான் வடிவேலு. அங்கே அதிக தினங்கள் தங்கவில்லை அவன். பழகிய இடத்தை விட்டுப் பாய்ந்தோடி, வேறு பல பெரிய பட்டணங்களில் புது அனுபவங்களைப் பெறுவதில் ஆர்வம் கொண்டவனாகப் பெங்களூர், மைசூர், ஹைதராபாத் என்று எப்படி எப்படியெல்லாமோ தாறுமாறாகச் சுற்றி அலைந்து விட்டுப் பம்பாயை வந்தடைந்தான். பட்டிக்காட்டானைக் கொண்டு போய்ப் பட்டணத்தில், அதிலும் பம்பாய் மாநகரத்தில் விட்டு விட்டால் கேட்கவா வேண்டும்? கண்ணிமைத்தால் காணுதற்கரிய காட்சி எதையேனும் கவனிக்கத் தவறிவிடுவோமோ என்ற அச்சத்துடனேயே அவன் இங்குமங்கும் அலைந்தான். அப்படியிருந்தும் கூட அவன் மனம் எதிலும் வெகுவாக லயிக்கவில்லை. மறுநாள் அந்த நகரத்தில் நடைபெறவிருந்த ஒரு முக்கியமான நிகழ்ச்சியே அவன் சிந்தனையைப் பெரும்பாலும் ஆக்கிரமித்துக் கொண்டு மற்றவற்றைப் பின்னுக்குத் தள்ளியது. மூன்று வருஷங்களாக ஐரோப்பாவில் தங்கியிருந்து சீர்கெட்டிருந்த உடலைச் சரிப்படுத்திக் கொண்டு விட்ட சுபாஷ் சந்திர போஸ் நாளைக்குத் தாய் நாடு திரும்பப் போகிறார் என்று கேள்விப்பட்டதிலிருந்து சரியான தருணத்தில் அங்கே வந்து சேர்ந்ததற்காகத் தன்னைத் தானே பாராட்டிக் கொண்டிருந்தான் வடிவேலு. இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே போஸ், மாண்டலே சிறைச்சாலையில் அடைந்த துன்பங்கள் அவர் தேக ஆரோக்கியத்தை வெகுவாகப் பாதித்திருந்தும் கூடச் சற்றும் சலிக்காமல் அவர் விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டதால் மேலும் நலிவுற்றுப் போனார். இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டிலிருந்து காந்திஜி திரும்பி வந்ததற்கு அடுத்த மாதம் பரவலாகப் பல தலைவர்களை அதிகார வர்க்கம் கைது செய்த போது சுபாஷ் போஸை மட்டும் வெளியே விட்டு வைப்பார்களா என்ன? சிறையினுள்ளே தள்ளியதும் அவர் உடல் நிலை கவலைக்கிடமாகி விட்டது. ஐரோப்பாவிலேயே தங்கியிருந்து சிகிச்சை பெறுவதாயிருந்தால் விடுவிப்பதாக ஆசை காட்டினான் வெள்ளையன். முன்பொரு முறை இதே போன்ற நிபந்தனையுடன் கூடிய விடுதலையை வேண்டவே வேண்டாம் என்று உதறித் தள்ளிய சுபாஷினால் இம்முறை மறுதளிக்க முடியவில்லை. சம்மதம் தெரிவித்துக் கப்பலேறியவர் மூன்று வருஷங்கள் பொறுமையுடன் இருந்து நாட்டின் நலனுக்காகத் தேக நலனில் அக்கறை காட்டினார். இடையில் ஒரே ஒரு தடவைதான் இந்திய மண்ணை போஸ் மிதிக்க நேர்ந்தது. அன்று வந்தவர் தந்தையின் ஈமக் கடன்களைச்செய்து முடிக்க வந்த தனயர். நாளை வரப் போகிறவரோ பிரிட்டிஷ் ஆட்சிக்கே கொள்ளிவைக்க முற்பட்ட புரட்சிவீரர். ஆனால் அந்தக் காரியத்தை அவர்செய்ய முடியாதவாறு பாரத புண்ணிய பூமியில் அடியெடுத்து வைத்த மறுகணமே பொன்னான அவர் கரங்களில் விலங்கு பூட்டுவதாகப் பகிரங்கமாக அறிவித்திருந்தனர் ஆங்கிலேயர். துச்சமாகக் கருதினார் அவர், இந்தப் பூச்சாண்டி காட்டும் வித்தைகளை. நடக்கப் போகும் புதிய தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்வதா வேண்டாமா என்று விவாதிக்க விருந்தது காங்கிரஸ். அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்



திரு நரசிம்ம ஐயர் அவர்களின் புதல்வர் திரு கிருஷ்ணமூர்த்திக்கும் திரு லக்ஷ்மண அய்யர் அவர்களின் புதல்வி சௌ. சாந்த லக்ஷ்மிக்கும் பம்பாயில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



இலங்கை 'தினகரன்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு மகேசனுக்கும் 'ஆனந்த சினிமா' அதிபர் திரு மார்க்கண்டன் அவர்களின் புதல்வி சௌ. ஆனந்த மகேசுவரிக்கும் திருமணம் நடைபெற்றது.




பிரபல தொழில் விற்பன்னர்களான கோத்ரெஜ் ஸ்தாபனத்தார் நடத்திய அகில இந்திய 'விந்தால்' கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குத் திரைப்பட நடிகை ஆஷா பரேக் பரிசுகளை வழங்கினர்.

ளத் தீர்மானித்திருந்த நேருஜி அவரைத் திரும்பி வருமாறு வற்புறுத்தினர். இந் நிலையில் சுபாஷின் உற்சாகத்துக்கு அணை போடுவது சாத்தியமா என்ன?

விக்டோரியா டெர்மினஸில் ரயிலிலிருந்து இறங்கிய இரண்டாவது வினாடியே வடிவேலுவுக்குச் சுபாஷ் போஸ் வரப்போகிறார் என்ற விவரம் தெரிந்து போயிற்று. பம்பாய் நகரமே பரபரப்படைந்திருந்த போது அவன் காதுகளில் இது எப்படி விழாமல் தப்பும்? எல்லோருடைய உள்ளத்திலும் ஒரே உருவம் எல்லோருடைய உதடுகளிலும் ஒரே வார்த்தை. மதிப்பும் மரியாதையும் பக்தியும் ஒன்றாய்த் திரள அந்தப் பெயரை அவர்கள் உச்சரித்தபோது அவர்கள் கண்களில் வீராவேசம் நெருப்புச் சுடரென ஜொலிப்பதைக் கண்டான் வடிவேலு. மறுநாள் தான் தரிசிக்கப் போகும் மாபெரும் தலைவரைப் பற்றிய நினைப்புடனேயே இன்றையப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த அவன், மலபார் ஹில் எனப்படும் குன்றின் மீது செங்குத்தாக உயரச் செல்லும் பாதையில் சற்றேனும் சிரமப்படாமல் இலகுவாக நடந்து போய்த் 'தொங்கும் தோட்டத்தில்' உலவி வந்தான்.

அங்கே அவனுக்கு இன்னோர் அதிசயம் காத்திருந்தது. சற்றுத் தொலைவில் ஒரு மரத்தினடியில் அமர்ந்திருந்த பெண்ணைப் பார்த்ததும் அவனுக்குத் தலையைச் சுற்றவே ஆரம்பித்து விட்டது; அத்தனை திகைப்பு! 'தாரா தானே அது? அடேயப்பா! ஆளே வெகுவாக மாறி விட்டாளே? ஒரு வேளை அவள் இல்லையோ? சேச்சே, கல்யாணத்துக்குப் பிறகு கணவரின் கருத்துக்கிசைய தாரா கதர்ப் புடவை அணிந்து கொண்டால் என்ன? அவளை அடையாளம் கண்டு பிடிக்கக் கூடவா முடியாமல் போய் விடும் எனக்கு? அவள் இங்கே எதற்காக வந்திருக்கிறாள்? இதென்ன முட்டாள் தனமான கேள்வி? சுபாஷ் போஸைத் துறைமுகத்தில் வரவேற்பதற்காகத் தான் இருக்கும்.' அவள் கணவர் உமாகாந்த் உயர் அந்தஸ்தில் இருந்த குடும்பத்தில் ஒரே புதல்வனாகப் பிறந்து குறைவற்ற செல்வங்களுக்கு வாரிசாக விளங்கியும் கூட சுபாஷ் சந்திரரின் தலைமையின் கீழ் நடைபெற்ற பல இயக்கங்களில் கலந்து கொண்டு சிறைவாசம் புரிந்தவர் என்று ஏற்கெனவே பாரு கூறக் கேட்டு அவன் அறிந்திருந்தான். 'அதோ, தாராவுக்கு எதிரிலேயே உட்கார்ந்து அவள் கரம் ஒன்றை ஆசையோடு பற்றி வருடிக் கொண்டிருக்கிறாரே, அவர் தான் உமாகாந்தா?'

இந்தச் சுற்றுப் பிரயாணத்தின்போது கான்பூரில் இரண்டு நாட்கள் தாமதித்துக் கண்டிப்பாக அவர்களைப் பாரு கொடுத்திருந்த விலாசத்தில் போய்ப் பார்த்துக் குசலம் விசாரித்து விட்டுத் திரும்ப நினைத்திருந்த வடிவேலுவுக்கு இங்கேயே தாராவைச் சந்திக்க நேர்ந்ததும் எப்படி நடந்து கொள்வதென்றே புரியவில்லை. அவர்களை நெருங்குவதா வேண்டாமா என்ற பிரச்னை எழுந்தது. கருத்தொருமித்த காதலர்களாக அவர்கள் உலகை மறந்து உறவாடிக் கொண்டிருக்கையில் குறுக்கே புகுந்து இனிமை குலவும் அந்தத் தனிமையைக் குலைக்க அவன் இஷ்டப்படவில்லை. ஆனால் அதே சமயம் பாருவை எண்ணியபோது அவர்களிடம் ஓரிரண்டு வார்த்தைகளாவது பேசாமல் போவதும் உசிதமாகப் படவில்லை. இப்படி இரண்டுங்கெட்டான் நிலைமையில் அவன் உள்ளம் ஊசலாடிக் கொண்டிருக்கையில் உமாகாந்தின் குரல் ஒலித்து அவன் கஷ்டத்தைத் தீர்த்து



ஸ்ரீ கலாநிகேதனின் எட்டாவது ஆண்டு விழாவை யொட்டி பத்மஸ்ரீ பிஸ்மில்லாகான் அவர்களின் வாத்திய இசை விருந்து நடைபெற்றது. இந்தக் கச்சேரிக்குச் சென்னை கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி விஜயம் செய்து, இசைக் கலைஞரைப் பெரிதும் பாராட்டினார்.

வைத்தது. ''அரே பாயி! வடிவேல்!'' என்று உரக்கக் கூப்பிட்டார் அவர். அருகில் வருமாறு ஜாடை காட்டினார். தாராவின் கூர்மையான நோக்கிலிருந்து தான் தப்பவில்லை என்பதை உணர்ந்தான் வடிவேலு. அவள்தான் தன் கணவரிடம் வடிவேலுவின் பெயரைச் சொல்லி அழைக்குமாறு கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். மகிழ்ச்சி பொங்கித் ததும்ப அவர்களை அணுகினான்.

கதர் பைஜாமாவும் ஜிப்பாவும் அணிந்து எளிமையாகத் தோற்றமளித்தார் உமாகாந்த். பக்கத்தில் புல் தரையில் கிடந்த தோல் பையையும் குல்லாவையும் ஒதுக்கி விட்டு அந்த இடத்தைத் தட்டிக் காட்டி உட்காருமாறு சமிக்ஞை செய்தார். அவர் கொடுத்த 'ஷொட்டு'க்களைப் பெருமிதப் பூரிப்போடு பெற்றுக் கொண்ட வடிவேலு, ''வெகுவாக மாறி விட்டீர்களே. கல்யாணத்துக்குப் பிறகு?'' என்றான் தாராவைப் பார்த்து.

அவள் மெல்லச் சிரித்தாள். ''என்ன விஷயம்?'' என்று வினவிய உமாகாந்துக்கு வடிவேலு கூறியதை ஹிந்தியில் மொழிபெயர்த்த போது அவள் வெண்பட்டுக் கன்னங்கள் மாதுளம் மொட்டுக்களாகக் குவிந்தன.

பலமாகத் தலையை ஆட்டி வடிவேலுவுடன் தாம் ஒத்துப் போவதைக் காண்பித்துக் கொண்டார் உமாகாந்த். வெண்ணையை உருட்டி வைத்து உருவாக்கியது போன்ற தாராவின் வழவழப்பானதும் உருண்டையானதுமான கைகளுள் ஒன்றினைத் தடவிக்கொடுத்தும் இரு விரல்களால் அவள் புடவையின் நுனியைப்பற்றி மொரமொரப்பைப் பரிசீலித்தும் ஏதோ பதிலுரைத்தார். ''பட்டு, ஸாட்டின், ஜார்ஜெட் இவற்றையே அணிந்து பழகிய இந்த மிருதுவான உடல் முரட்டுக் கதரை அணிய வேண்டியிருக்கிறது பார்! உறுத்தத் தானே செய்யும், பாவம்!'' என்று அவர் பரிந்து கொள்வது போல் தோன்றியது வடிவேலுவுக்கு.


'அவர் கேலி பண்ணுகிறாரா, அல்லது உண்மையான அன்போடு பேசுகிறாரா?' என்று திண்டாடினான் வடிவேலு. கூச்சமாக இருந்தது அவனுக்கு. தாராவோ விளையாட்டாக உமாகாந்தின் கரங்களை இறுகப் பற்றி உதறித் தள்ளினாள்.

''நீங்கள் கான்பூரில் இருப்பீர்கள் என்று நினைத்தேன்'' என்றான் வடிவேலு ஏதோ வார்த்தையாடி வைக்க வேண்டுமே என்பதற்காக.

''நீங்கள் தேனூரில் இருப்பீர்கள் என்று நினைத்தேன்'' என்றாள் தாரா.

''நன்றாய்ச் சொன்னீர்கள் போங்கள்! சுபாஷ் போஸ் நாளைக்கு இங்கே கப்பலில் வந்து இறங்குகிறார்; எனக்குத் தேனூரில் இருப்புக் கொள்ளுமா?''— தனக்கும் தேசபக்தி உண்டு என்பதை உமாகாந்திடம் காண்பித்துக் கொண்டு அவரது நல்லெண்ணத்தைப் பெற வடிவேலுவுக்குக் கிடைத்த சந்தர்ப்பம் அது. அதைக் கைநழுவ விட்டுவிடவில்லை அவன்; நன்கு பயன் படுத்திக் கொண்டான். சுற்றுலா இளம்பியதையோ அடுத்தாற் போல் பரோடா, ஆமதாபாத், டில்லி, ஆக்ரா, அலகாபாத், காசி, கல்கத்தா என்று மாதக் கணக்கில் பிரயாணம் செய்யத் திட்டம் போட்டிருப்பதையோ அவன் அவர்களிடம் வெளியிடவில்லை.

சுபாஷ் போஸ் என்ற சொல் மந்திரம் போல வேலை செய்தது. ஒரு துடிப்புடன் துள்ளி எழுந்தார் உமாகாந்த். (தொடரும்)



ஏன்? அவன் நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்கியில் பணம் சேமித்தான். ஐந்தே ரூபாயுடன் கோவிந்தன் ஒரு சேமிப்புக் கணக்கைத் துவங்கினான். அவனுடைய பணம் பத்திரமாக இருந்ததுடன் வருஷத்திற்கு 3 சதவீதம் வட்டியும் கொடுத்தது. ஒவ்வொரு மாதமும் அவன் ஒழுங்காகச் சேமித்து வந்தான். கொஞ்ச காலத்திலேயே கணிசமான பணம் பாங்கியில் சேர்ந்து விட்டது. அவன் புத்திசாலி. தன் வருங்காலத்திற்காக, தன் குடும்பத்திற்காக, சந்தோஷமான, சிறந்த நாளைக்காக ... அவன் சேமித்து வைத்தான்.

உங்களுடைய குடும்பத்திற்காக சேமிப்பது பற்றி நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறீர்களா?

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் லிட்.,

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது

கிளைகள்: சென்னை: 3, நார்த் பீச் ரோடு, 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு (லாயிட்ஸ் கிளை) 6, அரமனைக்காரத் தெரு 158, மவுண்ட் ரோடு. தூத்துக்குடி: 44, பீச் ரோடு

NGB/7D-TAM

இடையே ஒரு ஃப்ளாஷ்!

[நாடகமேடையில் ஒரு பூங்காவைக் குறிக்கும் படுதா தொங்கிக்கொண்டிருக்கிறது. விளக்குகள் எரியத் தொடங்கியதும், காதலனாக நடிப்பவரும்காதலியாக நடிப்பவரும் எதிர்த் திசைகளிலிருந்து ஒருவரை நோக்கி ஒருவர் வருகிறார்கள். ஆனால் நடுப் பூங்காவில் அவர்களுக்கிடையே ஒரு மேஜை இருப்பது கண்டு திகைக்கிறார்கள்.]

காதலன்: கண்ணே! இது ஒரு புதுமாதிரிப் பூங்காவாக இருக்கும்போல் இருக்கிறதே! பூங்காவில் சிமெண்டுப் பெஞ்சுகள்தான் இருக்கும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி ஒரு டிராயிங்கும் மேஜையைப் போடுவது புது பாஷனோ?

காதலி: அன்பே! இந்த மேஜையைச் சென்ற காட்சியில் என் தந்தை அம்பலவாணர் வீட்டில் உபயோகித்தார். காட்சி மாற்ற இருட்டில் நாற்காலியை அகற்றி விட்டார்கள். மேஜையை மறந்து விட்டார்கள். அதன்பாட்டுக்கு இருந்து விட்டுப் போகட்டும். நாம் இந்தக் காட்சிக்கான டயலாக்கை ஆரம்பிக்கலாமா.....?

காதலன்: எஸ்! (தொண்டையைக் கனைத்துக் கொண்டு) கண்ணே! இவ்வழகிய பூங்காவில் உன்னோடு தன்னந்தனியாகக் கைகோத்து உலவுவதை நினைத்தால் என் உள்ளம்.....அப்படியே வான வீதியிலே நாமிருவர் மாத்திரம் இறக்கை கட்டிப் பறக்கிற மாதிரி.....

[இரண்டு நபர்கள் உள்ளிருந்து மேடைக்கு ஓடி வந்து மேஜையைத் தூக்கிக்கொண்டு மீண்டும் உள்ளே ஓடுகிறார்கள்.]

காதலி: அன்பே! இதுவரை நாம் தனியாக இல்லை. அந்த இரண்டுமேஜை தூக்கிகளும் கூட இருந்தார்கள். மீண்டும் டயலாக்கை ஆரம்பிக்கிறீர்களா?

காதலன்: ....என் உள்ளம் குதூகலத்தில் ஆழ்கிறது. என்றைக்குமே இந்த இன்பம் நிரந்தரமாக இருக்குமா? உன் தந்தை நமது திருமணத்துக்குச் சம்மதித்து விட்டாரா?

காதலி: ஓ! சம்மதித்து விட்டார்! அதாவது என் திருமணத்துக்குச் சம்மதித்து விட்டார்! உங்கள் திருமணத்தை மறுத்து விட்டார்!

காதலன்: ரோஜா! நீ என்ன சொல்கிறாய்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! என்னைப் பற்றி யாராவது உன் தந்தையிடம் வத்தி வைத்து விட்டார்களா? யார் அந்தப் பாவி?

[பூந்தொட்டி அட்டைகளுக்குப் பின் திரை இழுக்கும் சிப்பந்தி ஒருவன் ஓடுகிறான்.]

காதலி (திடீரென்று): யார் அவன் ஒற்றன்! காவலர்களே! பிடியுங்கள்! பிடியுங்கள்! (கைகளைத் தட்டுகிறாள்)

கோமதி சுவாமிநாதன்

காதலன்: உஷ்! நேற்று நீ பங்கு கொண்ட சரித்திர நாடகத்தின் டயலாக் அது! யாரோ ஸ்கிரீன் போடுகிறவன் திரைக்குப் பின்னால் ஓடுவதாக நினைத்துக் கொண்டு திரைக்கு முன்னால் ஓடியிருக்கிறான். நீ இந்த நாடகத்துக்கான டயலாக்கைச் சொல்லு.

காதலி: பாவியும் இல்லை! சாவியும் இல்லை! என் தந்தை ஏனோ நம் இருமணத்துக்கு அனுமதியளிக்க மறுத்து விட்டார்.

காதலன்: ஹா! என் வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது! நீ இல்லாத வாழ்வு எனக்கு ஒரே இருட்டு!

[திடீரென்று மேடை விளக்குகள் அணைகின்றன.]

காதலன் (தொடர்ந்து): லைட்ஸ்... லைட்ஸ்! டயலாக் பாக்கி இருக்கையா! (விளக்குகள் மீண்டும் எரிகின்றன.) நீ இல்லாத வாழ்வு எனக்கு ஒரே இருட்டு! 'டார்க்னெஸ்'... சேச்சே! டயலாக் மறந்து போச்சு! பிராம்டர் முனகுவது காதில் விழவில்லை. கண்ணே! விட்டுப் போனதைப் பதினேழாவது காட்சியில் சேர்த்துச் சொல்லி விடுகிறேன். வா! போகலாம்! வா, கண்ணே! அவ்வளவுதான் ஐயா டயலாக்! 'லைட்'டை அணை!

(போகிறார்கள்.)

[சில பயில் முறை நாடகங்களினூடே நடக்கும் களேபரங்களே நாடகக் கதையுடன் ஐக்கியப் படுத்தினால் அசல் நாடகத்தின் சுவை அதிகப் படாதோ?]



ஒரு முழம் பூ

கே. வேங்கடராமன்

“அம்மா!” என்று கூப்பிட்டாள் வேலம்மாள்.

“என்ன?” அசுவாரசியமாகக் கேட்டாள் மருதாயி. அவளுடைய கவனமும் கரிசனமும் சிறு குன்று போல் குவிந்து கிடக்கும் வண்ண மலர்களை யெல்லாம் சரம் தொடுப்பதிலேயே இருந்தது. அன்று தை வெள்ளிக்கிழமை. பெண்களுக்கு மிக முக்கியமான நாள். பெண்கள் பூச்சூடிக் கொள்வதைப் பாக்கியமாகக் கருதும் நாள். பூ என்ற பெயரில் எதைக் கொடுத்தாலும் அதைப் பெருமையாகப் பக்தி சிரத்தையோடு கண்களில் ஒற்றிக் கொண்டு கூந்தலில் சூடிக் கொள்ளும் நாள்.

அதிகாலையில் முதல் ரயிலிலேயே 'டவுனு'க்குப் போய் மல்லிகை, கனகாம்பரம், சாமந்தி, சம்பங்கி, மருக்கொழுந்து, ரோஜா முதலிய பூக்களை வாங்கி வந்து விட்டாள் மருதாயி. வரும்பொழுது 'பொல, பொல' என்று கிழக்கு நன்றாக வெளுத்து விட்டது. இனி தாமதிக்க நேரம் இல்லை என்று எண்ணியபடி நாரைக் கிழித்துப் போட்டுக் கொண்டு பூ தொடுப்பதில் அவசரம் அவசரமாக ஈடுபட்டாள் அவள். ஒவ்வொரு பூவும், ஒவ்வொரு இதழும் காசாகிற நாள்.

“அம்மா!” என்று மீண்டும் அழைத்தாள் வேலம்மா.

“என்னன்னுதான் கேட்டேனே!”

“இன்னைக்குப் பள்ளிக்கூடத்திலே இன்ஸ்பெக்டரம்மா வராங்க!” என்றாள் குழந்தை வேலம்மா.

“நேத்திக்கேதான் சொன்னியே!”

“எல்லோரும் சுத்தமா, அழகா வரணுமாம்....!”

“நீ உன் துணிக்கெல்லாம் சோப்பு போடத்தான் ரெண்டணா காசு கொடுத்தேனே!” என்றாள் மருதாயி.

“இதோ பாரு!” என்று தன் பாவாடையையும் சட்டையையும் காட்டினாள் வேலம்மாள். நன்றாகச் சோப்புப் போட்டு அடித்துத் துவைத்திருந்ததால் துணிகள் அழுக்கு நீங்கிப் 'பளிச்'சென்று காட்சியளித்தன.





“பெட்டி போட்டியா?”

“இல்லே! நானே மடிச்சுப் பாய்க்குக் கீழே வைச்சு இரவு முழுதும் அதன் மேலே படுத்திருந்தேன்!” என்றாள் வேலம்மா. இஸ்திரி போட்டது மாதிரி துணிகள் மடிக்கப்பட்டிருந்தன.

“அம்மா!”

“உம்?”

“சுத்தமா, அழகா டிரஸ் பண்ணிக்கிட்டு வர்றவளுக்கு எங்க ஹெட்மாஸ்டரம்மா அஞ்சு ரூபாய் பரிசு கொடுக்கப் போகிறாங்களாம்!”

“ஆமாம்! உனக்கும் எனக்கும்தான் கொடுக்கப் போகிறாங்களாக்கும்? எந்தப் பணக்கார வீட்டுப் பெண்ணுக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறதோ?” என்றாள் மருதாயி சுரத்தில்லாமல். வாயைவிடக் கைகள் துரித கதியில் பூ கட்டுவதில் இயங்கிக் கொண்டிருந்தன.

வேலம்மாள் அம்மாவின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

“அம்மா!”

“உம்!”

“எனக்குப் பூ வேணும் அம்மா!”

“பூவா?”

“ஆமாம், அம்மா! நல்லா அழகாக டிரஸ் பண்ணிக்கிட்டுப் போகணும் அம்மா. இன்னிக்கு இன்ஸ்பெக்டரம்மா வராங்க! எல்லாரும் பட்டும் சில்க்கும் போட்டுக்கிட்டு வருவாங்க அம்மா! எனக்கு ஒரு முழம் பூ கொடு அம்மா. தலையிலே வைச்சுக்கிறேன்!” என்றாள் வேலம்மாள்.

“ஒரு முழம் பூவா? இன்னிக்கு ஒரு முழம் பூ என்ன விலை தெரியுமில்லே? இரண்டணாவாக்கும் இரண்டணா! ஆழாக்குப் புழுங்கல் அரிசி வாங்கினா ஒரு வேளைப்போது கழியும்!” என்றாள் மருதாயி.



"சார்! எனக்குச் சம்பள உயர்வு வேண்டும்!"

"ஏன்?"

"வர வர ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது. அதை நீங்கள் கவனிக்க வேண்டும்!"

"அது சரி; வர வர உங்க மதிப்பும் ஆபீசில் குறைந்து கொண்டே வருகிறது. அதை நீங்கள் கவனிக்க வேண்டாமா?"

"தரமாட்டியா அம்மா?"

"நல்லா கேட்டே போ! ஒரு முழம் பூன்னு. இன்னிக்குத் தை வெள்ளிக் கிழமை தெரியு மில்லே! ஒரு முழம் பூ ரெண்டணாவுக்கும் போகும்! நாலணாவுக்கும் போகும். ஞாபகம் வைச்சுக்க!"

வேலம்மா இந்த ஏமாற்றத்தை எதிர் பார்க்கவில்லை. அம்மாவே தலைவாரிப் பின்னித் தன் கையாலேயே 'கம கம' வென்று மணக் கும் கதம்பத்தைச் சூட்டுவாள்; அதைச் சூடிக் கொண்டு போனால் பள்ளிக்கூடத்திலுள்ள பெண்கள் எல்லாம் அதன் வாசனையில் சொக்கி 'ஏதுடி, ஏதுடி?' என்று கேட்பார்கள் என்ற பெருமையில் ராத்திரி தூங்கும் போதுகூட அதை நினைத்துக் கொண்டு பெருமையாகத் தூங்கினாள். அந்தப் பெருமை பூக்காரியின் மகளாகப் பிறந்தும் கூட ஒரு நொடியில் தவிடு பொடியாகி விட்டதே!

"பானையிலே தண்ணியும் சோறுமா இருக் குது! கண்டவச்ச குழம்பும் இருக்குது! எடுத் துப் போட்டுச் சாப்பிட்டு விட்டு ஸ்கூலுக்குப் போ!" என்றாள் மருதாயி கட்டி முடித்த பூக் களைப் பந்து பந்தாய், வளையம் வளையமாய்ச் சுருட்டியபடியே.

பூக் கூடையை ஏக்கத்தோடு பார்த்தாள் வேலம்மா. தரையில் கட்ட முடியாத நிலை யில் இதழ் உதிர்ந்தும், காம்பற்றும், வாடியும் வதங்கியும் பூக்கள் கிடந்தன.

"அம்மா!"

"பூவா?"

"ஆமாம்மா!" என்றாள் வேலம்மா.

"வித்துப்புட்டு மிச்சமிருந்தால் தரேன்."

"ஒரே ஒரு முழம் அம்மா!" என்று தனது பிஞ்சு வலக் கரத்தை இடது கையின் துணை கொண்டு. முழம் போட்டுக் காட்டினாள் வேலம்மாள்.

அவள் செய்கையைக் கண்டு மருதாயிக்குச் சிரிப்பு வந்தது. உதிரிப்பூகூடக் காசாகும் நாள் இன்று. வெறும் நாரில் பூ என்று பெயருக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக வைத்துக் கட்டியிருந்தாலும் கூடக் காசாகி விடும் இன்று. ஒரு முழம் பூவை வீணாக்கலாமா?

"நான்தான் அப்பவே சொல்லிப்புட் டேனே!" என்றபடி கூடையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் மருதாயி. கூடையின் மேலே மூடியிருந்த ஈரத் துணியின் அடியி லிருந்து கதம்பமும் மல்லிகையும் போட்டி போட்டுக் கொண்டு மணத்தன. ரோஜாப்பூ சென்டு செண்டாய் எழில் கூட்டி நின்றது.

"கதம்பம், கனகாம்பரம், மல்லி, சாமந்தி!"

காற்றிலே கரைந்து கொண்டிருந்தது மருதாயியின் குரல்.

அவள் சென்றதும் வேலம்மாவுக்கு அழுகை அழுகையாக வந்தது. நாரைத் தண்ணீரில் நனைத்து எடுத்துக் கீழேகிடந்த இதழ் உதிர்ந்த, காம்பற்ற மலர்களை யெல்லாம் சேகரித்துத் தொடுத்துப் பார்த்தாள். ஒன்றுகூடக் கட்டில் பிடிபடாமல் ஒன்றன்பின் ஒன்றாய் உதிர்ந்து போய்க் கடைசியில் கையிலிருந்த நார் மட்டுமே மிஞ்சியது.

வேலம்மாவுக்குக் கைசோர்ந்தது. இரண்டு கால்களாலும் அந்தப் பூக்களை எட்டி உதைத் துத் தள்ளித் தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டாள். தலையை இரட்டைப் பின்னல் பின்னி ரிப்பன் வைத்துக் கொண்டாள். மடித்துவைத்திருந்த சட்டை, பாவாடையை அணிந்து கொண்டாள். சாப்பிடப் பிடிக்க வில்லை அவளுக்கு. புத்தகங்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பினாள்.

எத்தனைக்கெத்தனை ஆவலுடன் மருதாயி கிளம்பினாளோ, அத்தனைக்கத்தனை அவளுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது.

அவள் குடிசையை விட்டுக் கிளம்பித் திரு வல்லிக்கேணியை அடையும்போது சூரியன் 'விறு விறு' என்று மேலே வந்து விட்டான். நேரமாகி விட்டது. பெண்களெல்லாம் எண் ணெய் தேய்த்துக் குளித்து விட்டுச் சமைய லில் ஈடுபட்டிருக்கும் நேரம் அது.

"கதம்பம், சாதி மல்லி, சாமந்தி, ரோஜாப்பூ!" என்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டு நான்கு ரத வீதிகளையும் நாற்பது முறை வலம் வந்தாள் மருதாயி. காலணாப் பூகூட விற்கவில்லை. கூப்பிட்டுக் கூப்பிட்டு அவளிடம் பூ வாங்குவோரது தலையி லெல்லாம் கூடை கூடையாகப் பூக்கள் எங் கிருந்து வந்தன?

ஒரு தெரு பாக்கியில்லை; ஒரு சந்து பாக்கி யில்லை. 'பூ' என்று ஒருவராவது கூப்பிட வேண்டுமே!

'ஒருநொடியில் அவ்வளவு பூக்களும் விற்றுப் போய் மடி நிறையக் காசுகள் குலுங்கக் கூடை யைத் திருப்பித் தலையில் போட்டுக் கொண்டு வருவோம்' என்று மருதாயி கண்டு கொண் டிருந்த கனவு பகற்கனவாகி விடவே, மரு தாயி தளர்ந்து போனாள்.

பைகிராப்ட்ஸ் ரோடும், பெரிய தெருவும் சந்திக்கிற சந்திப்பில் பிளாட்பாரத்தின் ஓரத் தில் கூடையை வைத்துக் கையில் ஒரு கதம் பத்தை எடுத்துக் கொண்டு, "வா ஐயா! வா, அம்மா!" என்று வருவோர் போவோரை

யெல்லாம் வாய் சளைக்காமல் கூப்பிட்டுப் பார்த்தாள். ஒருவராவது அவள் இருந்த திக்கைப் பார்க்க வேண்டுமே. பிளாட்பாரம் முழுதும் நிறைந்து கிடந்தன பூக்கள்!

காலையில் வெறும் வயிற்றுடன் வந்ததால் மருதாயிக்குப் பசி மயக்கம் உண்டாயிற்று. பூ கொஞ்சம் விற்றிருந்தாலாவது 'இங்கன் டீ' வாங்கிச் சாப்பிடலாம். அதற்குக் கூட வழியில்லை இன்று.

காலையிலிருந்த சுறுசுறுப்பு அடங்கிப் பைகிராப்ட்ஸ் ரோடு தனது சலனத்தைக் குறைத்துக் கொண்ட போது பண்டு ஆபீஸ் மணி பதினொன்றடித்தது.

மருதாயியின் கூடையில் இருந்த பூக்கள் அவளைப் பார்த்துச் சிரித்தன. பூக்களிடையே பூக்களோடு பூக்களாய்ப் பூப் போன்ற முகத்துடன் அவளுடைய மகள் வேலம்மாள் அவளைப் பார்த்துச் சிரித்தாள். கைகொட்டிச் சிரித்தாள். 'எனக்கு ஒரு முழம் பூ இல்லை என்றுயே அம்மா! இன்னும் கொஞ்ச நேரத்தில் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும் இந்தப் பூக்கள் வாடி விடுமே! உலைப் பானையில் அரிசிக்குப் பதிலாக இந்தப் பூச்சரங்களை உதிர்த்து உதிர்ந்த பூக்களைப் போட்டுச் சோறு பொங்குவாயா அம்மா?' என்று கேட்டுக் கெக்கலி இட்டுச் சிரித்தாள் வேலம்மாள்.

மருதாயியின் மனச்சாட்சி அவளை இடித்துக் காட்டியது. தன் மகள் ஆசையாகத் தன் பிஞ்சுக் கரத்தை முழம் போட்டுக் காட்டிக் கேட்டபோது தான் இல்லை என்று மறுத்ததால்தான் கொஞ்சம்கூட விற்பனையாகாமல் அத்தனை பூக்களும் தேங்கி விட்டன என்று எண்ணினாள் அவள். குழந்தை உள்ளம் தெய்வத்தின் உள்ளத்துக்குச் சமமானது. தெய்வ உள்ளத்தை நோக அடித்ததன் பலன்தான் இதுவரை ஒரு நயாபைசா பூ கூட விற்கவில்லை என்று நினைத்தாள் அவள். அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. கை நிறையப் பூ எடுத்து மகள் தலை நிறைய முடிந்தால் தான் அவளுக்கு மனம் நிம்மதி அடையும் போலிருந்தது.

கூடையைத் தலையின் மீது தூக்கி வைத்துக் கொண்டு வேலம்மாள் படித்துக் கொண்டிருந்த பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்தாள் மருதாயி. படிப்பில் ரொம்பவும் சூடிகை வேலம்மாள். நிறையப் பரிசுகள்கூட வாங்கியிருக்கிறாள்.

மருதாயி பள்ளிக்கூடத்தை அடைந்த போது காலை இடை வேளை மணி அடிப்பதற்குச் சரியாக இருந்தது. தன் மகள் வெளியில் வருவாள் என்கிற நினைப்பில் கூடையைக் கீழே இறக்கிக் கேட்டருகில் வைத்து உட்கார்ந்தாள் அவள்.

'திமு திமு' வென்று வந்த பெண் குழந்தைகள் கூட்டம் அவளையும் அவளது கூடையையும் சுற்றிக் கொண்டு விட்டன. எல்லாவற்றுக்கும் பத்துப் பன்னிரண்டே வயதுதான் இருக்கும். ஒன்றன் மீது ஒன்றாய் விழுந்து கொண்டு 'எனக்கு ஓரணாப் பூ. எனக்கு ரெண்டணாவுக்குப் பூ' என்று காசை மருதாயியின் கூடையில் எறிந்தன. காசு மழை பொழிந்தது மருதாயியின் பூக் கூடையில். இத்தகைய வரவேற்பை, விற்பனையை மருதாயி கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை; யாரிடம் எவ்வளவு காசு வாங்கியிருக்கிறோம், எவ்வளவு பூக் கொடுத்தோம் என்பது கூட மருதாயிக்குத் தெரியவில்லை. மடமடவெனப் பூவை முழம் போட்டுக் கொடுத்தவண்ணம் இருந்தாள். குழந்தைகள் அவசரத்திலிருந்தது மருதாயிக்குச் சௌகரியமாகப் போயிற்று. கால் முழம் அரை முழமாயிற்று. அரை முழம் ஒரு முழமாயிற்று. கூடை 'கிடுகிடு' வெனக் காலியாகத் தொடங்கியது. மருதாயிக்கு மகிழ்ச்சி தாளவில்லை. மகளுக்குப் பூ கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்ததுக்கே வியாபாரம் இப்படிச் சக்கைப் போடு போடுகிறதே! காலையிலேயே அவள் ஆசைப் பட்ட போது, கைநிறைய மனம் நிறையக் கொடுத்திருந்தால்.....?

குழந்தைகள் கூச்சலும் கும்மாளமுமாய்ப் பூ வாங்கி ஒன்றன் தலையில் மற்றொன்று சூட்டி அழகு பார்த்துக் கொண்டிருந்தன!

''என்ன கூச்சல் அங்கே? இன்ஸ்பெக்டரம்மா வந்திருப்பது நினைவிலில்லே?'' என்று அந்தக் குழந்தைகளை அதட்டியபடியே வந்தாள் ஒரு டீச்சரம்மாள். பூக்காரியையும், எல்லாப் பெண்களும் தலையில் பூ சூடிக் கொண்டிருப்பதையும் பார்த்து விட்டு, ''பூவா? சத்தம் போடாமல் ஒருவர் பின் ஒருவராக நின்று வாங்கிக் கொள்ளுங்கள். சீக்கிரம் வாங்கிக் கொள்ளுங்கள். அடுத்த 'பீரியட்' மணி அடிக்கப் போகிறது!'' என்று கூறி விட்டு நகர்ந்தாள் டீச்சரம்மாள்.

உடனே குழந்தைகள் ஒன்றன்பின் ஒன்றாக நின்று மருதாயியிடம் பூ வாங்கிக் கொள்ளத் தொடங்கின. பூக்குவியல் குறையக் குறையக் காசுக் குவியல் அதிகமாக அதிகமாக மருதாயிக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. அரை குறையாக முழம் போட்டுப் பூவை யெல்லாம் காசாக மாற்றினாள். கடைசியில் மிச்சமான ஓர் அரை முழம் பூவையும் காசாக்கி விட்டு, அதற்கு அடுத்த பெண்ணுக்கு இல்லை என்று சொல்லத் திரும்பினாள் மருதாயி.

''ஒரே ஒரு முழம் பூ கொடு!'' என்று தன் பிஞ்சு வலக் கரத்தை முழம் போட்டு நீட்டியபடி மருதாயியிடம் ஐந்து ரூபாய்த் தாளை நீட்டியபடி நிற்பது யார்? வேலம்மாவா?

''அம்மா! வேலம்மா! இத்தனை பெண்களுக்கு இல்லையென்று சொல்லாமல் பூ கொடுத்தேனடி! உனக்குக் கொடுக்க இல்லையே!'' என்று காலியாகக் கிடக்கும் கூடையையும் தன் பெண்ணையும் பார்த்துக் கண்ணீர் விட்டபடி கூறினாள் மருதாயி.

''நான் சும்மா பூ கேட்கலே! காசு தரேன்! இதோ பாரு ஐந்து ரூபாய். நான் 'லிம்பிளா' டிரஸ் பண்ணிக்கிட்டுச் சுத்தமா வந்தேன்னு எங்க ஹெட் மிஸ்டரம்மா எனக்குக்கொடுத்த பரிசு ஐந்து ரூபாய். எல்லாரும் பூ வைச்சிருக்காங்க. அந்த ரூபாயையும் நீயே வைச்சுக்க! எனக்கு ஒரே ஒரு முழம் பூ கொடேன்!'' என்று தனது வலது கரத்தை இடது கரத்தால் மீண்டும் முழம் போட்டுக் காட்டினாள் சிறுமி வேலம்மாள்.

மருதாயி இரு கைகளாலும் தன் முகத்தை மூடிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.



அத்தியாயம் நாற்பத்தொன்று

இன்ப நினைவு

சித்திராவுக்கும் முருகையனுக்கும் திருமண நாள் குறித்ததும், நிச்சய தார்த்த விழா ஏற்பாடுகளும் நடைபெறத் தொடங்கின. சித்திராவின் தாயார் தன் ஒரே பெண்ணின் திருமண விழா என்பதால் அதை எவ்வளவோ சிறப்பாகச் செய்ய விரும்பினாள். அண்ணன் மாணிக்கமோ தங்கையின் திருமணத்தை ஒரு காரணமாக வைத்துத் தமக்கும் தம்முடைய தொழிலுக்கும் பெரியதொரு விளம்பரம் தேடிக் கொள்ள நினைத்தார்.

தம்முடைய தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாப் பிரமுகர்களையும், எல்லா நகரங்களிலுமிருந்தும் வரவழைத்துப் பிரமிக்க வைக்கத் திட்டமிட்டார் அவர். பம்பாய், கல்கத்தா, டில்லி முதலிய வெளியூர்களிலிருந்து வரும் பெரிய மனிதர்களுக்கென்றே தனியானதொரு பங்களா ஒதுக்கி வைக்கப்பட்டது. பலரிடம் கார்களுக்குச்சொல்லியிருந்தார்; வேலையாட்களுக்கு வழி செய்திருந்தார்; முன்கூட்டியே பலருக்குத் தனிப்பட்ட முறையில் கடிதங்களும் எழுதியிருந்தார்.

சென்னை நகரத்தில், பணத்தைத் தண்ணீர் போல் வாரி இறைக்கத் தயாராக இருந்தால், எந்தப் பெரிய விழாக்களையும் இலகுவாக நடத்தி விடலாம் என்பது அவருக்குத் தெரியாததல்ல. செலவு செய்யப் போகும் பணமும் சித்திராவுக்கென்று அவருடைய தகப்பனார் ஒதுக்கி வைத்திருந்த பணம்தான். ஆகவே ஒரு கல்லில் இரண்டு மாங்கனிகளை வீழ்த்தப் பாடுபட்டார் மாணிக்கம். சித்திராவுக்கும் தாயாருக்கும் உற்சாக மூட்டிச் செலவைத் தாராளமாகச் செய்து, அதே சமயம் தம்முடைய தொழிலுக்கும் பிரம்மாண்டமான விளம்பரம் செய்து கொள்ள வழிகளைச் செய்து கொண்டு வந்தார்.

மாணிக்கத்தின் பேச்செல்லாம் 'கல்யாணத்துக்கு அதைச் செய்ய வேண்டும்; இதைச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும்' என்பதிலேயே இருந்தது. அவருடைய மனைவியிடம் மட்டிலும் ரகசியமாகக் காதைக் கடித்து ''நீ பாட்டுக்கு எதையும் குறுக்கே சொல்லிவைத்து அம்மாவின் கோபத்தைத் தேடிக் கொள்ளாதே!'' என்று எச்சரித்தார். ''நான் எதையும் காரணமில்லாமல் செய்ய மாட்டேன்; நம்முடைய தொழிலுக்கு நடக்கப் போகிற கல்யாணம் இது! என்னுடைய சொந்தப் பணத்தைப் போட்டு நான் இவ்வளவும் செய்து கொள்ள முடியுமா?'' என்றார்.

குமரவேலுக்கும் முன்பே செய்தி எட்டிவிட்டது. பதறியடித்துக்கொண்டு அவர் மாணிக்கத்திடம் வந்து தனிமையில் பேச முயன்றார். அவருடைய நோக்கத்தை முன்பே தெரிந்து கொண்டிருந்த மாணிக்கம், அவருக்கு மறுத்துப் பேசவே இடம் கொடுக்காமல், முதல் பேச்சிலேயே அவரை அடித்து வீழ்த்தி விட்டார். சரியானபடி குமரவேலை மடக்கித் தம் பக்கம் இழுத்து விட்டார்.

''மாமா! முருகையன் உங்களோட தம்பி பிள்ளை. உங்களோட பிள்ளையின் கல்யாணத்தை நீங்க எப்படி முன்னாலே நின்னு நடத்திக் கொடுப்பீங்களோ, அப்படி இதை நடத்திக் கொடுக்கணும். கல்யாணத்திலே நடக்கப் போகிற எல்லாச் சடங்குகளுக்கும் நீங்களும் அத்தையுந்தான் பொறுப்பு. மாப்பிள்ளை வீட்டுக்காரராக இருந்து, மனம் கோணாமல், மங்களகரமா இதை முடித்து வைக்கணும்!''

'அட பயலே! என்னிடமே உன் கை வரிசையைக் காட்டப் பார்க்கிறாயா?' என்று நினைத்துக் கொண்ட குமரவேல், ஒன்றும் பேசாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். கல்யாண முடிவு என்கிற வெள்ளம் தலைக்கு மேல் போய் விட்டதாகவும், இனி அதை அணை போட்டுத் தடுக்க முடியாதென்றும் அவருக்குத் தோன்றி விட்டது. சிறிதுகூடத் தாங்கிக் கொள்ள முடியாத அதிர்ச்சி அவருக்கு. அதை அவர் முகத்திலிருந்து மறைக்கப் பார்த்தார்; வாய் விட்டுச் சிரித்து ஜீரணித்தார்; அவருடைய சிரிப்பு அழுகையை விட மோசமாக இருந்தது.

தம்முடைய தலையை அழுத்தித் தடவிக் கொண்டே, ''ஆகட்டும், மாணிக்கம்! வயசிலே நீங்க சின்னப் பிள்ளையானாலும் பணத்திலே பெரிய புள்ளி!'' என்றார். ''நான் என்ன இருந்தாலும் பட்டிக்காட்டுப் பேர்வழி; நீங்க பட்டணத்திலே பிறந்து வளர்ந்தவங்க. எதை

யும் நல்லா யோசிச்சுத்தான் செய்து கொள்வீங்க.—நீங்க சொல்றபடி கேட்க வேண்டியது என் கடமை.''

''அப்படி அரை மனசோடு நீங்க சொல்லக் கூடாது, மாமா! இது ஒரு நல்ல காரியம் பாருங்க!''

''அரை மனசென்ன? ஒண்ணரை மன சோடு நான் வந்து நடத்திவைக்கிறேன்'' என்று அரைக்கால் மனம் கூட இல்லா மல் சொல்லிவிட்டு, உடனே எழுந்து சென்றார் குமரவேல்.

எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு நெருக்கடியை எளிதில் சமாளித்துவிட்ட திருப்தியுடன் மாணிக்கமும் ஒரு பெரு மூச்சு விட்டார். சம்பந்திக்குக் கொடுக்க வேண்டிய எல்லா மரியாதைகளையும் கொடுத்து, எல்லாச் சீர்வரிசைகளையும் குமரவேலுக்கும் அவர் மனைவிக்கும் செய்து, அவர்களைப் பரிசுகளால் குளிப் பாட்டி விட முடியும் என்ற தைரியம் அவருக்கு ஏற்பட்டது. ஆற்றுப் பெருக் கைப் போல் ஓடப் போகும் பணத் தண் ணீரில், இரண்டு வாளியை நிரப்பி அவர் மீதும் ஊற்றி விட்டால் மனிதர் நனைந்து போக மாட்டாரா!

நாட்கள் நெருங்க நெருங்க முருகைய னுக்கும் சித்திராவுக்கும் ஒவ்வொரு மணிப் பொழுதும் ஒரு யுகமாகிக் கொண்டு வந்தது. வேறு வேறு வீடு களில் இருவரும் இருந்தாலாவது, சிறிது நேரமாவது வேறு விஷயங்களைப் பற்றி அவர்கள் நினைப்பதற்கு இடமுண்டு. இப்போதோ எந்த நேரமும் ஒருவர் மற்றொருவருடைய நினைவு மஞ்சத்தில் தான் உல்லாசமாகத் துவண்டு திளைத் துக் கொண்டிருந்தார்கள்.


பங்குனி சித்திரையில் வெளி உலகத்து இயற்கையில் தோன்றும் இளவேனிலின் கவர்ச்சி கலை உள்ளத்தை மயக்கத்தில் ஆழ்த்துகிறதல்லவா? இளம் தளிர்களின் பொன்னிறத் துடிப்பும், மலர்க் கூட்டத் தின் கண்கொள்ளா அழகும், காற்றில் தவழ்ந்து வரும் நறுமணமும் ஏதோ ஓர் இனம் புரியாத வேதனையைக் கலை மனத்துக்குக் கொடுக்கிறதல்லவா?

'இளம் தளிரின் மென்மையான பொன்னிறப் புதுமையில் எப்படி இரண் டறக் கலந்து துடிப்பது? மலர்க் கூட்டத் தின் மடியில் துவண்டு, எப்படி அதன் கண்கொள்ளா அழகில் கருத்தழிந்து மயங்குவது? காற்றில் தவழும் நறு மணத்தை மனங் கொண்ட மட்டும் பருகி, எப்படி அதன் விவரிக்க முடியாத இன்ப அநுபவத்தை ஒவ்வொரு உயிர் அணுவுடனும் பகிர்ந்து கொள்வது?'— கலைஞனுக்கு இளவேனிலிடம் ஏற்படும் இதே இதயத் துடிப்புத்தான் முருகைய னுக்கும் சித்திராவைக் காணும்போ தெல்லாம் ஏற்பட்டது.

பல நாட்களாக ஒன்றாக இருந்தும் கூட, இருவராகப் பிரிந்து பழகக்கூடிய பண்பு முருகையனிடம் இருந்தது. அந்தப் பிரிவின் பரபரப்பெல்லாம் இப் போது முருகையனிடம் ஒன்றாகத் திரண்டு விட்டது. அடிக்கடி திருமண நாளை எண்ணிப் பார்த்துக் கொண் டான். பேச்சிலும் செய்கையிலும் கூடச் சில வேளைகளில் அவனையறியாத தடு மாற்றம் காணப்பட்டது.

இந்தச் சமயத்தில்தான் ஒரு நாள் காலையில் ஜன்னல் வழியே தெருவாசலை அவன் பார்த்துக் கொண்டு நின்றபோது அங்கு ஒரு சிறிய நிகழ்ச்சி நடந்தது. காவலுக்கு நின்று கொண்டிருந்த கூர்க்கா அவசரமாக வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த ஒரு மனிதனை முரட்டுத்தனமாகத் தடுத்து நிறுத்தி னான்; திட்டினான்; கூர்க்காவைப் பிடித் துத் தள்ளி விட்டு உள்ளே நுழையப் பார்த்தவன் வேறு யாரும் இல்லை; முனியாண்டி தான்!


முருகையன் வேகமாக வெளியில் சென்று காவலாளியின் கரத்தைப் பற்றி னான். முனியாண்டி நெடுஞ்சாண்கிடை யாகத் தரையில் விழுந்து முருகையனின் கால்களை இறுகப் பற்றிக் கொண்டான். கால்களை விடவும் இல்லை; தரையி லிருந்து எழுந் திருக்கவுமில்லை.



''என்ன முனியாண்டி? என்ன விஷ யம்?'' என்றான் முருகையன் வியப்புடன்.

''சாமி! நான் புள்ளை குட்டிக்காரன் சாமி! என்னை நீங்கதான் காப்பாத்திக் கஞ்சி ஊத்தறீங்க! இந்த நன்றியை நான் மறக்கவே மாட்டேன் சாமி!''

இந்தப் போக்கில் முனியாண்டி அழுது புலம்பிக் கொண்டு ஏதேதோ பேசினன். முதலில் முருகையனுக்கு எதுவுமே புரியவில்லை. பிறகு அவனுடைய மனைவி மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிருள் என்பது மட்டும்



தெரிந்தது. அவன் அதற்காகப் பண உதவியையும் நாடி வரவில்லை.

''சாமி! வேலம்மா சாகப்போகிற நிலைமையிலே கிடக்கிரு. நீங்கதான் அவளுக்குக் கண்கண்ட தெய்வம். அந்தத் தெய்வத்தை ஒருதரம் கண்ணுலே கண்டுட்டுக் கண்ணை மூடணும்னு சொல்ரு. உங்களைப் பார்க்கறதுக்குத்தான் அவ உயிரு இன்னும் காத்துக்கிட்டிருக்கு..... எனக்காக......ஒரே ஒரு நிமிஷம் வந்தீங்கன்னு...சாமி! உங்களைக் கையெடுத்துக் கும்பிடுறேன்.''

முருகையன் காரை எடுத்துக்கொண்டு வந்தான். முனியாண்டியையும் அதில் ஏற்றிக் கொண்டான். கார் புறப்பட்டது.

அத்தியாயம் நாற்பத்திரண்டு

பூமித்தாய் பொறுக்கட்டும்!

முனியாண்டியின் மனைவி வேலம்மாளுக்குக் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக அளவுக்கதிகமான ஜலதோஷமும், மூச்சுத் திணறலும், தொண்டைக் கட்டும் இருந்தனவாம். வழக்கமாகத் தடிமன் பிடித்தால் எந்தக் கை மருந்தைச் சாப்பிடுவாளோ, அதைத்தான் இந்த முறையும் சாப்பிட்டாளாம். ஆனால் நோய் தீரவில்லை. அதற்குமாறாக வாந்தியும் பொறுக்க முடியாத வயிற்று வலியும் ஏற்பட்டனவாம். கடைசி வரையில் நோயுடன் போராடி விட்டுப் பிறகு பெரிய ஆஸ்பத்திரிக்கு மிகவும் மோசமான நிலையில் போய்ச் சேர்ந்தாளாம்.

முருகையனின் கார் பெரிய ஆஸ்பத்திரிக்குச் சென்றது. அவனை அழைத்துக் கொண்டு வேலம்மாள் கிடந்த படுக்கைக்குச் சென்றான் முனியாண்டி. ஏற்கனவே அங்கு கட்டிலைச் சூழ்ந்து நின்று அவனுடைய குழந்தைகள் தேம்பிக் கொண்டிருந்தார்கள்.

பரம ஏழையான ஒரு பெண் பிள்ளையைப் பார்ப்பதற்கு நாகரிகமான தோற்றமுள்ள மனிதன் ஒருவன் வந்திருப்பதைக் கண்டவுடன் அக்கம் பக்கத்திலிருப்பவர்களின் கவனம் அங்கு திரும்பியது. வேலம்மாள் கட்டிலில் விழித்துப்போட்ட நாராய்க் கிடந்தாள். முருகையனைக் கண்டவுடன் தன் பலமனைத்தையும் திரட்டிக் கொண்டு அவனுக்குக் கைகூப்ப முயன்றான். முருகையன் அதைத் தடுப்பது போல் அவளைக் கையமர்த்தினான்.

வேலம்மாளின் கண்களிலும் முகத்திலும் உயிர்க்களை கணத்துக்குக் கணம் விடைபெற்றுக் கொண்டிருந்தது. வாய் திறந்து ஏதோ பேசினாள். வலுவில்லை. பேச்சில் ஒலியில்லை; முருகையன் காது கொடுத்து அவள் பேச்சைப் புரிந்து கொள்ளப் பார்த்தான்.

“கடைசி கடைசியாக உங்களைப் பார்க்கணும்னு ஓர் ஆசை கிடந்து அடிச்சிகிட்டிருந்தது. நீங்க என்னோட உடன்பிறந்த பிறப்பு மாதிரி. நீங்க.. எங்களோட குல தெய்வம்.....வேறே என்ன நான் உங்ககிட்டே சொல்லப் போறேன்?.....அவருக்கு எப்பவும் கஞ்சி ஊத்த மறந்திடாதீங்க...... அவருக்கு ஊத்தற கஞ்சி என்னோட அத்தனை குழந்தைகளுக்கும் நீங்க பால் வார்க்கிற மாதிரி......அவரு.... அவரு.... இந்தக் குடும்பத்தைக் காப்பாத்தறதுக்குப் பட்டிருக்கிற பாடு!....”

அவளுக்கு அதற்கு மேல் பேசத் திராணியுமில்லை; பொங்கிவந்த உணர்ச்சிப் பெருக்கு அவளைப் பேச விடவும் இல்லை. அவளுடைய கண்களில் நீர்வழிந்தது. அந்தக் கண்களால் அவனை ஆதரவுடன் உற்றுப் பார்த்தாள்.

“உனக்கு ஒரு குறையும் வராது.... கட்டாயம் நான் குடும்பத்தைக் கவனித்துக் கொள்கிறேன். குழந்தைகளையும் முனியாண்டியையும் பார்த்துக் கொள்வது என் பொறுப்பு ..... இப்போது உனக்கு என்ன வந்து விட்டது? நான் டாக்டரைப் பார்த்து உன்னைக் காப்பாற்ற ஏற்பாடு செய்கிறேன்...கவலையே வேண்டாம்” என்றான் முருகையன்.

வேலம்மாள் தனக்காகக் கவலைப்படக் கூடிய நிலையில் அப்பொழுது இல்லை. முருகையனுடைய சொற்கள் அவளுடைய இருதயத்துக்குள் நம்பிக்கைச் சுடர்களாய்ப் பாய்ந்தன. மெதுவாகத் தன் கணவனின் பக்கம் திரும்பினாள்; குழந்தைகளின் பக்கம் திரும்பினாள். நம்பிக்கை நிறைந்திருந்த அந்த இருதயத்தோடு அவர்களை மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

தாய்க்குலம் தன் குழந்தைகளின் நல்வாழ்வைத் தவிர வேறு எதைப் பார்த்து இந்த உலகத்தின் வேதனைகள் அனைத்தையும் தாங்கிக் கொள்கிறது? தன் குழந்தைகளின் தகப்பன் வாழ்ந்து, குழந்தைகளையும் வாழவைக்க வேண்டுமென்பதைத் தவிர வேறு என்ன ஆசை அதற்கு?

முருகையன் அடுத்தாற் போலிருந்த டாக்டரம்மாளிடம் சென்று வேலம்மாளின் உடல் நிலையைப் பற்றி விசாரித்தான். டாக்டரம்மாள் கூறிய பதிலிலிருந்து அவள் மீண்டும் பிழைத்துக் கொள்வாள் என்று ஊகிக்க அவனால் முடியவில்லை.

“சொந்தமாக ஏதோ கை மருந்து சாப்பிட்டே சொஸ்தப்படுத்திக்கொள்ள முயன்றிருக்கிறாள். நிலைமை ஆபத்தாகும் வரையில் விட்டு விட்டு, இங்கே கடைசியில் கொண்டு வந்திருக்கிறார்கள். நாங்கள் முடிந்ததைச் செய்கிறோம்.”

“காசில்லாதவர்கள் ஏதோ தங்கள் கையில் கிடைத்ததை மருந்தென்று நம்பிச் சாப்பிடுகிறார்கள். கஞ்சிக்கு உப்பு வாங்க வழியில்லாத போது, மருந்துக் கடைகளையும் டாக்டர்களையும் அவர்கள் தாங்க முடியுமா?”

மேற்கொண்டு டாக்டரம்மாள் கூறிய செய்திகள் முருகையனைத் திடுக்கிட வைத்தன. வேலம்மாள் தடிமனைப் போக்குவதற்காக தான் தவறாமல் மஞ்சள் தூளைக் கலக்கிக் குடித்து வந்தா

மிகச்சிறந்தது!



வீட்டிற்கும்
—ஹோட்டலுக்கும்

ப்ரூக் பாண்ட்
ஸ்பெஷல் ஹோட்டல் ப்ளெண்ட்

டஸ்ட் தேயிலையே

* எப்பொழுதுமே உங்களுக்கென்று புதியதாக தோட்டத்திலிருந்து வருகிறது.
* மிகத் திறமையுடன் கலவை செய்திருப்பதால் இனிமை மிக்க நறுமணம் கொடுக்கிறது.
* லட்சக் கணக்கான மக்கள் அருந்தி ஆனந்தம் அடைவது.


மூன்று அளவுகளில் கிடைக்கிறது
500 கிராம், 100 கிராம்,
50 கிராம்

கோலினுஸ்

பற்சிதைவை ஒழித்து வாய் நாற்றத்தை அகற்றுகிறது.

நிச்சயமான ஆதாரம்!

பற்சிதைவுக்கும் வாய் நாற்றத்துக்கும் காரணமான அநேகமான கிருமிகளைக் "கோலினுஸ்" பற்பசை அறவே அழித்து விடுகிறதென ஆராய்ச்சிக்கூடத்துச் சோதனைகள் நிரூபிக்கின்றன.




காலையிலும் இரவிலும் அரை அங்குல அளவு கோலினுஸ் கொண்டு உங்கள் பற்களை இரண்டு நிமிடங்களுக்குத் தேயுங்கள். அதன் விசேஷமான உட்புகும் நுரை உங்கள் பல்லிடுக்குகளிலிருந்துகொண்டு பற் சிதைவுக்கும் வாய் நாற்றத்துக்கும் காரணமான உணவுத் துணுக்குகளை அகற்றுகிறது.

தவறாமல் வழக்கமாக **கோலினுஸ்** உபயோகிப்பதால்

- பற்சிதைவு ஒழிக்கப்படுகிறது.
- வாய்நாற்றம் அறவே அகற்றப்படுகிறது.
- பற்கள் பளபளப்பாக வெண்மையாகின்றன.
- ஈறுகள் வலுப்படுகின்றன.

வேறெந்தப் பற்பசையும் உங்களுக்கு இதை விட அதிக திருப்தியை அளிக்காதென உங்கள் பல்டாக்டர் கூறுவார்!



கோலினுஸ் குளோரோபிலும் கிடைக்கிறது.

Registered User: GEOFFREY MANNERS & COMPANY LIMITED

ளாம். மஞ்சள் தூளுக்கு இயற்கையாகவே ஜலதோஷத்தைப் போக்கும் சக்தியும் இருக்கிறதாம். —ஆனால் ஏனோ திடீரென்று வாந்தியும் வயிற்றுவலியும் ஏற்பட்டு நிலைமை மோசமாகப் போய்விட்டதாம்.

"இவள் சாப்பிட்ட மஞ்சள் தூளில் ஏதாவது 'வெளிப் பொருள்' கலந்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு இப்போது அவசரமாகப் பரிசோதனை செய்து பார்க்கச் சொல்லியிருக்கிறேன். குடல் புண்ணாகி ரணமாகி விட்டது. சொட்டுத் தண்ணீர் உள்ளே புகாத படி வாந்தி எடுக்கிறாள். வெறும் மஞ்சள் தூளாக மட்டுமிருந்தால் இந்த அளவுக்கு அபாயம் ஏற்பட்டிருக்காது."

"மஞ்சள் தூளில் வேறு ஏதாவது பொருளா! வெளிப்பொருள் என்றால்?"

"அதை இப்போது சொல்ல முடியாது. பரிசோதனையின் முடிவு தெரிந்த பிறகுதான் அவர்களுடைய குறிப்பைக் கொண்டு சொல்ல முடியும்."

"டாக்டர்! இப்போது வேலம்மாளைப் பிழைக்க வைக்க முடியுமா, டாக்டர்?" என்று கதறினான் முருகையன்.

டாக்டரம்மாள் பதிலளிக்காமல் அவனைப் பரிதாபத்துடன் உற்றுப் பார்த்தார். "உலகத்தில் அக்கிரமம் அதிகரித்து விட்டது. காசு சம்பாதிப்பதற்காகச் சாப்பாட்டில் விஷத்தையே கலந்து விடுவார்கள் போலிருக்கிறது. டாக்டர்களும், ஆஸ்பத்திரிகளும், மருந்துகளும் இருந்தால் மட்டும் மனிதர்களை நாம் காப்பாற்றி விட முடியுமா? சில மனிதர்களிடம் கேவலமான திருட்டு ஆசை பெருகி விட்டது. ...பாவம், நீங்கள் சொல்லுகிற நோயாளியை நினைத்தால் எனக்கே கவலையாய்த்தான் இருக்கிறது. எனக்கும் அவளுக்கு இருப்பதுபோலவே குழந்தைகள் இருக்கிறார்கள்."

அந்த டாக்டரம்மாளும் முருகையனும் வேலம்மாளின் கட்டிலருகில் அவளைப் பார்ப்பதற்கு வருவதற்கு முன்பே, முருகையனின் நெஞ்சை இருகூறாய்க் கிழிப்பது போல், "வேலம்மா!" என்ற முனியாண்டியின் குரல் கேட்டது.

டாக்டரம்மாள் முருகையனைத் திரும்பிப் பார்த்து விட்டுப் பாதியில் நின்று விட்டார். முருகையன் ஓடி வந்தான். வேலம்மாளின் மீது விழுந்து கதறிய முனியாண்டியை அவனால் விடுவித்து அகற்ற முடியவில்லை. குழந்தைகள் தாயைக் கூவி அழைத்தனர். தாய் கடவுளைக் கூவி அழைத்தபடி தன்னைக் கொன்றுவிட்ட பேராசைப் பேய்களில்லாத உலகத்துக்குச் சென்று விட்டாள்.

மக்கள் தொகையும் வறுமைத்தொல்லையும் நிறைந்த இந்த நாட்டிலிருந்து ஒருத்தி மறைந்து விட்டால் யாருக்கென்ன நஷ்டம்? ஏதோ ஒரு குடிசைக்குள்ளே வாழ்ந்த மிகச் சாதாரணமான ஒருத்தி போய் விட்டால் அது என்ன பெரிய விஷயம்? எத்தனையோ பேர் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், சாகிறார்கள்.—இதிலென்ன அதிசயம்?

வேலம்மாள் இயற்கையாகவே செத்துத்தான் போனாளா? அவளுடைய முடிவு அவளுக்கு ஏற்பட வேண்டிய முடிவுதானா? அவளுக்கு எமன் யார்?

முருகையன் அவளுடைய குழந்தைகளைத் தன் இரு கரங்களாலும் அணைத்துக் கொண்டான். ஒரு பாவமும் அறியாத அந்தச் செல்வங்களின் வேதனை அவன் உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தது.

எல்லாம் முடிந்து விட்டது. அவன் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பும்போது மாலை ஆறு மணி.

வீட்டு வாசலில் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான் பெட்டிக்கடை நடேசன். அவன் முகத்தைப் பார்ப்பதற்குப் பேயறைந்தது போல் இருந்தது.

"அண்ணா! உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன். நான் ஒரு பாவமும் அறியாதவன் அண்ணா! என்னை நீங்கதான் காப்பாத்தணும்!....சத்தியமாய் நான் ஒரு தப்பும் செய்யலேண்ணா! என்னை நீங்க நம்புங்கண்ணா!"

ஓர் அதிர்ச்சியிலிருந்து திரும்பிவந்த முருகையனுக்கு மற்றோர் அதிர்ச்சியைக் கொடுத்தான் பெட்டிக்கடை நடேசன். "வா, உள்ளே போய்ப் பேசுவோம்" என்று அவனை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்தான் முருகையன். (தொடரும்)



"டேய்! இந்தக் கடிதத்தைப் போஸ்டு செய்துவிட்டு வா!"

"நல்லாச் சொன்னீங்க! இந்த வெய்யிலில் எந்த நாயும் வெளியில் போகாது!"

"அப்ப ஜிம்மியை இங்கேயே விட்டுவிட்டு நீ மட்டும் போயிட்டு வா!"

சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்



நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும சில தயாரிப்புகள்தான் சிறந்த குணமும், பல வருடங்களாக நம்பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம் பெற்றிருக்கின்றன. இந்த நம்பிக்கையான தன்மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75 வருடங்களுக்கு மேலாக சிபார்சு செய்யப்பட்ட உலகமறிந்த தாயரிப்பும் ஆகும்.

அதிகாரம் பெற்ற தயாரிப்பாளர்கள் :
டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்) பிரைவேட் லிமிடெட்

இருவேறு இயற்கை

என். மகாலிங்கம்

இரவு பத்து மணிக்கு மேல் வந்து செல்லமுத்து வீட்டுக் கதவைத் தட்டினான். தாழ் விலக்கப்பட்ட ஊங்கில் பிளாச்சுக் கதவு தானாகவே ஒதுங்கிப் போய் நின்று கொண்டது. தரையில் இழுபட்டு இழுபட்டு அது பள்ளமாகப் பறித்திருந்த பின்ன வட்டத்துக்குப் பின்னால் காசியம்மாள் குழந்தையை இடது கையில் இடுக்கிக் கொண்டு வலது கையில் சிம்னி விளக்கை ஏந்தியபடி நின்று கொண்டிருந்தாள்.

“ஏங்கறேன். மாட்டைக் கறந்தியா?” என்றுதான் கேட்டான் செல்லமுத்து உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக. அவன் முண்டாசை அவிழ்த்து உதறியதில் காசியின் கையிலிருந்த சிம்னி விளக்கின் சுடர் திரி நுனியைப் பற்றிக் கொண்டு படுத்துப் படபடத்து விட்டு மீண்டும் எழுந்து நின்றது.

“அந்தா, குவளையிலே வச்சிருக்கேன்பாரு.” காசி விளக்கை மாடத்தில் வைத்து விட்டு, குழந்தையைக் கீழே கிடந்த ஓலைப் பாயில் கிடத்தினாள். பூமி ஸ்பரிசத்துக்குக் குழந்தை வீரிட்டது. ஊசி மாதிரி ஊடுருவிப் பாயும் மெல்லிய கீச்சுக் குரல். கையும் காலும் குச்சி குச்சியாக நீண்டு கிடந்தன.

செல்லமுத்து, வெளிச்சம் வரும் பக்கமாகப் பால் குவளையைச் சாய்த்துப் பார்த்தவன், “பாலு ரொம்பக் கொறைச்சலா இருக்குதே! மீதியைக் கொடுத்திட்டியா...?” என்று கேட்டான்.

“எங்கே கொடுக்கிறது? கறந்ததே அவ்வளவுதான்” என்றாள் காசி.

செல்லமுத்து திடுக்கிட்டவன்போல் திரும்பினான். “ஏய்! இங்கே மொவத்தைப் பார்த்துப் பேசு. மாட்டுக்காரரும் தரகர் வேணுக்கோனாரும் சொன்னத்தைக் கேக்காமே மூணு படி கறக்குதான்னு என் கையாலேயே கறந்து பார்த்து வாங்கிக் கொண்டாந்து கட்டி ரெண்டு நாளாவுலே! இன்னிக்குக் காலையிலே கறக்கக்குள்ளே நீயும் தானே கிட்ட இருந்து பார்த்துக்கிட்டு நின்னே? இப்ப மூணு ஆளாக்கைக் கறந்து வைச்சுட்டு, 'இம்மாந்தாங் கறந்ததுங்கறியே! என்ன, பயித்தியம் கியித்தியம் புடிச்சிருக்குதா உனக்கு?” என்றான்.

“நான் என்ன செய்யறதாம்? கன்னு வுடக்குள்ளே புள்ளே அழுதது. கொஞ்சம் எடுத்து வுட்டுட்டுப் போவமே, அதுக்குள்ளாறையுமா சொரப்பு வுட்டுடப் போவுதுன்னு சித்த உள்ளாற வந்துட்டுப் போவறதுக்குள்ளே கன்னு வாயிலே பாலும் நொரையும் வழிய வழிய நிக்குது. ஓடிப் போய் இழுத்துக் கட்டி விட்டு மீதி இருக்கிறதைக் கறந்தேன். இம்மாணுதும் தேறிச்சே!” என்றாள் காசி.

“ஏதுடா, மாடு வாங்கின கடன் நானூறு ரூபாயை அடைக்கப் பாலு விக்கிறது போதாதுன்னு ராப் பகலா கை வண்டி இழுத்துட்டு வர்றேனே ஒருத்தன், அவனுக்கு ஒபகாரமா இல்லாட்டியும் தொந்தரவு இல்லாமலாச்சியும் இருப்போம்கற துப்பு இருக்குதா உனக்கு?” செல்லமுத்து தொண்டை கிழிந்து விடும் போலக் கத்தினான்.

காசி தலையை நிமிர்த்திச் செல்லமுத்துவைப் பார்த்தாள். “இந்தா உனக்குத்தான் பேசத் தெரியும்னு பேசிக்கிட்டே போவாதே! அதுதான் புள்ளே அழுதிச்சிங்கறேனே! கத்திக் கத்தி அதைத் தொண்டை வறண்டு சாவ வுட்டுட்டு என்னைப் போயி மாட்டைக் கறக்கச் சொல்றியா...?” என்றாள் எரிச்சலோடு. காசியம்மாள் குரலை உயர்த்திய போது செல்லமுத்து கொஞ்சம் அடங்கி விட்டான்.

“புள்ளே அழுவக்குள்ளதான் மாடு கறக்கணுமான்னு தான் கேக்கறேன். தெரியாது, நீ புள்ளே வளக்கிற லட்சணம்? ஒன் மனசு மாதிரி தான் அதுவும் இருக்குது. எலும்பும் தோலுமா வத்திப் போயி. டாக்டரய்யாகிட்டே போயிப் புள்ளையைக் காட்டி மருந்து வாங்கிக்கிட்டு வான்னு பத்து நாளாச் சொல்லிக்கிட்டிருக்கேனே, செஞ்சியா...?”

“எங்கே ஒழியுது...? காலையிலே எந்திரிச்சா மாட்டுக் கொட்டில் கூட்டறத்துக்கும் பாலு கொடுத்துட்டு வர்றதுக்கும், வறட்டி தட்டறத்துக்கும் நேரம் சரியாய்ப் போயிடுது. எல்லாம் முடிஞ்சாலும் வவுத்துப் பாடுவேற இருக்கவே இருக்குது!” என்றாள் காசி.

செல்லமுத்து பதில் சொல்லவில்லை. மாட்டுக் கொட்டிலுக்குச் சென்று சாணத்தை வைக்கோல் கூளத்தோடு சேர்த்து வாரி முற்றத்தில் கிடந்த குவியலில் போட்டு விட்டு மாட்டை இடம் மாற்றிக் கட்டினான்.

பிறகு கொட்டிலுக்கு மேலிருந்த பரணிலிருந்து வைக்கோலைக் கொஞ்சம் உருவி எடுத்து மாட்டிடம் உதறிப் போட்டு விட்டுக் கன்றுக்குட்டியைப் பிடிக்கச் சென்றான். அது அவனுக்கு அகப்படாமல் துள்ளி முற்றத்துக்கு ஓடியது. 'பய மவனுது மூணு படிப் பாலைக் குடிச்சுட்டு நல்லாக் கொழுத்துக் கிடக்குது' என்று முணுமுணுத்துக் கொண்டான் செல்லமுத்து. வாஸ்தவத்திலேயே கன்றுக்குட்டி நன்றாகக் கொழுகொழுவென்று தான் இருந்தது. தம்பூரா பறங்கிக் காயின் வரும்பு மாதிரிக் கொழுத்த பின் பாகம். குருத்து வாழையிலையின் நுனிமாதிரி கருத்துக் காய்ந்த தொப்புள் கொடி நடு வயிற்றிலிருந்து ஆடிக் கொண்டிருந்தது. வெண்மையான அடி வயிற்றையும் நெற்றிச் சுட்டியையும் தவிர கன்றின் உடல் முழுதும் அப்பழுக்கில்லாத சிவப்பு நிறம். செல்லமுத்துவுக்குக் கன்றுக்குட்டியைப் பிடித்துக் கட்டுவது பிரம்மப் பிரயத்தனமாகி விட்டது. இரவு அவன் படுக்கும்போது மணி பதினொன்றுக்கு மேலிருக்கும்.

விடியற்காலை நான்கு மணி கூடவே வந்து விட்டது. நேற்றைய இரவுச் சம்பவங்களெல்லாம் செல்லமுத்துவின் மனத்தில் விழித்துக் கொள்ளவே இல்லை. எல்லாமே காலப் போக்கில் பழகி விட்டவை. மாட்டைத் தன் கைப்படவே கறந்து வைத்து விட்டு வாடகைக்குக் கைவண்டி எடுத்து இழுக்க வெளியே போகுமுன்பு காசியிடம் சொன்னான்: “இன்

னிக்காச்சியும் புள்ளையை எடுத்துக்கிட்டுப் போயி டாக்டரையாவைப் பார்த்துட்டு வா. ஏதாவது சாக்குச் சொல்லிக்கிட்டாப் போச்சுன்னு சும்மா இருந்துடாதே!'' காசி தலையை ஆட்டினாள்.

ஃ ஃ ஃ

நேரத்தை மிச்சம் பிடித்து, சொன்னபடி செய்ய இன்றுதான் காசியால் முடிந்தது. செல்லமுத்து சாயந்திரம் வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக இதைப் பற்றித்தான் முதலில் கேட்டான்.

''இல்லாத மருந்தெல்லாம் சொன்னா நாம எங்கே போறது...?'' என்றாள் காசி.

''இல்லாத மருந்துன்னு ஏன் எளுதிக் கொடுக்காரு? கிடைக்கிறது கஷ்டம்னு எங்கியாவது தேடிப்புடிச்சி என்ன விலையானாலும் வாங்கியாற வேண்டியது தான்'' என்றான் செல்லமுத்து.

''புள்ளைக்குக் கணையாம். பன்னிரண்டு பொட்டலம் மருந்து கொடுத்துக் காலையிலே ஒண்ணு அந்தியிலே ஒண்ணுன்னு தாய்ப்பால் கொளைச்சு ஆறு நாளைக்குக் கொடுக்கச் சொன்னாரு. தாய்ப் பாலைத் தவிர வேறே எந்த ஆகாரமும் கொடுக்க வேணுமாம். அப்பத்தான் புள்ளை ஒடம்பு தேறும்னாரு. அது இல்லாததினாலேதான் இந்த மாதிரி ஆயிடிச்சாம்.'' காசி பேசும் போது மார்போடு மார்பாக ஒட்டிக் கிடந்த புடவையை இழுத்துத் தோளைப் போர்த்திக் கொண்டாள். செல்லமுத்துவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. டாக்டர் சொன்னது உண்மையிலேயே இல்லாத மருந்துதான் இல்லாத உணவுதான். காசுக்கு வாங்க முடியாத பொருள்!

''பசும் பாலிலே கொஞ்சம் தண்ணி ஊத்திக் கொடு. மருந்தையும் பசும் பாலிலேயே கொளைச்சுக் கொடு. என்ன ஆவுதோ ஆவட்டும்!'' என்றான் அவன்.

அவன் சொல்லா விட்டாலும் அதைத்தான் செய்ய விருந்தாள் காசி. செய்ய வேண்டியதைச் செய்ய முடியாத போது செய்ய முடிந்ததைத் தானே செய்ய வேண்டும்.

செல்லமுத்து மாட்டைக் கறப்பதற்காகக் கன்றுக் குட்டியை அவிழ்த்து விட்டான். கொழுத்த உடம்போடு வாலைத் தூக்கி ஆட்டியபடி முட்டி முட்டிப் பாலைக் குடிக்கும் அதைப் பார்க்கும் போது வயிறு சப்பி வற்றி மெலிந்து போன குழந்தையின் ஞாபகம்தான் வந்தது அவனுக்கு. கன்றுக்குட்டியை இழுத்துக் கட்டிவிட்டு மாட்டுக்கருகில் அமர்ந்து மூன்று தகரக் குவளைகளையும் நிரப்பிக் கொண்டு எழுந்த செல்லமுத்துவிடம் சற்று முன்பு எழுந்த கவலைகளெல்லாம் விடை பெற்றுக்கொண்டு போயிருந்தன. வெள்ளை வெளேரென்று குவளைகளில் குவிந்திருந்த பால் நுரை சரசரத்த சத்தத்தோடு அடங்கிக் கொண்டிருந்தது. மனதோ பொங்கிக் கொண்டு வந்தது. நானூறுரூபாய் முதல் வீண் போகவில்லை. பிழைத்துக் கிடந்தால் மூன்றே மாதங்களில் கடனை அடைத்து விடலாம். இந்தத் தடவைதான் காளைக் கன்றாகப் போய் விட்டது. அடுத்த ஈற்றுவது கிடாரியாக இருந்தால் எடுத்த எடுப்பில் கணையாக இருநூறு ரூபாய் கிடைக்கும்.

குழந்தைக்காக அரை ஆழாக்குப் பாலை எடுத்து வைத்து விட்டு மீதியை வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுத்து விட்டு வந்தான் செல்லமுத்து.

ஃ ஃ ஃ

'எப்படி இருக்கிறது' என்று நினைத்துப் பார்க்கக் கூட நேரமில்லாதபடி செல்லமுத்துவுக்கு வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. அவனுடைய ஒரே குறிக்கோள் எத்தனை சீக்கிரமாக மாட்டைத் தன் உடைமையாக்கிக்கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்து கொள்ள வேண்டிய ஒன்றுதான். ஒரு மாதமாகியும் குழந்தை உடம்பு தேறவில்லையே என்ற கவலைப்படும் வேலையைக் கூட ஏகதேசமாகக் காசியிடமே ஒப்படைத்து விட்டுத் தினமும் இரண்டு வேளை மாடு கறப்பதற்கும் பகல் நேரங்களில் கைவண்டி இழுத்து விட்டு வருவதற்கும் மட்டும் தன் நேரத்தைச் செலவழித்து வந்தான் செல்லமுத்து.

அன்று மாலை செல்லமுத்து வீடு திரும்பும் போது காசி பூவரச இலையில் டாக்டர் கொடுத்த மருந்தைக் காலையில் எடுத்து வைத்திருந்த பாலிலிருந்து சில துளிகளை விட்டு ஒற்றை விரலால் குழைத்துக் கொண்டிருந்தாள். குழந்தை விழித்த நாராகப் பக்கத்தில் கிடந்தது. உடல் நலிந்திருந்தாலும் ஐந்தாறு மாதத்துக்குரிய பரிமாண வளர்ச்சி மட்டும்



குழந்தையைத் தாயின் முகத்தை ஆவலோடு பார்க்க வைத்திருந்தது. குழந்தை அழ முயன்றதோ, சிரிக்க முயன்றதோ தெரியவில்லை. ஒருமுறை காற்றை ஊதி எடுத்து விட்டதால் தொளதொளத்துப் போன பலூன் மாதிரி ஒட்டிய முகத்துச் சதைமட்டும் பிரயாசையோடு விரிந்து சுருங்கிக் கொண்டிருந்தது. காசியும் குழந்தைக்குத் தாய் நான்தான் என்று சொல்லிக் கொடுப்பது போல் செல்லமுத்துவுக்குத் தோன்றினாள். முற்றத்துச் சுவரிலே ஐந்து விரல்களோடு உள்ளங்கையின் அழுந்திய முத்திரை தாங்கிப் பதிந்திருக்கும் வறட்டிகள் மாதிரி காசியின் உடம்பு முழுதும் எலும்புகள் புடைத்துக் கொண்டிருந்தன. பலாச் சக்கை மாதிரித் தொகுப்புத் தொகுப்பாகத் தலைமயிர். குழந்தையைப் பெற்றுவிட்ட தோஷத்துக்காக மனசில் அன்பையும் கவலையையும் தவிர குழந்தைக்குத் தேவையான வேறு எதை அந்த உடம்பு பிரவகிக்கச் செய்ய முடியும்?

செல்லமுத்து அவிழ்த்து விடப்பட்ட கன்றுக்குட்டி ஊட்டிக் கொண்டிருக்கும் போது காசியையும் குழந்தையையும் பற்றி நினைத்துக் கொண்டான். அவர்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்க அவனால் கொஞ்ச நேரத்துக்கு மேல் முடியவில்லை. பூதம் மாதிரி நானூறு ரூபாய்க் கடன் அவன் நினைவைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு விட்டது. காலைத் தொட்டுக் கொண்டு வெம்மையான நீர் ஓடிய போதுதான் செல்லமுத்துவுக்கு நினைவு வந்தது.

''அட ராக்ஷஸப் பய மவனே!'' என்று பதறிப் போய்க் கடைவாயிலிருந்து பால்வடிய ஊட்டிக் கொண்டிருந்த கன்றுக்குட்டியைக் கயிற்றைப் பற்றி இழுத்தான். சிந்தனை சுவாரசியத்தில் அவனைப் பொறுத்த வரையில் காரியம் மிஞ்சி விட்டது. கன்றுக்குட்டியை இழுக்க முடியவில்லை. அது திமிறிக் கொண்டு அவனையும் இழுத்துக் கொண்டு மாட்டிடமே ஓடியது. தன் முயற்சியில் வெற்றி பெறச் செல்லமுத்து தரையில் காலை உதைத்து கொண்டு பின்புறமாகச் சாய்ந்து முழு பலத்தையும் பிரயோகித்து இழுக்க வேண்டியிருந்தது. இன்றைக்கு மூன்றாவது குவளை காலியாகவே நின்று விட்டது. 'கொஞ்சம் அசந்து நிக்கறதுக்குள்ள பகாசுரன் மாதிரி ஒரு படிப் பாலைக் குடிச்சிடிச்சே!' என்று நினைத்துக் கொண்டு கன்றுக்குட்டியின் முகத்தில் காலியான குவளையால் இடித்தான் செல்லமுத்து. அவனுக்கு மனசு தாளவே இல்லை. சிறிது அஜாக்கிரதையினால் ஒரு படி பால் — ஒன்றரை ரூபாய் — போய் விட்டது. உடலில் பள்ளம் தெரியாமல் நின்று கொண்டிருந்த கன்றுக் குட்டியைப் பார்க்கும் போது அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாகத்தான் வந்தது.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு இரண்டு மூன்று தடவைகள் இதே மாதிரி நடந்து விட்டது. அத்தனை தடவைகளும் கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொள்ளாத தோஷமாகத்தான் விழித்துக் கொண்டிருந்தான் செல்லமுத்து. இருந்தும் அவன் விரும்பாதது அவன் கண்ணெதிரேயே நடந்து கொண்டிருந்தது. கன்றின் உடல் வலிமை அதற்கு அசுரவேகத்தில் தாயின் மடியிலிருந்து பாலை இரிக்கும் சக்தியைக் கொடுத்திருந்தது. அதற்காகக் கன்றுக்குட்டியை ஊட்ட விடாமலே இருந்து விட முடியுமா? மாடு சுரப்பு விடுவதற்காவது கன்றைச் சிறிது நேரம் விட வேண்டியதன் அவசியம் செல்லமுத்துவுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனால் எவ்வளவு குறைந்த பட்ச நேரமும் கணிசமான அளவு பாலைக் குடிக்கக் கன்றுக்குப் போதுமானதாக இருந்தது. தாயின் இயல்பு வேறு பிள்ளைக்கு அநுசரணையாக இருந்தது. மாட்டுக்குச் சுரப்புச் சுத்தம்: கன்று வாயை வைப்பதற்கு முன்னால் விறுவிறென்று பாலை இறக்கி விடும். குறைந்தது இரண்டாழாக்குப் பாலாவது கன்றுக்குட்டி குடிக்காத நாளே கிடையாது. ஒரு மாதத்துக்குக் கன்றுக் குட்டி குடிக்கும் பால் மட்டும் எவ்வளவு பெறும் என்பதை மனத்துக்குள் கணக்குப் போட்டுப் பார்த்தபோது அவனுக்குத் திகிலாக இருந்தது: கிட்டத்தட்ட இருபது ரூபாய்! கிடாரிக் கன்றாக இருந்தாலும்





''ஆபீஸ் வேலை மும்முரத்திலே பல் வைத்தியரிடத்தில் போக மறந்து விடாதீங்க!''

''அதெல்லாம் மறக்க மாட்டேன். கர்ச்சீப்பிலே முடிச்சுப் போட்டு வைத்துக் கொண்டுதான் போகிறேன்!''

எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்துக் குடித்து விட்டுப் போனால் போகட்டும் என்று விட்டு விடலாம். காளைக் கன்றுக்குப் பட்டணத்தில் ஏது மவுசு?

செல்லமுத்துவுக்குக் குழந்தையும் கன்றும் இரண்டு பெரிய பிரச்னைகளாகி விட்டன. கணிசமான அளவு வருமானத்தை அபகரித்துக் கொள்ளுவதன் மூலம் அவன் கடனை அடைக்கும் வேகத்தைக் குறைக்கும் கன்றுக் குட்டி ஒரு புறம்; மருந்தாலேயே வயிற்றை நிரப்பிக்கொள்ளும் குழந்தை இன்னொருபுறம்.

இரண்டு மூன்று நாட்கள் யோசனை செய்ததில் தன் பிரச்னைக்குத் தீர்வு காணச் செல்லமுத்துவுக்கு ஒரு வழி தோன்றியது. 'கன்றுக் குட்டிதான் வளர்ந்திடிச்சே! இனிமே அதுக்குப் பாலு என்னத்துக்கு? வைக்கோல் பத்தாதா?' என்று நினைத்தவன் அதன்படி ஒரு நாள் கன்றை ஊட்ட விடாமலேயே பாலைக் கறக்க முயன்றான். மாடு மூச்சைத் தம் பிடித்து அடி வயிற்றை எக்கிக் கொண்டது. பாலே இறக்கவே இல்லே. கன்றின் ஸ்பரிசம் மாட்டுக்குத் தேவை என்பது நிதர்சனமாகத் தெரிந்தபோது செல்லமுத்துவின் மனம் வேறு வழியைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தது.

குழந்தையைப் பற்றிய பிரச்னைக்கு டாக்டர் மீது பழியைப் போடுவதைத் தவிர வேறு வழியே தோன்றவில்லை செல்லமுத்துவுக்கு. நோயை நிவர்த்திக்க முடியாத குறை தன் மீது விழக் கூடாது என்பதற்காகக் கிடைக்காத பொருளையே – தாய்ப்பாலையே—டாக்டர் சிபாரிசு செய்கிறாரோ என்று ஒவ்வொரு சமயம் நினைத்தான் அவன்.

''வேறே மருந்தே கிடையாதா டாக்டரய்யா கிட்டே? இதையே ரெண்டு மாசமாக் கொடுத்துக்கிட்டிருக்காரே'' என்று ஒருநாள் காசியிடம் கேட்டான் அவன்.

''அவருக்குத் தெரியாதாங் காட்டியும் எந்த மருந்தைக் கொடுக்கணும்னு? பிரமாதமாச் சொல்ல வந்துட்டியே!'' என்றான் காசி.

தாய்ப்பாலின் சக்தியும் ஊட்டமும் பிரத்யட்ச ரூபம் எடுத்து வந்தது போல் கன்றுக் குட்டி கொழு கொழு வென்று எதிரே நிற்பதைப் பார்க்கும் போது செல்லமுத்துவினால் கூட டாக்டர் கூறியதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

கடிகாரத்தைப் பார்த்து வேலை செய்வது போல் காலையும் மாலையும் பால் கறக்கும் நேரம் சிறிது கடந்து விட்டாலும் பசி தாள மாட்டாமல் கன்றுக்குட்டி கத்துவதும் மடி விறுவிறுப்புத் தாங்க மாட்டாமல் மாடு பதில் குரல் கொடுப்பதும் குழந்தைக்கும் காசிக்கும் ஏற்படாத அனுபவமென்பது செல்லமுத்துவுக்குத் தெரியும்.

ஃ ஃ ஃ

இரண்டு மூன்று தினங்கள் கழிந்து விட்டன. அன்றைக்குப் பொழுதோடேயே வீடு திரும்பி விட்டான் செல்லமுத்து. பகல் முழுவதும் வண்டி இழுத்து விட்டு வந்த உடல் சோர்வு. ஒன்றுக்குப் பாதியாகக் கூலி கொடுத்து அவனை வாயாலடித்து விரட்டப் பார்த்தான் ஒரு புண்ணியவான். அதை ஏற்றுக் கொள்ள விருப்பமில்லாதவன் அந்தப் புண்ணியவானை மாடி வீடு கட்டிக் கொள்ளச் சொல்லிவிட்டுக் காசை முகத்தில் எறியாத தோஷமாகத் தரையில் விட்டெறிந்து விட்டு வந்து விட்டான். அந்த நிகழ்ச்சியினால் ஏற்பட்ட மனச் சோர்வுடன் வீட்டில் குழந்தைக்கு உடம்பு மோசமாகி யிருந்ததும் சேர்ந்து கொண்டது.

அவன் வீட்டுக்கு வந்ததும் வராததுமாக, ''கொளந்தைக்கு மருந்து கேட்டா, 'நீ புஷ்டியா இருக்க ...ல்லா ஆகாரம் சாப்பிடணும். அப்பத்தான் கொளந்தைக்குப் பாலு ஊறும்'னு எனக்கு வைத்தியம் சொல்றாரு டாக்டரய்யா'' என்றான் காசி. பாலோடு பாசமும் வற்றி விட்டதுபோல் விரக்தியால் தோய்ந்திருந்தது அவன் குரல்.

காசி சொன்னதைக் கேட்டபோது அந்த நிலையிலும் இலேசாகச் சிரிப்பு வந்தது செல்லமுத்துவுக்கு. பதில் சொல்ல மனமில்லாமல் குழந்தைக்குப் பக்கத்திலேயே துண்டை விரித்துப் படுத்து விட்டான். குழந்தையின் இழுப்புச் சத்தத்தின் இடைஞ்சலையும் மீறிக் கொண்டு அவனைத் தூக்கம் அழுத்தியது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் காசி அவனை அவசரம் அவசரமாக உலுக்கி எழுப்பினான். ''கன்னுக்குட்டி ஊட்டிக்கிட்டு நிக்குது பாரு'' என்றவுடன்தான் அவன் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான். கட்டப்பட்டிருந்த இடத்திலிருந்தபடியே, திரும்பி நின்றுகொண்டிருந்த மாட்டின் பின் கால்களுக்கு இடையே தலையை விட்டு ஊட்டிக் கொண்டிருந்தது கன்றுக்குட்டி. ஓடிப்போய்க் கன்றுக்குட்டியை முகத்திலடித்து விலக்கி விட்டு மாட்டைக் கறந்த போது ஒன்றுக்குப் பாதிதான் தேறி



சட்டை, வேட்டி, சேலை, ரவிக்கை, துண்டு, சிறுவரின் உடைகள் ... நம் வீட்டுத் துணிகள் எல்லாவற்றுக்கும் ஏற்ற சலவை ... வீட்டிலேயே ஸர்ப் சலவை ... வெகு இலகுவாக வெள்ளைவெளேரென்று துப்புரவாக்கும் சலவை! எல்லாம் ஸர்ப் செயல், அதன் அளவுகடந்த ஆற்றல்! இன்றே செய்வீர் ஸர்ப் சலவை ... இல்லத்திற்கான இணையற்ற சலவை!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 24-X52 TM

விருந்தது. எவ்வளவு நேரமாக ஊட்டிக் கொண்டிருந்ததோ? 'சே, ஒரு நாப் பாத்தாப் பலே இதே தொந்தரவால்லே போய் விட்டது. இதுக்கு ஒரு வழி செய்துட்டுத் தான் மறு வேலே.' செல்லமுத்துவுக்கு ஆத்திரமும் சலிப்புமாக வந்தது. இரவு முழுதும் அவன் மனம் யோசித்துக் கொண்டிருந்தது. சுற்றிச் சுற்றி ஒரு முடிவுக்கு வந்த அமைதியில் அவன் தூங்கி எழுந்த போது பொழுது விடிந்திருந்தது.

மாட்டைக் கறப்பதற்கு முன்னால் கன்றுக்குட்டியை ஓட்டிக் கொண்டு வெளியே கிளம்பிய செல்லமுத்து கதவைத் திறந்து கொண்டிருந்த போது காசி பின்னாலிருந்து, ''புள்ளேயைப் பாத்தியா.? கண்ணெல்லாம் போயி ஒரு பக்கமாகச் சொருகிக்கிட்டிருக்குது'' என்றாள்.

''என்னே இன்னு செய்யச் சொல்லறே? நம்மாலே முடிஞ்சதைச் செய்துக்கிட்டுத்தான் வர்றோம்'' என்ற செல்லமுத்து கூடவே, ''அதெல்லாம் ஒண்ணும்ஆவாது. பத்துமணிக் கெல்லாம் வந்துடறேன். டாக்டரய்யாகிட்ட போயிட்டு வரலாம்'' என்று கூறிவிட்டுக் கன்றுக்குட்டியுடன் வெளியே சென்றான்.

சொன்னபடி பத்து மணி சுமாருக்கு வீடு திரும்பிய செல்லமுத்து தோளில் இருந்த கன்றுக்குட்டி இனிமேல் அதற்குப் பாலே தேவையில்லாதபடி மாற்றியமைக்கப் பட்டிருந்தது. செல்லமுத்து முன்பு நினைத்தது போல் இனிமேல் அதற்கு வைக்கோல் மட்டும் போதும். உடலுக்குள் இருந்த எலும்பையும் சதையையும் நீக்கிச் சிம்புகளும் வைக்கோலும் இடம் பெயர்ந்திருந்த ஒரே மாற்றந்தான் இப்போது கன்றுக் குட்டியிடம். மற்றப்படி முன்பிருந்ததுபோல் அதே சிவப்பு உடம்பு. வெள்ளே அடிவயிறு. நெற்றிச் சுட்டி எல்லாமே இருந்தன. கண்கள் இருந்த இடத்தில் இரண்டொரு வைக்கோல் துரும்புகளும் வாயில் எப்போதும் தின்னும் பாவனையில் கற்றைவைக்கோலும்நீட்டிக்கொண்டிருந்தன.

செல்லமுத்து வீட்டுக்குள் நுழைந்தபோது கூடத்தில் ஐந்தாறு பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவனுக்குச் சந்தேகம் தட்டியது.

''புள்ளே போயிடுச்சு....'' என்றாள் காசி கணவனைக் கண்டதும்.

''என்னது..?'' தோல் கன்றுக்குட்டியைச் சுவரிலிருந்த ஆணியில் மாட்டிக் கொண்டிருந்தவன் திடுக்கிட்டவனாகத் திரும்பினான்.

''எட்டு மணி இருக்கும். 'சட்'டுன்னு ஒரு இழுப்பு இழுத்திச்சு. அப்படியே அடங்கிப் போயிடுச்சு.'' நான் வளரும்போது தாயிடம் பாசத்தை விடக் கவலையை அதிகமாக வளர்த்துக் கொண்டு வந்த குழந்தை வளரும்போதே நாளடைவில் சிறுகச் சிறுகச் செத்துக் கொண்டிருந்ததால் அதுபோனது காசியிடம் பெருத்த சோகத்தை ஏற்படுத்தவில்லே. அவள் பேசும் போது குரல் மட்டும் சிறிது கம்மியிருந்தது.

செல்லமுத்து திரும்பிப் பார்த்தான். குழந்தை தலையிலிருந்து கால்வரை பழுப்பு நிறத் துணி ஒன்றினால் போர்த்தப்பட்டுப் பாயோடு பாயாகக் கிடந்தது. காசியும் ஒற்றைக் கையால் தலையைத் தாங்கிக் கொண்டு இடிந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

''அம்மா...!'' என்று மாடு கொட்டிலிருந்து அலறியது. ஆறு மணிக்கே பாலைக் கறந்திருக்க வேண்டியது. இப்போது மணி பத்தரை. காலம் கடந்து விட்ட விறுவிறுப்பை அதனால் தாங்க முடியவில்லே. கன்றுக்குட்டி வழக்கம்போல் பதில் குரல் கொடுக்கவில்லே.

தாய்க்குப் பால் இல்லாததால் குழந்தை கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருந்ததும் தாய்க்குப் பால் இருந்ததால் கன்றுக்குட்டி கொழு கொழுவென்று இருந்ததும் செல்லமுத்துவுக்குத் தெரியும். இப்போது குழந்தை செத்துப் போனதுக்குப் பொருத்தமான காரணம் இருக்கிறது. ஆனால் தாய்க்குப் பால் இருந்ததால் திடமாக இருந்த கன்றுக் குட்டி அதே பால் இருந்ததாலேயே ஏன் செத்துப் போக வேண்டும்? இரண்டு ஒரே மாதிரியான நிகழ்ச்சிகளுக்கு இரண்டு நேர் எதிரிடையான காரணங்கள் எப்படி இருக்க முடியும்? இருக்கிறதே!

இந்த விசித்திரத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கச் செல்லமுத்துவுக்கு நேரமில்லே. நானூறு ரூபாய்க் கடனைச் சீக்கிரம் அடைக்க வேண்டிய முக்கியமான வேலே அவனுக்கு இருக்கிறது. மேற்கொண்டு நடக்க வேண்டியதைக் கவனித்து விட்டு எத்தனே மணியானாலும் மாட்டைக் கறக்க வேண்டும். இன்றையிலிருந்து முழுப் பாலும் அவனுக்குக் கிடைத்து விடும்!



''ஏன் இவ்வளவு நாழி?'' என்றாள் வாத்தியார் மனைவி.

''என்ன செய்யறது அந்தப் பயல் இப்பதான் விடை கொடுத்தான்'' என்றார் வாத்தியார்.

''நன்றாக இருக்கு! உங்க வயசு என்ன, அந்த வாண்டுப் பயல் வயசு என்ன, அவன் விடை கொடுப்பதாவது? நீங்க வாங்கிக்கொள்வதாவது?'' என்று கேட்டாள் அவர் மனைவி.

அதற்கு வாத்தியார், ''அடி அசடே! நான் அவனுக்குப் போடக் கொடுத்த கணக்கின் விடையை அல்லவா சொன்னேன்!'' என்றார்.



நல்லமுத்துப் பிள்ளையிடமிருந்து வந்துள்ள இரண்டாவது கடிதத்தைப் படித்ததும் நான் குழம்பிப் போனேன். முதல் கடிதம் வந்து ஒரு வாரம்தான் ஆகிறது; இதற்குள் இப்படி மாறுதலா கவர் ஸ்டாம்பில் பதித்துள்ள தபால் முத்திரையை நாலாம் முறையாகப் பார்த்தேன். தெளிவாகவே தெரிந்தது: திருவண்ணாமலை, 2-2-62.

முதல் கடிதத்தை எடுத்துப் படித்தேன். அதே ஆசாமி, அதே கையெழுத்து.

உயர்திரு வக்கீல் ஐயா அவர்களுக்கு,

வணக்கம். நான் இவ்வளவு காலமாக ஏங்கிக் கொண்டிருந்த அந்த 'அதிர்ஷ்டம்' இப்போது எனக்குக் கிட்டி விட்டது. எந்தக் குறையை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் என் சாபக்கேடு என்னை வஞ்சித்து வந்ததோ, அது இப்போது விலகி விட்டது. என் மனம் அளப்பரிய ஆனந்தத்தால் நிறைந்திருக்கிறது. இந்த மன நிறைவைக் கொடுத்த அருளாளன் யார் தெரியுமா? நான் மகனைப் போல் நேசித்து வளர்த்து வந்த மோகன்தான்.

இருபதினாயிரம் ரூபாய் — ரொக்கமும் பொருள்களுமாக — எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

அவன் நலன் நிறைந்து நன்கு வாழ்க!

இப்படிக்கு,
கோ. என். முத்து

மோகனா இப்படிச் செய்து விட்டான்? அவனைவிட மோசமான வாலிபர்கள் அவரிடமே சூழ்ந்திருக்கிறபோது, ஓர் அப்பாவிக்கு எப்படித்தான் இத்தகைய துணிவு வந்ததோ? நான் உடனே கிளம்பிப் போகவேண்டுமென்று துடித்தேன். நான் போனால் அவர் வருத்தப்படத்தான் செய்வார். "திருடனைப் பிடிக்க வந்தீர்களோ? போங்க, ஐயா உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு" என்று முகத்தில் அறைகிற மாதிரி சொல்லி விடுவார். போன வருஷம், குருசாமி என்கிற மேஸ்திரி சில ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களைக் களவாடிக் கொண்டுபோன போது, நான் ஏதோ, பெரிய உதவி செய்து விடுகிற மாதிரி சென்றதற்கு, நல்லமுத்துப் பிள்ளை இப்படியேதான் கடிந்து கொண்டார். இம்முறை நிச்சயம் கழுத்தைப் பிடித்தே தள்ளி விடுவார்.

உலகத்திலே, "என்னை ஏமாற்றினானே; வஞ்சித்து விட்டானே" என்று நெஞ்சம் குமுறும் மனிதர்களைத் தானே எங்கும் பார்க்க முடிகிறது. "என்னை ஒருவனாவது வஞ்சிக்க மாட்டேன் என்கிறானே; எனக்குத் துரோகம் செய்ய ஒரு மனிதனாவது முன் வரமாட்டேன் என்கிறானே. அந்தத் துன்பத்தை அநுபவிக்க வேண்டுமென்று ஏங்கித் தவிக்கிறேன், ஓர் ஆசாமி கூடக் கிடைக்கவில்லையே, இது என்ன என் சாபக்கேடா?" என்று உண்மையாகவே ஏங்கும் மனிதரை எங்கேயாவது பார்க்க முடியுமா?

நல்லமுத்துப் பிள்ளையைப் பார்த்தவர்களால் அது முடியும்.

பிறர் அவரை நல்லமுத்து என்று அழைத்தாலும், அவர் தம்மை வெறும் முத்து என்றே குறித்துக் கொள்வார். மகான்களைத்தான் நன்மை தீமைகளைச் சமமாகப் பாவிப்பவர்கள் என்பார்கள். நல்லமுத்து மகானில்லை; ஆனால் அவரிடம் அந்தச் சம நோக்கு உண்டு. சமீபகாலமாகத்தான் எனக்கு அவரிடம் தொடர்பு. அப்போது அவர் தம்மை ஒளிவு மறைவு இல்லாமல் அறிமுகப்படுத்திக் கொள்ளும் பெரிய மனிதராகத்தான் இருந்தார். இப்போதும் அதே தன்மைதான்.

செங்கற்பட்டில் தொழிலுக்கென்று வக்கீலாக இருந்தாலும், வருமான வசதிக்கு முன்னோர் தேடி வைத்த நிலபுலன்களைப் பராமரித்து வருவதுதான் என் முக்கிய அலுவல். ஒரு நாள் நடுப்பகல், நல்லமுத்துப் பிள்ளை என் வீட்டுக்கு வந்தார். வாசலில், தம் காரில் அமர்ந்தபடியே, "வக்கீல் ஐயா இருக்காங்களா?" என்று அவர் விசாரித்த போது, எனக்கு ஏதும் புரியவில்லை. வெளியே வந்த என்னைக் கண்டதும், "வக்கீல் ஐயா, என்னைத் தெரியுதுங்களா?" என்றார். நான் அசட்டுச் சிரிப்புடன் விழித்தேன்.

"தெரிஞ்சுக்கறது கஷ்டம்தான். உள்ளே வாங்க, பேசுவோம்" என்று சொல்லி, என் அறைக்குள் வந்து அமர்ந்தார். நல்ல கேஸ் போலிருக்கிறது என்று அகம் மகிழ்ந்தேன்.

''சுமார் ஏழெட்டு வருஷங்களுக்கு முந்தி, கேடி ரத்தினத்தின் சார்பாக நீங்க வழக்காடினீர்களே, நினைவிருக்கிறதா?'' என்றார்.

''ஆமாம், ஆமாம், அவன் ஒரு சேட்டைப் பயமுறுத்திப் பத்தாயிரம் ரூபாய் கொள்ளையடித்தான். அவன் குற்றவாளி என்று எனக்குத் தெரிந்திருந்தும், அவனை விடுவிக்க வாதாடினேன்.''

''ஏன் அப்படி?''

''இரண்டு காரணம். அந்தச் சேட் ஏழை எளியவர்களிடமெல்லாம் ரூபாய்க்கு இரண்டணு வட்டி வாங்கி, தொடர் வட்டியும் சேர்த்து, பல சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டவன். அவன் பகல் கொள்ளை அடிப்பவன்; ஆனல் வெளிக்குப் பெரிய மனிதனாக உலவுகிறவன். கேடி ரத்தினம் பேரெடுத்த தீயவனானாலும் அதற்கு உரிய தண்டனையைப் பெற அவன் என்றுமே அஞ்சியதில்லை.''

''வக்கீல் ஐயா! இதே கொள்கையுடன் தான் அன்று கேடிக்காக நீங்கள் வழக்காடினீர்களா?''

''ஆமாம்.''

என் இரு கைகளையும் ஆதரவுடன் பற்றிக் கொண்டு, நல்லமுத்து கண்டம் இடற, ''நான் பாவி. என்னல் வஞ்சிக்கப்பட்டவர்களில் ஒருவராவது பொல்லாதவரோ தீயவரோ இருப்பாரா என்று தேடுகிறேன். ஒருவரைக் கூட நான் பெற முடியாத பாவியாகி விட்டேன். சாபம் கூட எனக்குப் பலிக்க மாட்டேன் என்கிறதே'' என்ருர்.

''எனக்கு ஒன்றும் புரியவில்லையே?'' என்று கூறினேன்.—

''நீங்கள் கேடி ரத்தினத்திடம் பத்தாயிரம் ரூபாய் வக்கீல் பீஸ் கேட்டீர்களில்லையா?''

''ஆமாம். அந்தக் கொள்ளைப் பணத்தை வாங்கி, ஒரு நல்ல தொழிலாகத் தொடங்கி, அதை அவனிடமே ஒப்படைத்து விடலாம் என்கிற நல்லெண்ணத்தில்தான் அந்தத் தொகையைக் கேட்டேன். ஆனல், விதி வேறு விதமாக வஞ்சித்து விட்டது.''

''இந்த முத்து என்கிற விதிதான் அப்படிச் செய்தது. பீஸ் பணத்தை ரொக்கமாக உங்கள் கையில் கொடுத்து விட்டு, நீங்கள் ஊர் திரும்பும் போது நடு வழியில் நாலு ரௌடிகளை அனுப்பிக் கொள்ளை அடிக்கச் சொன்ன புண்ணியவான் நான்தான். நீங்கள் என்னை மன்னிக்க வேண்டாம். என் துன்பம் தீர ஓர் உதவி செய்வீர்களா?''

ஒருகணம் பேச்சற்றுப் போனேன். நான் விதியை நம்புபவன். வாழ்வின் அலங்கோலங்களெல்லாம் 'அவரவர் விதி வழி அடைய நின்றனரே!' என்ற அடிப்படையில் அமைபவை தான். எல்லா மனிதர்களுமே தம் நிலையற்ற இயல்பும் செயலும் உள்ளவர்தான். கொடியவரோ நல்லவரோ தம் நிலைமையை மறைக்காமல், போலி வேஷம் காட்டாமல் தம்மை உணர்ந்து வாழ வேண்டும். நல்லவர் மேலும் திடமாக நல்வழியிலும், பொல்லாதவர் நல்வழியில் திரும்பும் முயற்சியிலும் ஈடுபட வேண்டும் என்பது என் கொள்கை. போலிப் பெரிய மனிதர்களைவிட, பலராலும் அறியப்பட்ட தீயவரிடம் எனக்கு அநுதாபம் உண்டு; அன்பும் உண்டு.

நல்லமுத்துப் பிள்ளையிடம் எனக்கு அன்பு பிறந்தது. ''கட்டாயம் செய்கிறேன். சொல்லுங்கள்'' என்றேன்.





''பிரும்மாவுக்கு ஏன் நான்கு தலை இருக்கு தெரியுமாடா?''

''தெரியாதே!''

''சர்காரமா பார்ப்பதற்குத்தான்!''

''இன்று முதல் நீங்கள் எனக்கு உற்ற நண்பராக இருக்க வேண்டும். இருவரும் மனம் திறந்து பழக வேண்டும். இதோ, நான் கொண்டு வந்திருக்கும் இருபதினாயிரம் ரூபாயை நீங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும். இதை உங்கள் விருப்பப்படி செலவு செய்யலாம்'' என்று கூறி, பணப்பையை என் எதிரே வைத்தார்.

நான் ஆதரிச வாதம் பேசுபவனல்ல. உடனே அத் தொகையைப் பெற்றுக் கொண்டேன். அன்று அவர் தம் பூர்வ சரித்திரத்தை ஒளிவு மறைவு இல்லாமல் எனக்குத் தெரிவித்தார்.

நல்லமுத்து பிரபல கேடி. அவருக்குக் கீழே பல கேடிகள் இருந்தார்கள். பெரிய நிறுவனமாகவே அமைத்து, திருட்டு, கொள்ளை வழிப்பறி, ஜேப்படி எல்லாம் செய்து வந்தார். ஆனால் வெளிக்குத் தெரியாது. சாதாரண மனிதராகத்தான் இருந்து வந்தார். பெயருக்கு ஓர் இங்கிலீஷ் மருந்துக் கடை, ஒரு ஓட்டல், ஒரு கார் ரிப்பேர் ஷெட், நாலைந்து வெற்றிலைப் பாக்குக் கடைகள் எல்லாம் அவர் பெயரில் இருந்து வந்தன. சுமார் முப்பது வருஷ காலமாக இப்படியே 'தொழில்' நடந்து வந்திருக்கிறது. பல சோதனைகள், ஆபத்துக்களிலும் நல்லமுத்து மட்டும் இலக்காகாமல் தப்பி வந்தார். அவர் கூட்டாளிகளின் பெருந்தன்மை அப்படி. அவரை மூலஸ்தான தேவதை மாதிரி அமர்த்தி விட்டு, கஷ்ட நஷ்டங்களைத் தாமே ஏற்று வந்தார்கள். திட்டங்கள் வகுப்பதும், சிறையானவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு கொடுப்பதும், வழக்காட ஏற்பாடு செய்வதும் அவர்தான். கடந்த நாலைந்து வருஷங்களாக அந்தத் தொழில் அவருக்குக் கசந்து விட்டது. நல்லதோ, கெட்டதோ எத்தனை காலத்துக்குத் தான் தொடர்ந்து ஈடுபட்டிருக்க முடியும்? சகாக்கள் அவர் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தனர். நிறைய நிலபுலன்களையும், நாலைந்து டாக்சிகளையும் அவருக்கு உடைமைகளாகக் கொடுத்து, சென்னைக்கு அடுத்த பாக்கமொன்றில் பெரிய வீடும் கட்டிக் கொடுத்து, நல்லமுத்துப் பிள்ளையை நல்ல மனிதராக வாழ வசதி செய்தார்கள். அவருக்குக் குழந்தை குட்டி கிடையாது. தான தர்மம் என்று வாரி இறைப்பதை விட, தமக்குத் தெரிந்து வஞ்சிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது போல், நேரிடையாகவும் மறைமுகமாகவும் பெரும் பொருளுதவி செய்து வந்தார். அவர் தொழில் முறைக்காக ஆரம்பித்த பால் பண்ணையும், வீடு கட்டிக் கொடுக்கும் கான்டிராக்ட் அலுவலும் அமோகமாக வளர்ந்து, லாபத்தைக் குவித்தன. அவரிடம் பணி புரிபவர்கள் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தவர்கள். இது அவருக்குப் பெரும் குறை. ''என்னை ஒருவன் கூட வஞ்சிக்க மாட்டேன் என்கிறானே? பிறரை வஞ்சித்து வாழ்ந்த எனக்கு, அந்த அநுபவம், அந்த வேதனை என்ன என்பது தெரிய வேண்டாமா? எத்தனையோ நல்லவர்களை என் சகாக்கள் கொள்ளையடித்திருக்கிறார்கள். என்னை ஒருவனாவது — முன்பின் தெரியாத எவனாவது — வந்து கொள்ளையடிக்க மாட்டானா என்று ஏங்குகிறேன். அப்படியாவது நல்லவர் வரிசையில் பெயரளவுக்காவது இடம் பெறலாமா!'' என்று அடிக்கடி சொல்லுவார். அவர் மதிப்பை உயர்த்துகிற பேச்சாகத்தான் எனக்கு இது பட்டது. நியாயம் தானே?

நிலக் குத்தகைக்காரர்கள் மிக நாணயமாகக் கண்டு முதல் ஆனதும் உள்ள பங்கைக் கொண்டு அளந்து விடுவார்கள். டாக்சிக்காரர்கள் அன்றாடப் பணத்தைப் பாங்கியில் மறுநாள் கட்டி விட்டு, ரசீதைக் கொண்டு வந்து கொடுத்த பிறகே உணவு கொள்ளச் செல்வார்கள். மேஸ்திரிகளும், கொத்தனார்களும், வேலைகளை விரைவாக முடித்து விட்டு, எதிர்பார்த்த லாபத்தை விட அதிகமாகவே கொண்டு வருவார்கள். உள்ள ஊதியத்துக்கு மேல் ஒரு காசு வாங்க மாட்டார்கள் அவரிடம். அக்கம் பக்கத்தவர்கள், ''அவருக்கென்ன, ராஜயோகம், அவர் முக ராசிக்குத்தான் இதெல்லாம் நடக்கிறது'' என்று புகழ்ந்தார்கள். ''இந்த முகராசி யாருக்கு வேணும்?'' என்று வெறுத்துக் கொண்டார் நல்லமுத்துப் பிள்ளை.

இத்தகைய மனிதரிடம், ஓர் இளைஞன் நயவஞ்சகமாக நடந்து கொண்டிருக்கிறான் என்பதை அறிந்த போது எனக்கு உள்ளம் பதறியது.

அதுவும் மோகனா அப்படிச் செய்திருப்பவன்! மோகன் அனாதைப் பையன். நல்லமுத்து எனக்கு அளித்த தொகையை, தொழுநோய் நிவாரண நிலையத்துக்கும், ஓர் அனாதைப் பள்ளிக்கூடத்துக்கும், ஒரு பிரசவ விடுதிக்கும் பகிர்ந்து கொடுத்து விட்டேன். அந்த அனாதைப் பள்ளியில் படித்து வந்தவன் மோகன். உயர்நிலைத் தேர்வைத் தாண்டுவதற்கே மூன்று தடவைகள் படையெடுத்தான். மேலே படிக்க விரும்பாததால், நல்லமுத்துவிடமே வேலைக்கு அனுப்பி வைத்தேன். ஒரே ஆண்டில் அவர் நம்பிக்கைக்கு உரிய நிதி நிர்வாகியாகி விட்டான் மோகன். அவர் எந்தத் தொழிலையும் நேரிடையாகக் கவனிப்பது கிடையாது. அதற்கு அவசியமும் இல்லை. வருமானத்


கோவிந்தனுடைய புதியவீடு
"கேள்விப்பட்டீர்களா? கோவிந்தன் புதிய வீடு கட்டுகிறாராமே?"
செங்கற்களாலும், சுண்ணாம்புச் சாந்தாலும் சுவர் எழுப்பி, புத்தம் புதிய ஓடுகள் வேய்ந்து கட்டப்பட்ட கோவிந்தனுடைய புது வீட்டைப்பற்றி ஊரெங்கும் ஒரே பரபரப்பு.
"இதைக்கட்டி முடிக்க ரூ. 4,000/-செலவாகியது"
"நம்ப முடியவில்லையே! இவ்வளவு பணம் கோவிந்தனுக்கு எப்படிக் கிடைத்தது?"
"அவனுடைய ஆயுள் இன்ஷூரன்சுப் பாலிசியிலிருந்து கிடைத்தது. பாலிசி இந்த வருஷம் தான் முதிர்வடைந்தது"
கந்தன், ஒரு இளம் விவசாயி.
கோவிந்தனைப் போலவே தானும் ஒரு வீடு கட்டிக் கொள்ள தனக்குள்ளாகவே தீர்மானித்துக் கொண்டார். இதற்காக எல்.ஐ.சி. ஏஜண்ட் ஒருவரை நாடுகிறார்.
"நீங்கள் ஒரு ஆயுள் இன்ஷூரன்சுப் பாலிசி எடுப்பதின் மூலம் சில வருஷங்களுக்குப்பின் பெருந்தொகையொன்றைப் பெறமுடியும். எளிய, சுலபமான தவணைகளில் பிரீமியங்களைச் செலுத்தலாம்"
ஆயுள் இன்ஷூரன்சுப் பாலிசி ஒன்று எடுத்திருப்பதைப் பற்றி கந்தன் இன்று பெருமைப்படுகிறார். சில வருஷங்களுக்குப்பின் கோவிந்தனைப் போலவே கந்தனுக்கும் புத்தம் புதிய வீடு ஒன்று சொந்தமாகிவிடும்.
ஆதரவளிக்கும் கரங்கள் ஆயுள் இன்ஷூரன்சுக் கரங்களே!

ASP/LIC-85-TA

தொகைகளையெல்லாம் பாங்கியிலும், பணப் பெட்டியிலுமாகப் பங்கிடு செய்பவன் மோகன் தான். ரோஷக்காரன். கொள்கை அளவில், தன்னை மறத்தமிழன் என்று எண்ணி வரு பவன். அவனுக்கு, நேர்மையே தன் உடைமை என்கிற நம்பிக்கை உண்டு. அவனுக்கு இப் படிப் புத்தி போவானேன்?

நல்லமுத்துவின் மனைவிக்குக் கொஞ்சம் பொருளாசை உண்டு. கணவரின் தாராள மனப்பான்மை அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆனால், எதிர்த்துப் பேசவோ, செய்யவோ துணிவு இல்லை. மோகனுக்கு அவளிடம் தாயன்பும், தனி பக்தியும் இருந்து வந்தன.

நான் அடிக்கடி சென்னைக்குப் போய் வரு வேன். நல்லமுத்து வீட்டில் ஒரு வேளையாவது தங்கிச் சாப்பிட்டு விட்டுப் போகாமல் இருப்ப தில்லை. அவர் குடும்பம் நடத்துவதே தனி விசித்திரம்.

காய்கறிகளும் கனி வகைகளும் தோட்டம் நிறைய விளைந்து வரும். இருந்தாலும், கறி காய் விற்பவர் வீடு தேடி வந்தால் வேண்டா மென்று போகச் சொல்ல மாட்டார். ஒரு வீசை இரண்டு வீசை என்று வாங்கிக் கொண்டு சில்லறை நிரப்பி வைத்திருக்கும் பெட்டகத்தை — அது மேஜை மேல் இருக்கும்- காட்டி, 'உள்ள காசை எடுத்துப்போ' என்று சொல்லி விட்டு, உள்ளே போய் விடுவார்.

அவர் எந்தக் கடைக்குப் போய் எது வாங்கி னாலும் விலை கேட்பதில்லை. சொன்ன விலை யைக் கொடுத்து விட்டு, பில்லையும் பொருளை யும் வீட்டுக்கு அனுப்பி விடுங்கள் என்று சொல்லி விட்டுப் போவார். எந்த யாச கரையும் வெறுங்கையோடு அனுப்புவதில்லை. லஞ்சம் கொடுக்க மாட்டார்; அதனால் என்ன நஷ்டம் வந்தாலும் சரி. துணிந்து கேட்பவரிடம், ''வேண்டுமானால் அதோ பணப் பெட்டி இருக்கிறது; திருடிக்கொண்டு போ!'' என்பார். அப்படியே வைத்து விட்டு உள்ளே போயும் விடுவார். ஒருவருக்காவது திருட மனம் வர வேண்டுமே?

அவருக்கு மேலும் ஒரு குறை, தம்மிடம் உதவி பெறுபவர் மறக்காமல் திருப்பிக் கொடுத்து விடுகிறார்களே என்பதுதான்.


அத்தகையவருக்கு இப்பொழுது வேதனை ஏற்பட்டிருக்கிற தென்றால் அதிர்ச்சியாகத் தான் இருக்கிறது. இரண்டாவது கடிதத்தை எடுத்து மறுபடியும் படித்துப் பார்த்தேன்.

வக்கீல் ஐயாவுக்கு,

முந்தின கடிதத்தில் என் சாபக்கேடு விலகி விட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண் டேனே, அது வெறும் கானல் நீராகி விட் டது. நான் வாழ்நாள் முழுதும் வேதனை யும் மனக் குறையுமாகவே சங்கடப்பட்டுச் சாக வேண்டியவன்தான். யார் என்னை வஞ்சித்ததாக எண்ணி அகம் மகிழ்ந்தேனோ, அவன் என்னை வஞ்சிக்க வில்லை. யார் வஞ்சிக் கக் கூடாதோ, எவர் வஞ்சனையால் நான் பெருமைப்படவே முடியாதோ, அதற்கு நான் இப்போது இலக்காகி விட்டேன். நீங்கள் உடனே இங்கு வந்து ரமணர் ஆதியில் தங்கி விருந்த ஸ்கந்தாசிரமத்தில் சந்திக்கவும்.

பாவப் பிறவி முத்துத் தொண்டன்

நான் உடனே திருவண்ணாமலைக்குப் புறப் பட்டு விட்டேன்.



ஸ்கந்தாசிரமத்தை நான் அடையும்போது காலை எட்டு மணி. ரம்மியமான இடம். மலை மேல் அமைந்த சாந்தமான சிறு ஆசிரமம். சுற்றிலும் பசுமை விரிப்பாகச் சூழ்ந்த சோலை.

ஆசிரமத்துக்குள் சில வயோதிகர்கள் உட்கார்ந்திருந்தார்கள். எல்லாருமே காஷாய ஆடை அணிந்தவர்கள். நான் தயங்கித் தயங்கி நின்றேன். ''யார் வேணும்?'' ஒரு சாமி கேட்டது.

''மதராஸிலேயிருந்து நல்லமுத்துப்பிள்ளை என்று ஒருவர் வந்தாரா?'' என்றேன்.

அவர்களில் ஒருவர் சிரித்துக் கொண்டே, ''வக்கீல் ஐயாவுக்கு என்னைத் தெரிந்து கொள்ள முடியவில்லையா?'' என்றார்.

தாடி மீசை மண்டிய முகம். திருநீற்றுப் பூச்சு, காவியுடை, ருத்ராக்ஷம், ஜபமாலை— நான் திக்பிரமை பிடித்து நின்று விட்டேன்.

''என்ன பிள்ளை இது?''

''பிள்ளை இல்லை; மூத்துத் தொண்டன். ஆதியிலே இருட்டுத் தொண்டு; பிறகு இருத் தொண்டு; இப்போது நாட்டுத் தொண்டு; அறத் தொண்டு; அடியவர்க்குத் தொண்டு. சக்தி இழந்த சிவத்துக்கு இதுதானே கதி?''

''சரி, வாருங்கள். விவரமாகப் பேசுவோம்'' என்று சொல்லித் தோட்டத்துப் பக்கம் அழைத்துப் போனேன்.

அவர் சொன்னார்: ''வக்கீல் ஐயா! மோகன் மறைந்து போன மூணும் நாள் அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், என்னை இவ்வளவு காலம் 'நேரிய தமிழன்' என்று நம்பியிருந்ததற்கு வருந்துவதாகவும், புன்மைத் தொழில் புரிந்து ஈட்டிய செல்வத்தை என்பதை என் மனைவி மூலமாகவே அறிந்ததாகவும், 'இனி உங்கள் ஊதியத்தால் வயிறு வளர்க்க மாட்டேன். நான் எங்காவது நேர்மையாக உழைத்துப் பிழைத்துக் கொள்கிறேன்' என்றும் எழுதியிருந்தான். அத்துடன், 'உங்களிடம் ஊதியமாகப் பெற்ற பணம் அனைத்தையும் பாங்கியில் உங்கள் பெயரிலேயே கட்டி விட்டேன்' என்று ரசீதையும் அனுப்பியிருந்தான். பிறகுதான் எனக்குச் சந்தேகம் எழுந்தது. மோகனைத் தேடிப் பார்த்து வரச் சொன்னேன். ஆவடிப் பக்கம் ஒரு தோட்டவில் வேலை செய்வதாகத் தெரிந்தது. நான் நினைத்தபடி, அவன் ஏதும் எடுத்துக் கொண்டு போகவில்லை.''

''பின் அவ்வளவு செல்வத்தையும் யார் எடுத்துப் போனது?''

''அதுதான் ஆச்சரியம். என் மனைவியே தான் அவ்வளவையும் எடுத்துத் தன் தம்பி மூலம் இரகசியமாகச் சேமித்து வைத்துக் கொண்டு விட்டாள்.''


''நீங்கள் அந்த மோகனுக்கே கொடுத்து விட்டால் என்ன செய்வது? இதே பயம்தான் காரணமாக இருக்கும்.''

''அவசியம் இல்லையே. எல்லாச் சொத்தையும் அவள் பெயருக்கே எழுதி வைத்திருக்கிறேனே. இது அவளுக்கும் தெரிந்ததுதான். ஆனால், நான் அங்கு இருப்பதே அவளுக்கு வெறுப்பாக இருந்ததோ என்னவோ? இது வெளியானால், குத்தகைக்காரரோ, டாக்சிக்காரரோ ஒரு காசு அவளிடம் கொடுக்கமாட்டார்கள். அதற்காகத் திருத்தல யாத்திரை புறப்படுவதாக எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு, முழுப் பொறுப்பையும் என் மனைவியிடமே ஒப்படைத்திருப்பதாகவும் சொல்லி விட்டு வந்திருக்கிறேன். வக்கீல் ஐயா! என்னிடம் வேலைக்கு இருந்தவர்கள் எல்லாரும் திருடுவதற்குத் தயங்காதவர்கள். ஆனால் ஒருவர்கூட என்னை வஞ்சிக்கவில்லை. மேலும் என்னை வஞ்சிக்க வேண்டியவர்கள் வஞ்சிக்க வில்லை. என் மனைவி, நான் எத்தனையோ துன்பங்களிலும், வறுமையிலும் அவதிப்பட்ட போது எனக்கு உறுதுணையாக இருந்து வந்தவள் கேவலம் இருபதினாயிரம் ரூபாய்க்காகவா என்னை ஏமாற்றுவது? என்னை மட்டுமா? பெற்ற தாயைப் போல் பக்தியும் பரிவும் கொண்டிருந்த மோகனைத் திருடன் என்று பழி சுமத்தி, பெண்மையையே மாசுபடுத்தி விட்டாளே, சை! என் சாபக்கேடு என்னை இப்படிப் பழிவாங்க வேண்டாம்....''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் நல்லமுத்துப்பிள்ளை. ''வக்கீல் ஐயா! முன் போலவே என் குடும்பத்துக்கு உதவியாளராகவே இருந்து வாருங்கள். நான் உழைத்துச் சம்பாதித்த பணம் இதோ இருக்கிறது. ஐயாயிரம் ரூபாய். இதை மோகனுக்கு நீங்களே தரும் உதவியாக அளித்து, அவனை நல்ல நிலைக்குக் கொண்டு வாருங்கள். எனக்கு என் உழைப்புப் போதும். எல்லாம் துறந்தவனுக்கு வேறென்ன வேண்டும், வக்கீல் ஐயா?''

எனக்கு வணக்கம் செலுத்தி விட்டு, ஆசிரமத்துக்குள் சென்று விட்டார் அந்தத் தொண்டர்.


என்னால் எதுவுமே செய்யமுடியவில்லை. வகுப்புநேரங்களில்கூட அடிக்கடி கோபம் வந்துகொண்டிருந்தது.
ஆனந்த் அதைக் கவனித்துவிட்டுச் சொன்னான். தினமும் இரண்டு வேளை போர்ன்-வீடா அருந்தினால், பழைய நிலை வந்துவிடும் என்று.
அவனுடைய டாக்டரும் அதையேதான் சொன்னாராம். நானும் அதைக் கடைப்பிடித்தேன். விரைவில் குணமடைந்தேன்.
இப்பொழுது பழைய சக்தி வந்தது மட்டுமல்ல—ஐம்பது பேர்கொண்ட வகுப்பையும் எளிதாக சமாளிக்க முடிகிறது.
எல்லாம் போர்ன்-வீடா தந்த சக்தி.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURY'S SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் என் வேலையைச் செய்வதற்கு சக்தியளித்தது
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்



படித்துப் பாருங்கள்

இதயத்தில் ஓர் இடம்

'என்ன ஆச்சரியம் சார்! எல்லாம் சொல்லி வச்சாப்பலே நடக்கிறதே!' என்று எத்தனை தடவைகளில் ஆச்சரியப்பட்டிருக்கிறீர்கள்? அது மாதிரிதான் இந்தப் புத்தகத்தில் எல்லாம் சொல்லி வைத்தாற் போல் நடக்கிறது.

டாக்டர் அசோக் இதயத்திலே உஷாவைப் பதித்து வைத்திருந்தான். ஆனால் டாக்டர் குமாருக்கு உயிர் பிரியும் தறுவாயில் கொடுத்த வாக்கு காரணமாகச் சுமதியை மணம் புரிந்து கொண்டான் டாக்டர் அசோக். தன் உயிர்க் காதலியை மணக்க முடியாமல் போனதால் தான் இறந்து விட்டதாகக் கதை திரித்தான் அசோக். இவன் நடிப்புக்கு ஒத்தாசை செய்தான் சங்கர். காதலனைப் பிரிந்த உஷாவுக்குக் கண்கள் போய் விடுகின்றன. போய்த்தானே ஆக வேண்டும்? இல்லாவிட்டால் பெங்களூரில் போய் டாக்டர் அசோக்கை எப்படிச் சந்திப்பது? அதுமட்டுமல்ல டாக்டர் அசோக் பெங்களூரில் தன் மனைவி சுமதியை இழந்து விட்டுத் தனிக் கட்டையாக இருந்தான். அப்படி யிருந்தால்தானே இதயத்தில் ஓர் இடத்தில் வைத்துப் பூஜித்த காதலி உஷாவை மறுபடியும் அசோக் ஏற்றுக்கொள்ள முடியும்? சங்கரை மட்டும் தனியாகத் தவிக்க விட்டால் அழகா யிருக்குமா? ஆகவே நீலா என்ற அவனுடைய பழைய காதலியை அசோக் வீட்டில் அநாதையாக வளர விட்டுச் சங்கரோடு சேர்த்து வைத்தால்தானே கதையைச் சுபமாக முடிக்க முடியும்? இதயத்தில் ஓர் இடம் என்னும் இந்தக் கதையின் மூலமாக நம் இதயத்தில் ஓர் இடம் பிடிக்க முயன்றிருக்கிறார் ஆசிரியர். அவர் முயற்சி வெல்வதாக! —

ஆசிரியர்: ஏ. டி. ரங்கமணி. பிரசுரம்: ஸ்டார் பிரசுரம், சென்னை-5. விலை ரூ. 1—50.

பாட்டா அல்லது பாடகரா?

என்றுமுள்ள இன்னிசை அருமையான பாடகர்களைத் தோற்றுவிக்கிறதா அல்லது இசை வல்லுனர்களால் சங்கீதம் மேன்மையடைகிறதா?

இப்படி ஒரு கேள்வியை எழுப்பி விட்டுப் பதிலும் கூறியது பல தினங்களுக்கு முன்னால் வெளியான ஓர் ஆங்கிலத் திரைப் படம்— ''பாடகன் தான்; பாட்டல்ல!''

இத்தகைய பாடகர்களுள் ஒருவர் ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள். வேங்கடம் முதல் குமரி வரை உள்ள ஸ்தலங்களில் பெரும்பாலும் அவர் போகாத ஊர் இல்லை, தரிசிக்காத இறைவனும் இல்லை. இருந்த இடத்திலிருந்தபடியே நாம் அனைவரும் அந்தந்த க்ஷேத்திரங்களின் தெய்வங்களைத் தொழுது நெக்குருக உதவுகிறார். பக்திச் சுவையில் இலக்கிய நயமும் கலக்கிறது. பாலில் தேன் கலந்தாற் போல. **அமர காதலர்கள்** என்ற இவரது ஒரு நூலைத் தென்மொழி புத்தக டிரஸ்டின் ஆதரவுடன் திருநெல்வேலி எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை கம்பெனியார் வெளியிட்டுள்ளார்கள். எல்லாக் கட்டுரைகளுமே மிக நன்றாய்த்தான் இருக்கின்றன. என்றாலும் கல் எழுதி வைத்த கலை, கலை உலகில் களிறு, அழுத்தம் கொடுக்கும் அழகு ஆகியவற்றை உருவாக்குகையில் ஆசிரியர் — தமக்கு வழக்கமான பாதையிலேயே பேனாவை ஓட விடாமல் புது விதமான யுக்திகளைக் கையாண்டிருப்பதாலேயே சுவாரசியம் அதிகமாகிறது. இப்புத்தகத்தில் ஒரே ஒரு குறையைத்தான் நாம் காண்கிறோம். 'புகைப்படக் கலை ஒரு கலையே அல்ல' என்று ஒரே போடாகப் போடுகிறாரே ஆசிரியர், அதை மட்டும் நாம் ஒப்புக்கொள்ள முடியாது!

பிரசுரம்: எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, சென்னை—1, திருநெல்வேலி ஜங்ஷன் விலை: ரூ. 1—75.

அவசியம்தானா?

படித்துப் பாருங்கள் என்ற தலைப்பு கொடுத்திருந்தாலும் அனைவரும் படித்துப் பார்த்து நேரத்தை வீணாக்க வேண்டிய அவசியமில்லாத புத்தகங்களைப் பற்றியும் சொல்லித்தானே ஆக வேண்டியிருக்கிறது? குயிலன் பதிப்பகத்தாரின் **ஆண்மைக் குறைவும் அதன் நிவர்த்தியும்** என்ற புத்தகத்தின் மேலட்டையில் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று எழுதப்பட்டிருப்பதை மாற்றி ஆண்மைக் குறைவு உள்ளவர்களுக்கு மட்டும் என்று குறிப்பிடலாமே என்றால் அதனை யாரும் ஆட்சேபிக்கப் போவதில்லை. பின்னர், ஜன சமூகத்தின் அந்த மிகச் சிறிய சதவிகிதத்தினரும் வைத்தியரைக் கலந்தாலோசியாமல் சிகிச்சையில் இறங்கிவிடக் கூடாது என்று ஆசிரியரே வலியுறுத்திச் சொல்வதால் அத்தகையோர் இதனை வாசிப்பதாலும் பெரும் பயனேதும் அடைந்து விட முடியாது. அப்படியானால் இதனை எழுதி வெளியிடுவதுதான் எதற்கு? ஆங்கிலத்தில் எளிய, ரசமான முறையில் எழுதப்பட்ட விஞ்ஞான ரீதியான நூல்கள் பலவற்றைத் தமிழ்ப்படுத்த வேண்டும் என்ற உயர் நோக்கம் காரணமாயிருந்தால் அதற்கு அமீபா முதல் அணுகுண்டு வரையில் ஆயிரமாயிரம் விஷயங்கள் உள்ளனவே?

பிரசுரம்: குயிலன் பதிப்பகம், சென்னை-17 விலை ரூ. 2.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.



நாள்முழுதும் உல்லாசமாயிருக்க...

ஹிமாலயா புக்கே

டால்கம் பவுடர்

பூமாரி பொழிந்த பூரிப்பு... நீராடி முடிந்த நேரத்திலே... ஹிமாலயா புக்கே டால்கம் பவுடரின் அணைப்பு... ஆஹாஹா, குன்றாத நறுமணம், குளித்தெழுந்த குதூகலம் நாள் முழுதும், நாள் முழுதும்!

இன்று
டிக்கான
புதிய
டப்பாவிலே



குடும்பத்திலுள்ள யாவருக்கும் சாலச் சிறந்த டால்கம்.

டனிலுள்ள இராஸ்மிக் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது. HBP.5-X52 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

